368

பிரெஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயில்,
பிரெஸிடெண்ட் ஸ்னோ, பிரெஸிடெண்ட் டால்கம்
பௌடர் ஆகியவற்றை மிகச் சிறந்தவைகளாக
எனது அனுபவத்தில் கண்டுள்ளேன்.

Anjali Devi

ராதோட் டிரேடிங் கம்பெனி, சென்னை-1.

MADRAS

WHY FRET ABOUT YOUR FOUNTAIN PEN?

Used wherever good pens are used.

Manufactured for

THE PILOT PEN CO. (INDIA) LTD.

RED HILLS MADRAS.


When ASTHMA
attack is imminent
use
MULTIMIX
(ELIXIR)
EUPNEIC
AND
CARDIO TONIC
INDICATIONS
MULTIMIX
Indo-French Pharmaceutical Co.,
P. B. No. 1542.
MADRAS-1.


★ HINDUSTHAN'S
High grade
AERATED WATER BOTTLES
Available in 8, 10 & 12 oz. capacity
● Exceptionally strong
● Tested to stand 250 lbs. pressure
● Manufactured in completely automatic plant under the supervision of foreign experts.
HINDUSTHAN NATIONAL
GLASS MFG. CO., LTD.
2, Wellesley Place, Dalhousie Sq., Calcutta
Sole Agents for
South India:
The Hindusthan
Commercial Corporation
145, Mint St., Madras-1.

உமா

ஆசிரியர்: ஜீ. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 1	மே 1, 1953	விஜய ஹூ சித்திரை மீ

பொருளடக்கம்

ஆந்திர அரசியல் நிலை	(கார்ட்டூன்)	... 4
உதயம்	தலையங்கம்	... 5
எதிரொலி	...	... 7
சென்னை வரலாற்றில் இருவர்	...	... 10
காதலன்	வல்லிக்கண்ணன்	... 12
கவியரசிகள்	ம. பொ. சிவஞானம்	... 17
மிஸ் தேவகி	பக்தன்	... 19
உணர்ச்சி பொங்கட்டும்	கி. ஆ. பெ. விசுவநாதம்	... 37
என்ன பெயர்?	ய. மகாலிங்க சாஸ்திரிகள்	... 40
செட்டிநாடும் தமிழும்	சோம. லெ. இலக்குமணச் செட்டியார்	... 46
ஞானோதயம்	ஜெகசிற்பியன்	... 52
சக்களத்தி	ராசு	... 62
காலம் கடந்த கருணை	கே. ஆர். கௌஸல்யா	... 68
நல்ல காலம் பொறக்குது	சுரதா	... 77
திட்டம்	எஸ். டி. ஸ்ரீனிவாசன்	... 79
மெய்யன்பு	எல்லார்வி	... 86
மனிதன்	சினிமா விமர்சனம்	... 92

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

ஆந்திர அரசியல் நிலை



உதயம்

பசுந்தளிரும் வண்ண மலர்களும் தலையசைக்க, புள்ளினங்கள் இன்னிசை பாட, இனிய தென்றல் எங்கும் இன்ப நடனம் புரிய, தமிழகத்தில் இளவேனிற் காலம் அடியெடுத்து வைக்கும் இந்த அருமையான நேரத்தில் ''உமா'' பிறக்கிறது.

துயரங்களும், தொல்லைகளும் இன்று தமிழகத்தில் நீங்காது நிரந்தரம் பெற்று விட்டன. எந்தப் பக்கம் திரும்பினாலும் கவலையும், நம்பிக்கை யின்மையும் கலந்த முகங்களையே காண முடிகிறது. இதை மறைத்துப் பண்டைய பெருமை பேசுவதில் பயனில்லை.

ஆனால் திறன்படைத்த அறிஞர்கள் முனைந்து நின்று பாடுபட்டால் தொல்லைகளை நிச்சயம் விரட்டியடிக்க முடியும் என்று ராஜாஜி அரசாங்கம் நமக்கு நம்பிக்கை ஊட்டியது. 'இனித் தீராது' என்று தீர்மானிக்கப்பட்டு விட்ட பல வாழ்வுப் பிரச்னைகளை மிக வெற்றிகரமாகத் தீர்த்து, மக்கள் மனதிலே ராஜாஜி இன்பப் பாலை வார்த்தார். இந்த நம்பிக்கையின் அடித்தளத்திலே நின்று எதிர் காலத்தை உருவாக்கும் துணிவுடன் தான் 'உமா' உதயமாகிறது.

வாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்க்க, அறிஞர்கள் தரும் ஆலோசனைகளை ஏற்று உலகுக்கு அளிப்பது, தன்னால் இயன்ற அளவு முன்னின்று வாழ்வுப் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிப்பது, வேதனையடையும் தமிழர் உள்ளம் வெறி கொண்டு தறிகெட்டு ஓடாமல் தடுத்து, காந்தீய அடிப்படையில் மௌனமாகப் போராடுவது ஆகிய முறைகளில் தன் பாதையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது 'உமா'வின் எண்ணம்.

இலக்கியத் துறையில் உமாவின் குறிக்கோள்களைப் பற்றி முன்னதாக ஒன்றும் கூறிக்கொள்ள விரும்பவில்லை. ''வாழ்க்கையின் உண்மையான விமர்சனம்தான் கலை'' என்பது எங்களது தீர்மானம். ஒரேயடியாக லட்சியவாதம் பேசி பாமர மனிதனின் பிடிக்கு எட்டாமல் நின்று நாங்கள் கழைக்கூத்தாட்டம் செய்ய மாட்டோம். அதே போல மட்டரக இலக்கியக் குப்பைகளைப் பெருக்கி, சாக்கடையில் இறங்கிவிடவும் மாட்டோம். பாமர மக்களின் மத்தியிலே நின்று சலிப்புற்றுக் கிடக்கும் அவர்கள் மனத்திற்கு சாந்தியை அளிக்க முயற்சிப்போம், ஏக்கப் பெருமூச்சு விடும் அவர்களை புன்னகைப் பூக்க வைத்துப் பார்த்து மகிழ்ச்சியடைவோம். இத்துடன் முடிந்தவரை நற்பண்பை வளர்க்கும்புத்தி மதிகளை கட்டுரை — கதைகள் மூலம் அவர்களுக்கு அளிப்போம்.

இலக்கிய உலகத்தில் பளபளப்பான காகிதப் பூக்களை வைத்துப் பார்க்கும் சில மேனுட்டுப் பாதைகளை விட்டு அறவே ஒதுங்கி, எழிலும் மணமும் இணைந்த வாடாத இயற்கை மலர்களை உண்டுபண்ண முயற்சிப்போம். இந்த முயற்சிக்கு உண்மைக் கலைஞர்களின் உதவிகள்தான் முக்கியம். அதனுல் எழுத்தாளர் உலகில் பிரசித்தி பெற்றவர் வட்டாரத்தில் மட்டும் வளையவராமல், திறமையும் தகுதியும் எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து பயன் படுத்தவேண்டும் என்பது எங்கள் ஆவல். ஆகவே "யார் எழுதுகிருர்கள்", என்று கவனியாமல், "எப்படி இருக்கிறது அவர்கள் இலக்கியம்" என்று மட்டும் எடை போட்டு 'உமா'வில் விஷயங்கள் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அரசியல் துறையில் 'உமா'வின் அபிப்பிராயங்கள் திட்ட வட்டமானவை. கட்சி, இயக்க வேறுபாடின்றி சகலரும் ஒப்புக் கொள்ளும் தன்மைவாய்ந்தவை என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிரும்.

இந்தியா மொழிவாரியான இனங்களின் அரசுகளைக் கொண்ட கூட்டுக் குடியரசாக விளங்க வேண்டும். ஒவ்வொரு மொழிவாரி அரசும் சுய ஆட்சி பெற்றதாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே தமிழகத்தின் அரசியல் அமைக்கப் பட வேண்டும். இது எங்கள் எண்ணம்.

"சுய ஆட்சி" என்ற உடன் யாரும் பயப்படத் தேவையில்லை இந்தியப் பேரரசுடன் இணைந்த சுயாட்சித் தமிழகமே நமது லட்சியம். இந்தியாவைவிட்டு அறவே பிரிந்துவிட்ட "பாக்கிஸ்தானை"யும், இந்த "சுயாட்சித் தமிழக"த்தையும் வீணுக போட்டுக் குழப்பிக் கொண்டு அரசியல் வாதிகளும், பொது மக்களும் திணறவேண்டாம். தற்போது மத்திய அரசாங்கத்தில் குவிந்துக் கிடக்கும் அதிகாரங்களில் பலவற்றை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் தனது உள் நாட்டு விஷயங்களை சுதந்திரமாக தானே கவனிக்க வாய்ப்பு இருக்க வேண்டும், இதுதான் நாம் குறிப்பிடும் "சுய ஆட்சி"யின் தத்துவம். இந்த அடிப்படையில் தமிழகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவதற்கான பணிகளை 'உமா' தயங்காமல் செய்யும்.

புராணத்தில் ஒரு கதை உண்டு. பரமசிவன் திடீரென நீண்ட தவத்தில் ஆழ்ந்து விடுகிருர். அழிவுத் தொழிலை மேற்கொண்டுள்ள இறைவனின் இச்செயலால் உலகம் நிலைகுலைந்து விடுகிறது. தேவர்கள் இந்த நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக 'உமா'வை அனுப்புகின்றனர். அவள் மன்மதனின் துணை கொண்டு தன் பேரெழிலால் சிவனை மயக்கி தவத்திலிருந்து விழிப்படையச் செய்கிருள். பின்னர் உலகத்தின் நெருக்கடி தீருகிறது.

மக்களின் மனதைக் கவர்ந்த—பக்திக்குரியவள் அந்த "உமா" அவளைப்போல தமிழகத்தின் உறக்கத்தைக் கலைத்து, உணர்ச்சி பெறச் செய்து, சுயாட்சித் தமிழகத்தைப் பெற்றுத்தர நமது "உமா" புது மலர்ச்சியோடு புறப்பட்டுவிட்டாள்

எதிரொலி

மே தின விழா!

உலக மெங்குமுள்ள பாட்டாளி மக்கள் இன்று தங்கள் உரிமைத் திருநாளைக் கொண்டாடுகின்றனர். "ஒரு சிலரின் உல்லாச வாழ்வுக்காக யந்திரம் போல கால வரையறையின்றி உழைத்து மாயமாட்டோம். உழைப்பு நேரம் திட்டப்படுத்தப்பட வேண்டும்" என்று 1880-ம் ஆண்டு முதல் 1890-ம் ஆண்டு வரை அமரிக்கப் பாட்டாளி மக்கள் விட்டு, விட்டு பெருங் கிளர்ச்சி செய்தனர். 1886-ம் ஆண்டு **மே** மாதம் முதல் நாள் இந்தப் புரட்சியின் சக்தி உச்ச நிலையை அடைந்தது. பொது மக்களின் பரிபூரண ஆதரவுடன் பாட்டாளிகள் அன்று நடத்திய புரட்சி உலகப் பிரசித்திபெற்று விட்டது. அப்புரட்சி எழுப்பிய உரிமைக் குரல்தான் இன்று காய்த்துப் பழுத்து கனிந்து பலன் தந்துக்கொண்டிருக்கிறது. தினம் எட்டு மணி நேர வேலை, வாரத்தில் ஒரு நாள் ஓய்வு; அதிக நேரம் வேலை செய்தால் இரட்டிப்புக் கூலி என்றெல்லாம் இன்று நடைமுறையிலிருக்கும் நியதிகள், அன்று அமெரிக்காவில் எழுந்த மேதின உரிமைப் புரட்சியின் எதிரொலிதான்.

இந்த உரிமைத் திருநாளில் உலகப் பாட்டாளி மக்களின் மகிழ்ச்சியிலே நாமும் பங்கு கொள்ளுவோம். உலகத்தை நிர்மூலப்படுத்த ஒரு முனையில் நின்று ஆர்பரிக்கும் முதலாளித்துவ சக்தியையும், மற்றொரு முனையில் நின்று ரகளை செய்யும் கம்யூனிஸ வெறியையும், ஒரே நேரத்தில் தவிர்க்க—தரை மட்டமாக்க வேண்டுமானால், உலகம் பாட்டாளிகளின் நலனில் உடனடியாகக் கண் வைக்க வேண்டும். பாட்டாளிகளின் தோள் வலிமைதான் உலகத்தின் உயிர் மூச்சு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மே தினத்தில் இந்த உண்மையை உலகம் உணர வேண்டும் என்பதே நமது ஆவல்.

அடுத்த இதழில்...

நாமக்கல் கவிஞர், மாயாவி, கி. ரா. கோபாலன், சுகி, மகரம், பதி, ரா. பாலசுப்பிரமணியம், பூவை, எஸ். ஆறுமுகம், பி. கோதண்டராமன், சம்பந்தம், பாரதிமோகன்,

ஆகியோரின் எழுத்தோவியங்களுடன் இன்னும் பல புதிய அம்சங்களும் இடம் பெறுகின்றன.

டிராம் பிரச்னே!

சென்னை நகர வாகனங்களின் தொண்டுக்கிழமான டிராம் வண்டி திடீரென்று நின்று போனது பற்றி "ஐயோ போய் விட்டதே" என்று யாரும் கண்ணீர் விட்டுக் கதறவில்லை. தொலைந்ததே நல்லது என்று தான் பொது மக்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் டிராம் கம்பெனியின் ரீஸிவர் என்ற மகுடத்தைத் தைத் தரித்துக்கொண்டு நிற்கும் ஆசாமியின் ஆணவத்தையும், பயங்கர விஷமத்தனத்தையும், கவனிக்கும் பொழுதுதான் நெஞ்சு கொதிக்கிறது. நீண்ட நாட்களாக கம்பெனி நஷ்டத்தில் நடந்து வருகிறதாம். உண்மையைச் சொல்லி கம்பெனியை மூடினால் தொழிலாளிகள் நாசவேலையில் ஈடுபட்டுவிடுவார்களாம். அதற்காகத் திடீரென்று எவ்வித முன் எச்சரிக்கையுமின்றி கம்பெனி வாசலில் பூட்டு போட்டுவிட்டாராம். கிட்டத்தட்ட ஒரு தலை முறையாக உழைத்த பாட்டாளிகளின் உயிர்ப் பிரச்னை, ரீஸிவர் ப்ரூக்ஸுக்கு ஏதோ வேடிக்கையான விஷயமாகப்படுகிறதுபோலும். தொழிற் கோர்ட்டில் விசாரணையில் இருக்கும் கம்பெனியின் வழக்குகள் முடிவுக்கு வருவதற்குள், ப்ரூக்ஸ் எடுத்துள்ள இந்த ஆணவ நடவடிக்கை அரசாங்கத்துக்கு விடப்பட்ட ஒரு சவாலாகும்.

ரீஸிவர் **ப்ரூக்ஸ்** மீதும், கம்பெனியின் மாஜி கமர்ஷியல் மானேஜர் **பியர்ட்ஸில்** மீதும் இது சம்பந்தமாக வழக்கு நடைபெறுகிறது.

இந்த சமயத்தில் பொறுமையிழந்த சில தொழிலாளிகள் சிற்சில இடங்களில் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதறிந்து வருந்துகிறோம். சுயநலத்திற்காக பாட்டாளிகளை பலி கொடுக்கும் பலாத்காரவாதிகளின் சூழ்ச்சியில் டிராம் தொழிலாளிகள் சிக்கி ஏமாந்து விடக் கூடாது. சகல பொறுப்பையும் அரசாங்கத்திடம் விட்டு, அவர்கள் மூலம் தங்கள் வேதனைக்குப் பரிகாரம் தேடும் நன் முயற்சிதான் உண்மையான பலனைக் கொடுக்கும். இதை தொழிலாளிகள் மறந்துவிடக் கூடாது.

தமிழிசை விழா!

பத்து வருடங்களுக்கு முன்னால் தமிழையும் இசையையும் தனித்தனியே பிரித்து, தமிழ் வேறு, இசை வேறு என்று சிலர் தவருகக் கருதியதன் விளைவாக ஒரு பெரும் இயக்கமே உருவெடுத்ததல்லவா! அந்த இயக்கத்தின் தந்தையான ராஜா சர் அண்ணுமலை செட்டியாரின் கொள்கைகளை தமிழகத்தில் நீங்காது நிலை பெறச் செய்வது போல, தமிழிசை சங்கத்தார் அவருடைய பெயரால் "**அண்ணுமலை மன்றம்**" என்ற கலையழகு ததும்பும் கட்டிடம் ஒன்றை அமைத்து அதில் இவ் வருட இசை விழாவை நடத்தினர். இம்மன்றம் உருவாக முழுதும் முனைந்து உழைத்த இசைச் சங்கத் தலைவர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்களும், துணைத் தலைவர் ராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும் தமிழகத்தின் சரித்திரப் பாதையில் ஒரு அருமையான சின்னத்தை அமைத்து விட்டனர்.

தேவாரப் பண் பற்றிய ஆராய்ச்சி வழக்கம்போல இவ்வருட இசை விழாவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழரின் பரம்பரைச் செல்வத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் தன் பங்கை இசைச் சங்கம் பொறுப்புடன் ஆற்றி வருவது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அத்துடன் நின்றுவிடாது புதிய மூலதனத்தையும் தமிழ்க் களஞ்சியத்தில் சேர்க்க இசைச் சங்கம் பெரு முயற்சி யெடுக்க வேண்டும். இளம் கவிஞர்களை பல துறையிலும் ஊக்குவித்து ஏராளமான இசைப் பாடல்கள் வெளிவர வழி செய்ய வேண்டும்.

சித்தூர் தமிழர் போராட்டம்

சித்தூர் தமிழ்ப் பகுதிகளை தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கைக்காக சித்தூர் தமிழர்கள் திருத்தணிகையில் சாத்மீகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். எந்த வகையில் பார்த்தாலும் சித்தூர் தமிழர்களின் கோரிக்கையில் நியாயமிருப்பது புலப்படும். சித்தூர் வட்டாரம் தகருறுக்கு இடமில்லாத பிரதேசம் என்ற பாவனையில் மத்திய அரசாங்கம் விடுத்திருக்கும் அறிவிப்பு, வேண்டுமென்றே உண்மைக்கு போடப்படும் திரையாகும். இப்படி அர்த்தமின்றித் தகருறுகளைக் கிளப்பி, அதன் மூலம் மக்களின் அதிருப்தியைக் கிளறிவிட்டு, மக்களின் உணர்ச்சி கட்டுக்கடங்காமல் போகும் போது இறங்கிவரும் வழக்கத்தை மத்திய அரசாங்கம் கைவிட்டு, தீர ஆலோசித்தும், தீவிரமாகவும் சித்தூர் தமிழ்ப் பகுதி சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். இந்திய அரசு ஒரு ஜனநாயக அரசுதான் என்பதை இந்தப் பிரச்னையை மக்கள் விருப்பம்போல் தீர்ப்பதன் மூலம் மத்திய சர்க்கார் உலகுக்கு காண்பித்துவிட வேண்டும் என்பதே நம் ஆவல்.

அத்துடன் ஆந்திரம் பிரிவுபட்ட பின்னர் எஞ்சியுள்ள சென்னை மாகாணத்தை **தமிழரசு** (Tamil State) என்றே குறிப்பிட வேண்டும். சரித்திர, இலக்கிய, சிறப்புகள் பல கொண்ட தமிழகத்தை ஒரு அனுமதேய நாடாக, மத்திய சர்க்கார் கருதினால் அதைவிட தமிழருக்குச் செய்யும் அநீதி வேறில்லை. தமிழ் நாடெங்கும் பரவலாக, சித்தூர் தமிழ்ப் பகுதிப் பிரச்னைக்காகவும், சென்னை நகரம் 'தமிழரசு' (Tamil State) என்று அழைக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் தமிழ் மக்கள் சாத்மீக முறையில் கிளர்ச்சி செய்யவேண்டும். இந்த பிரச்னைகளில் கட்சி வேற்றுமை பாராட்டாது எல்லா தமிழ்த் தலைவர்களும் ஒருமித்து உழைப்பார்கள் என்று நம்புகிறோம்.

சென்னை வரலாற்றில் இருவர்...!

தமிழகத்தின் தலைநகரம் சந்தேகத்துக்கு இடமின்றி காப்பாற்றப்பட்டுவிட்டது. "மதருஸ் மனதே" என்று கருத்தற்றுக் கதறிய ஆந்திரக் கூக்குரல் ஓய்ந்துவிட்டது. ஆம், "சென்னை நகரம் தமிழருடையதே" என்பதை மத்திய அரசினர் உறுதிப்படுத்திவிட்டனர்.

இந்த சமயத்தில் "தலைநகரைக்காப்பாற்றியது யார்?" என்ற ஒரு சர்ச்சை அரசியல் வட்டாரத்தில் நடைபெற்று வருகின்றது.

"சென்னையைக் காப்பாற்றிய பெருமை தங்களுக்கே உண்டு என்று பலர் மார்தட்டிப் பேசுகின்றனர். "எங்கள் தலைவரும் — இயக்கமும் இல்லாமலிருந்தால் சென்னை பறிபோயிருக்கும்" என்று அனேகர் சங்கநாதம் செய்கின்றனர்.



இதில் தனித்தனியே யாரும் பெருமைப்படுவதைவிட, இவர்கள் எல்லோருடைய ஏகோபித்த உழைப்புதான் சென்னையைக் காப்பாற்றிற்று என்று கூறுவதே பொருத்தமானதாகும். தெலுங்கு பேசும் மக்களும் தாயகத்தை மறக்காமல் சென்னைப் பிரச்னையில் நம்முடன் முன்னணியில் நின்றது குறிப்பிடத்தக்க தாகும்.

சென்னை தமிழருடையதே என்பதில் தமிழனைப் பிறந்த யாருக்கும், எப்போதும் சந்தேகம் இருந்ததில்லை. மிக முக்கியமான நேரங்களில், சிலர் அக்கரையற்று, இந்தப் பிரச்னை சம்பந்தமாக அலட்சிய புத்தி காட்டினர் என்பதைத் தவிர யாரையும் குறை கூற முடியாது. ஆகவே சென்னை ஆந்திருக்குப் போகாமல் தமிழரிடமே தங்கிவிட்டதற்கு தமிழர் எல்லோருமே கட்சி, சாதி, சமய வேற்றுமையின்றி மகிழ்ச்சியடையலாம். என்றுலும் இந்த விஷயத்தில் இருவரைத்தான் நாம் முக்கியமாக நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்,

ஒருவர் முதலமைச்சர் **ராஜாஜி.** மற்றவர் அவருடைய தோழர் திரு. **ம. பொ. சிவஞானம்.**

இந்த சமயத்தில் ராஜாஜி முதலமைச்சராக இருந்தது தமிழ் மக்களின் அதிருஷ்டம். அதைவிட திருப்பதி விஷயத்

தில் கையை விரித்தது போல அல்லாமல் சென்னை விஷயத்தில் கண்டிப்பாக நடந்து கொண்டது பெரிய அதிருஷ்டம் என்றே கூறலாம்,

சென்னை விஷயத்தில் ராஜாஜி கடமையைச் செய்யத் தவறி இருந்தால் அவர்கூட தமிழ் மக்களின் கோபத்துக்கு ஆளாகி இருக்க வேண்டியதுதான். ஆம், சென்னையைக் காப்பாற்ற தமிழர்கள் ஒரு ஆவேசப் போராட்டத்தில் இறங்கத் தயாராய் இருந்தார்கள். நேருஜி தவறு செய்திருந்தால் அந்தப் பெரும் போர் மூண்டிருப்பது திண்ணம்.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு சில ஆந்திர வெறியர்கள் சென்னையைப் பறிக்க மும்முரமான தாக்குதலில் இறங்கி இருந்தனர். சென்னை நகரத்தில் தங்கள் செல்வாக்கைப் பெருக்க எத்தனையோ குறுக்கு வழிகளைக் கையாண்டுக் கொண்டிருந்தனர். பெரும் அளவில் ஆந்திரரை சென்னையில் பல பாகங்களில் குடியேற்றினர். லாரிகளில் ஏறிக்கொண்டு "மதரூஸ் மனதே" என்று கூச்சலிட்டுப் பவனி வந்தனர்.

அப்போதெல்லாம் பெரிய பெரிய தலைவர்களும், இயக்கத்தினரும், கட்சியினரும் சும்மா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த சமயம் ஏமாந்திருந்தால் இன்று சென்னை நமக்குக் கிட்டியிருக்குமா என்பது சந்தேகமே.

அப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில்தான் தமிழரசுக் கழகத் தலைவர், திரு. ம. பொ. சிவஞானம் தமது இயக்கத்துடன் கச்சை கட்டி நின்று தமிழ் நாடெங்கும் புயல் வேகத்



தில் பிரச்சாரம் செய்து, தமிழர்களுக்கு விழிப்பை அளித்து எதிர்த் தாக்குதல் செய்தார்.

அன்று நிலை குலைந்த ஆந்திரப் படை மறுபடியும் உருவாகவே இல்லை, திரு. ம. பொ. சி. யின் போராட்டத்தால் தான் அன்று "ராஜாஜியே சம்மதித்தாலும் சரி, இடைக்கால ஏற்பாடாகவும் சென்னையில் ஆந்திரருக்கு இடங்கொடோம்" என்று மூன்று கோடித் தமிழர்களும் ஒரே குரலில் முழக்கம் செய்தனர்.

ஆம், சென்னையைக் காக்கும் கிளர்ச்சியைத் துவக்கி அதில் தமிழ் மக்களை ஈடுபடுத்தினர் திரு. **ம. பொ. சி.** இறுதி வெற்றி கிடைக்கும் வரை கிளர்ச்சியைத் தமது அறிவால், ஆற்றலால் சிறப்புற நடத்தி நமக்கு வெற்றியை வாங்கியளித்தார் **ராஜாஜி.** சென்னை பற்றிய வரலாற்றில் இந்த இருவருக்கும் தனியிடமுண்டு. அதைஎவரும் மறுக்கமுடியாது.

காதலன்

வல்லிக்கண்ணன்

காதல் என்பது மகத்தான சக்தி. காதலை வளர்க்கும் நம்பிக்கை இருக்கிறவரை, சாதாரண மனிதர்களையும் மகத்தான காரியங்களைச் செய்து முடிக்கும்படி தூண்டுகிறது. காதலின் பயனைப் பெற முடியாது என்று தோன்றுகிறபோது அதி திறமைசாலியைக்கூடக் கையாலாகாதவனாக, வாழ்க்கையில் தோல்வியுற்றவனாக மாற்றி விடுகிறது. இதை விளக்க எத்தனையோ கதைகள் இருக்கலாம். அவற்றில் எல்லாம் தனித் தன்மை பெற்று விளங்குவது 'ஷிரீன் பர்ஹாட்' காதல் கதை.

கூவித் திரியும் குயிலின் குஞ்சு குஸ்ரு ஷிரீன். பாரசீகத்து ரோஜா மலர் அவள்.

பிறை நிலவு அவள் முகம். இளம் நிலவு அவள் சிரிப்பு. முழு நிலா தான் அவள் முகமே.

நிலவொளியைத் திரட்டி எழில்மிகு உருவமாய் அமைத்தது போன்றது அவள் உடல்.

மானின் துள்ளல் மிளிரும் அவள் நடையில். அன்னத்தின் அழகு காட்டும் அவள் அசைவு. மின்னலின் துவள்தல் பயிலும் அவள் இடை. சூலுண்ட மேகத்தின் செறிவு காட்டும் அவள் கூந்தல். கடலின் ஆழம் காட்டும் கண்கள் வெள்ளிகளின் ஒளியைக் கூட்டும்.

அழகியரில் தனி அழகி ஷிரீன். ரோஜாக்களிடையே இனிமை நிறைந்து திகழ்ந்த ரோஜாத்தி அவள்.

அவளைக் கண்டு மயங்கினர் இளைஞர்கள். மோகித்தனர் முதியோர். அவள் கண்ணின் பணியை ஏற்று விண்ணையும் சாடிடத் துணிவோம் எனத் துடித்தவர் சிலர். ஆகவே, ஆண் உள்ளத்தை வசிகரித்த காந்தம் அவள்.

அவள் மனதைக் கவர்ந்தவன் ஒருவன் உண்டு. அவன்தான் பர்ஹட்.

அவன் ஒரு சிற்பி. கல்லிலே அழகைப் படைக்கும் பிரமன், உலவிடும் அழகுக் கவிதையைக் கண்டு உள்ளம் பறிகொடுத்ததில் வியப்பு இல்லை.

களிவெறிக் கானம் இசைத்துத் திரிந்த புல்புல் ஷிரீன். கவலையற்று அவளோடு காதல் வாழ்வு வாழ விரும்பிய துணை அவன். இருவர் வாழ்வும் இணையிலா இன்பக் காவியமாக விளங்கியிருக்கும் — விதி அந்

நாட்டு மன்னனின் உருவில் முளைத்திரா விட்டால்!

கள்ள நெஞ்சுக் கோட்டான் அம் மன்னன் காதலைக் கொன்றுவிடத் திட்டமிட்டான்.

அதனால் காதலரைப் பிரிக்கச் சதி செய்தான். துணையைத் துரத்திவிட்டு, இன்பக் குயிலியைத் தான் அணைய ஆசை கொண்டது அக் காமப் பூனை.

சிற்பி பர்ஹட் செய்து முடிக்க இயலாத கடுமையான வேலையை அவனுக்கு இடத் துணிந்தான் மன்னன். பெய்ஸிட்டுன் மலையைக் குடைந்து, கால்வாய் வெட்டி, அதன் கரைகளில் அற்புதச் சிற்பங்களை அமைக்கும்படி ஏவினான் மன்னன்.

பர்ஹட் அந்நாட்டின் பிரஜை. மன்னனின் ஏவலை நிறைவேற்ற வேண்டியது அவன் கடமை.

'இதைச் செய்ய முடியுமா?' என்று கவலையுடன் கேட்டாள் ஷிரீன்.

'கலங்காதே அன்பே. உன் காதல் எனக்கு பலம் தரும். உன் நினைப்பு எனக்குத் துணை நிற்கும். உன் கண்களின் மின்னொளி என் உள்ளத்தில் உற்சாகமும், கை விரல்களில் உணர்வின் வேகமும் புகுத்தும். அவ்வேலையைச் செய்து முடிப்பேன்' என்றான் பர்ஹட்.

'கடமை முடிவடைய எவ்வளவு காலமாயினும், உனக்காக நான் காத்திருப்பேன் பர்ஹட்' என்றாள் அழகி.

'வேலையைச் சிக்கிரம் முடிக்க இந்நினைவே தூண்டுதலாக அமையும், ஷிரீன்' என்ருன் அவன்.

எனினும் இருவர் இதயத்திலும் வேதனை குமையாமல் இல்லை. பொங்கி வந்த பெருமூச்சு அச் சுமையைக் கரைத்து விடவா செய்யும்?

* * *

கருமமே கண்ணுயினன் பர்ஹட்.

பகலில்லை, இரவில்லை; ஒளியில்லை, இருள் இல்லை; அமுத நிலவோ, இரவின் கண்கள் போன்ற விண்மீன்களின் வெளிச்சமோ — கவலையில்லை. புற உலக் கவலை இன்றி—இடப்பட்ட பணியை முடித்தாக வேண்டுமே என்ற ஒரே கவலையோடு—உழைத்தான் அவன், ஓயாது உழைத்தான்.

தென்றல் ஷிரீனின் ஸ்பரிச இனிமையைச் சொல்லும். கூவிடும் புல்புல் அவளது குரலின் நயத்தை நினைவு படுத்தும். மலர்கள் அவள் மேனி வனப்பை மனசில் பதிக்கும். இரவும் தனிமையும் அவனை அழகியின் பசியனுய் மாற்றும்; பித்தேற்றும்.

காற்றின் சலசலப்பு 'ஷிரீன்-ஷிரீன்' என்னும். இலைகளின் சரசரப்பு அவள் மெல்லுடை உரசலைப் புலப்படுத்தும். ஆவலுடன் திரும்பிப் பார்ப்பான் பர்ஹட். ஏமாற்றமே துணை நிற்கும். அதை மறைக்க வேலையில் கவனம் செலுத்துவான். கல்லிடை மோதிய சிற்றுளி சிரிக்கும் 'ஷிரீன்....ஷிரீன்' என ஒலி சிந்தி.

அவள் நினைப்பு அவனுக்கு ஊக்கம் அளித்தது. அவள் வாக்கு அவனுக்கு உறுதி தந்தது. அவளுடன் இன்ப வாழ்வு என்ற எண்ணம் அவன் விரல்களுக்கு வேகம் கொடுத்தது.

அவன் உழைத்தான்.... உழைத்தான்.... ஓயாது, ஒழியாது, உழைத்துக் கொண்டே இருந்தான்.

நாட்கள் தேய்ந்தன. மாதங்கள் தேய்ந்தன. வருஷங்கள் தேய்ந்தன. மலையின் பகுதியும் தேய்ந்து, தேய்ந்து அவன் உழைப்புக்கும் உறுதிக்கும் வணக்கம் தெரிவித்தன.

வருஷங்கள் வளர்ந்தன காலக் கரையிலே கலந்து மறைந்தன.

மலையைக் குடைந்ததனுல், கால்வாயும் வளர்ந்தது. அங்கு தெளிந்த நீர் சலசலத்தது. அதன் கரைகளிலே அழகு அரும்பியது. அற்புதம் மலர்ந்தது. கற்களில் கலையாய் கனிந்தன சிற்பியின் உள்ளமும் உழைப்பும்.

அந்த இடம் அழகின் களஞ்சியம். கலையின் கருவூலம். மனித உழைப்பின்—உறுதியின்—உயர் பீடம். காதலின் காணிக்கை. பர்ஹட் அமைத்த அற்புதக் கொலு அது.

காலக் கணக்கை மறந்து விட்டான் அவன். ஓடி மறைந்த ஆண்டுகளின் எண்ணிக்கை அவனுக்குத் தெரியாது.

'எவ்வளவு காலம் ஆகியிருந்தால் எனன! எத்தனை ஆண்டுகள் போயிருந்தால் தான் என்ன? என்னுல் முடிக்க இயலாது என மன்னன் எண்ணிய வேலையை முடித்து விட்டேன். எனக்காகக் காத்திருப்பாள் எனது அருமை ஷிரீன். இனி அவளும் நானும் வாழ்வதை எவரே தடுக்க இயலும்?' என்று நினைத்தான் பர்ஹட். தன் சிருஷ்டிகளைக் கண்டு மகிழ்ச்சியுடன் நின்ருன்.

ஷிரீனின் நினைவு நிறைந்து நின்றது அவன் உள்ளத்தில். காதலின் நினைப்பு இனித்தது அவன் மனதில்.

அப்போது கூனி என வந்து சேர்ந்தாள் ஒரு கிழவி. மறலி யின் மாற்று உரு அவள்! மன்னனின் கைக்கூலி அவள்.

பர்ஹட் அமைத்திருந்த அற்புதங்களைப் பார்த்தாள். அவனைப் பார்த்தாள். முகத்தைச் சோகமாக்கி, சொல்லிலே துயரம் தேக்கி, கம்மிய குரலில் சொன்னாள் :

'உம். எல்லாம் வீணாச்சு. உன் ஆசைக் கோட்டை மண்ணாச்சு. இப்படி நேரும் என்று யாருக்குத் தான் தெரியும்?'

'என்ன, என்ன?' என்று பதறினான் பர்ஹட்.

'உனக்காகக் காத்திருந்தாள். காத்திருந்தாள், இவ்வளவு காலமாகக் காத்திருந்தாள், மது நிறைந்து வருகையில் மதுக் கிண்ணம் உடைந்தது போல், கடைசியில் இப்படி ஆச்சு. விதி படுத்துகிறதுக்கு யாரை நொந்து என்ன செய்ய?' என்று புலம்பினாள் வஞ்சக நெஞ்சினள்.

'என்ன என்ன?' என்று பதறினான் அவன். 'சீக்கிரம் சொல்லேன்!'

'ஷிரீன் செத்துப் போனாள். உன் முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே அவளுக்கு' என்று நீலிக் கண்ணீர் வடித்து நடித்தாள் கிழவி.

'ஆங்!' எனக் கதறினான் பர்ஹட். அவன் இதயம் வெடித்து விடும் போலிருந்தது.

'ஷிரீன்!' எனக் கூவினான் அவன். 'ஷிரீன், ஷிரீன்!'

மலை எதிர்க்குரல் கொடுத்தது 'ஷிரீன்.... ஷிரீன்' என்று. காற்று ஏந்திச் சென்றது 'ஷிரீன் — ஷிரீன்' எனும் அழைப்பை. வான்வெளி ஏற்றுப் பின்னணி இசைத்தது 'ஷிரீன்—ஷிரீன்!' என்று.

'காத்திருந்தாய்; போய்விட்டாய். காத்திருந்தேன்; வருகின்றேன்' என்றான் காதலன். கல்லிலே கலையை உயிர்ப்பித்த கையுளியை ஓங்கி வீசினான் மேலே. வானை நோக்கி 'ஷிரீன், ஷிரீன்' எனக் கத்தினான்.

பறவை என உயர்ந்து சென்ற உளி வேகமாய் வந்தது. மார்பை அதற்கு இலக்காக்கிக் காட்டினான் பர்ஹட். பாய்ந்து பதிந்தது அது. சிறு பாறைமீது நின்ற பர்ஹட் நீரோடையைப் பார்த்தான். அதிலே ஷிரீனின் சிரிப்பைக் கேட்டான். 'ஷிரீன்!' என்று கூவி வீழ்ந்தான். செத்தான்.

வெற்றிச் சிரிப்புடன் கிழவி திரும்பினாள். நடந்ததைக் கேட்டுச் சிரித்தான் கல்நெஞ்ச மன்னன்.

'ஷிரீனிடம் சொல்லு. அவள் மனம் மாறட்டும்!' என்றான் அவன்.

நடந்ததைக் கேட்டாள் ஷிரீன். பேசினாள் இல்லை. கண்ணீரும் வடிக்கவில்லை. துயரம் பேய்ப்பிடியாய் அவள் இதயத்தைப் பற்றியது. நெஞ்சு வெடிக்க, அவள் உயிரும் பிரிந்தது.

மன்னனின் வஞ்சகத்தால் செத்தான் பர்ஹட். அவன் செத்ததற்காகச் செத்தாள் அழகி ஷிரீன். எனவே, காதலுக்காகச் செத்தார்கள் இரண்டு பேரும்.

WHEN YOU WORSHIP

OFFER HARATHI WITH

PACKED AND SOLD IN ALUMINIUM UTENSILS AND CARD BOARD BOXES.

SOLD EVERYWHERE

QUALITY PAINTING

FOR

SIGN BOARDS

BY

R. M. SAMY

ENAMEL SIGN BOARDS SPECIALIST

232, GOVINDAPPA NAICKEN STREET,

Opp: (ARYA BHAVAN) MADRAS.

★ கவியரசிகள் ★

ம. பொ. சிவஞானம்

புலமைக்குப் பெயர் பெற்றது தமிழகம். ஆண்கள் மட்டுமல்ல, அணங்குகளும் தமிழ்ப் புலமையில் தலைசிறந்து விளங்கினர். கடல்சூழ் உலகில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், தனி மனிதனுக்கும் சரி, மனித சமுதாயத்திற்கும் சரி, வாழும் முறை வகுத்தவர்கள் ஆண்களாகவே இருப்பர். அரசோச்சிய சக்கரவர்த்தினிகளைப் பெற்ற இங்கிலாந்து கூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் பெண்களுக்கேயன்றி, ஆண்-பெண் இரு சாராருக்கும், ஏன்? உலக சமுதாயம் முழுவதுக்குமே வாழும் முறை வகுத்த பெருமை ஔவை பெருமாட்டிக்கே உண்டு. ஔவையாரைப் போன்று அவர் காலத்தில் மொழிப் புலமை பெற்ற பெண்ணொருத்தி வேங்கடத்துக்கு வெளியே உலக நாடுகள் எதிலும் இருந்ததில்லை. நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம் ஆகிய சங்க இலக்கியங்களி லெல்லாம் ஔவையார் எழுதிய பாடல்கள் பல காணப்படுகின்றன. தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தியுரை போன்ற இலக்கண நூற்களிலும் ஔவையாரின் பாடல்கள் கையாளப் பட்டுள்ளன. பிள்ளைகள் முதல், முதியோர் வரை எல்லோரும் படித்து பயன் பெறக்கூடிய நீதி நூல்கள் பலவும் எளிய தமிழில் .இனிய பொருளில் ஔவையார் இயற்றித் தந்திருக்கிறார்,

ஔவை காலத்திலும் அதற்கு முன்னும்பின்னும் மொழிப் புலமை பெற்ற பெருமாட்டிகள் பலர், தமிழகத்தில் பிறந்து, வாழ்ந்து, மறைந்திருக்கின்றனர். இதற்கு இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உண்டு.

பாண்டி நாட்டை ஆண்ட பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு என்பாள் எழுதிய ஒரு பாட்டு புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது. இந்த ஒரு பாடலின் மூலமே அவ்வம் மையார் புலவர் உலகில் இற வாப் புகழ் பெற்று விளங்கு கிறார்.

பறம்பு மலையாண்ட பாரி வேந்தன் பெற்றெடுத்த அங் கவை, சங்கவை என்ற இரு மங்கையரும் மொழிப் புலமை யில் சிறந்து விளங்கினர்.

அரசருடைய மனைவி-மக்களே யன்றி, அவர்தம் செவிலித் தாயரும் செந்தமிழ்ப் புலமை யில் சிறந்து விளங்கினர் என்ப தற்குக் காவற் பெண்டு என்ற செவிலித்தாயொருத்தி எழுதிய புறநானூற்றுப் பாடல் சான்று கூறுகிறது. இப்பெண்பாற் புல வர், சோழன் போர்வைக்கோப் பெருநற் கிள்ளியின் செவி லித் தாயெனத் தெரிகிறது. இவர் பாடிய பாடல் தமிழ் மக் களின் வீரத்தை விளக்குவ தாகும்.

மற்றும் சாதாரணக் குடிமக்க ளாகிய மலையில் வாழும் எயி னர் - குறவர், நிலத்திலேயே நிலைத்து வாழும் குயவர் முத லிய நாகரிகம் அடையாத சாதி யினரிலும் பெண்பாற் புலவர் பலர் தோன்றியிருக்கின்றனர். பேய் மகள் இளவெயினி குற மகள் இளவெயினி, வெறி பாடிய காமக்கண்ணி யார், வெண்ணிக் குயத்தியார் ஆகிய பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் பலவற்றைப் புறநானூற்றில் படிக்கிறோம்.

நச்செள்ளையார் என்ற ஒரு பெண்பாலார் சேரலாதன் என் னும் மன்னனைப் பாடி தமது அணிகலன்களுக்காக ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசும் அவனிடம் பரிசு பெற்றிருக்கிறார். அப்பாட்டு பதிற்றுப்பத்துள் வரும் ஆறும்பத்து முழுமையும் ஆகும். இவர், காக்கை கரைந் தமையைச் சிறப்பித்துப் பாடிய தால் "காக்கைப் பாடினியார்" என்ற மற்றொரு பெயரும் பெற் றார்.

சங்க காலத்தில் மட்டுமன்றி, புராணகாலத்திலும் பெண்பாற் புலவர்கள் பலர் பிறந்திருக்கின் றனர். வில்லிபுத்தூர் ஆண்டா ளின் புலமையை அறியாதார் யாரே! காரைக்கால் அம்மை யார் கவிதைகளைப் படியாதார் யாரே! தமிழருடைய மதக் கொள்கையை உருவகப் படுத் தினால் அவ்வுருவத்தின் இரு கண்களாக அமைவர் காரைக் கால் அம்மையாரும், ஆண்டா ளும். ஆம், சைவ உலகில் காரைக்கால் அம்மையாரும், வைணவ உலகில் ஆண்டாளும் சாகா வரம் பெற்ற கவிச் சக் கரவர்த்தினிகளாவர்.

சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியும் செந்தமிழில் புல மைப் பெற்றவளே. வேனிற் காதையிலும், புறஞ்சேரி யிறுத்த காதையிலும் தன்னைப் பிரிந்த கோவலனுக்கு மாதவி எழுதி அனுப்பும் ஏடுகள் அவளு டைய செந்தமிழ்ப் புலமையைக் கூறும் செய்திகளாகும்.

இன்றைய தமிழகத்தில் சமு தாயத்திற்கு நீதி வகுக்க ஒரு ஔவை இல்லை, சைவத்தின் புகழ் பாட ஒரு காரைக்கால் அம்மையார் இல்லை, வைண வத்தின்பெருமைபாடஒரு ஆண் டாள் இல்லை. சமூக-சமயத் துறையில் மட்டுமல்ல, அரசியல் பொருளாதார இயக்கங்களி லும் கவிதைப் பகுதி இருள் மயந்தான். எதிர்காலத் தமி ழகமேனும் கடந்த காலத் தமிழ கத்திலிருந்த பெண்ணினத்தின் பெருமையைப் பின்பற்றுமாக!

மிஸ்-தேவகி

பக்தன்

நடராஜா மில்ஸின் சொந்தக்காரரான பரமேஸ்வரம் பிள்ளை தனது நிர்வாகப் பொருப்பில் இருந்து விலகிக் கொண்டு அந்த ஸ்தானத்தில் புதல்வன் நடராஜனை உட்கார வைத்தார். காலேஜ் படிப்பை M. A. பட்டம் வாங்கியதுடன் நிறுத்திக் கொண்டு வீண் பொழுது போக்கிக் கொண்டிருந்த நடராஜனும் மறுக்காமல் மில்லின் நிர்வாகத்தை மேற்கொண்டான்.

சகல சம்பத்தும் நிறையப் பெற்ற நடராஜனின் பெற்றோருக்கு ஒரு கவலை. இருபத்தைந்து வயது நிரம்பப்பெற்ற தங்கள் பிள்ளைக்கு தாம் விரும்பியபடி கல்யாணம் செய்து பார்க்க முடியவில்லையே என்ற கவலைதான். நடராஜன் தன் பெற்றோரின் வற்புறுத்தல்களுக்கு உட்படாமல் "எனக்கு இஷ்டமான சமயம் கல்யாணம் செய்துக் கொள்வேன்" என பதில் சொல்லி வந்தான்.

மில்லின் நிர்வாகப் பொருப்பை ஏற்றுக்கொண்டால் அவன் மனம் மாறக்கூடும் என நினைத்துத்தான் நடராஜனிடம் நிர்வாகப் பொருப்பை ஒப்படைத்தனர் அவனுடைய பெற்றோர்.

* * *

நடராஜன் மில்லின் நிர்வாகப் பொருப்பை ஏற்றுக்கொண்டு நான்கு நாட்களே தான் ஆகியது. இன்னும் சரிவர ஆபீஸ் விவகாரங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. பரமேஸ்வரம் பிள்ளை தனக்கு காரியதரிசியாகவும் ஆபீஸ் டைப்பிஸ்டாகவும் தேவகி என்ற பெண்ணை வேலைக்கு அமர்த்தியிருந்தார்.

T.T.M.

தேவகி நல்ல அழகி. சிறுவயதின்போதே தாயை இழந்த அவள் சுமாரான அந்தஸ்து உள்ளவள். அவளின் தந்தை சுந்தரம் பிள்ளை மளிகை வியாபாரம் செய்து நொடித்துப் போனவர். அவர் வீடுவாசலை விற்றுதேவகியைப் படிக்கவைத்தார். த்ன்குடும்ப நிலையை எல்லாம் மனதில் பதித்து அக்கரையுடன்படித்துத் தேறி பி.ஏ. பட்டம், வாங்கினாள். தேவகியின் தந்தை அவளை பரமேஸ்வரம் பிள்ளையிடம்அழைத்துச்சென்று தன் நிலையைப்பற்றி சொல்லி தேவகிக்கு ஏதாவது மில்லில் வேலை போட்டுத் தரும்படி வேண்டிக்கொண்டார். பரமேஸ்வரம் பிள்ளை மறுக்காமல் தன் ஆபீஸில் தனக்குகீழ் தனது அந்தரங்க காரியதரிசியாக அவளை நியமனம் செய்தார். மாதம் ரூ. 150 சம்பளமும் போட்டுத் தந்தார். தேவகிக்கு ஒரு இளைய சகோதரன். ஹைஸ்கூல்

படிப்பை முடித்துவிட்டு அவனும் வேலை தேடிக் கொண்டிருந்தான். தனது வருமானத்தைக் கொண்டு மிகவும் சிக்கனமாக தந்தை, சகோதரனுடன் குடும்பத்தை நடத்தி வந்தாள் தேவகி.

தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பான வேலையை பரமேஸ்வரம் பிள்ளைக்கு திருப்திப்படும்படி செய்து முடித்து அவரின் மதிப்புக்கும் பாராட்டுதலுக்கும் ஆளாகியிருந்தாள். புரொப்ரைட்டரிடம் நெருங்கிப் பழகும் காரியதரிசியான அவளிடம் அந்த ஆபீஸில் வேலை செய்யும் தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளை உட்பட குமாஸ்தாக்கள் பத்து பேரும், மதிப்பு, மரியாதை கொடுத்துப் பழகுவார்கள். தேவகி அனுவசியமாக யாரிடமும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் 'தான் உண்டு தன் வேலை உண்டு' என இருப்பாள்.

புரொப்ரைட்டரைப் பார்க்க வருபவர்கள் முதலில் தேவகியின் மேஜைப் பக்கம் வந்து அவளின் அனுமதிபெற்ற பின்பு தான் உள்ளே சென்று பார்க்கலாம்.

* * *

நடராஜன் வழக்கம்போல் 10 மணிக்கு ஆபீஸுக்கு வந்தான். குமாஸ்தாக்கள் சுறுசுறுப்புடன் வேலை செய்தபடி இருந்தனர். அவர்களை எல்லாம் மேலோட்டமாக கவனித்தபடி நேரே தனது அறைக்குச் சென்று அமர்ந்து கொண்டான். அந்த ஆபீஸில் தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளை ஒருவர்தான் நடராஜனுக்கு முன்பே பரிச்சயமானவர். மற்றவர்கள் எல்லோரும் நடராஜனுக்கு புதிது. இனிமேல் பழகினல்தான் தெரியவரும். நடராஜனைக் கண்டதும் தேவகி எழுந்து முறைப்படி 'குட்மார்னிங் சார்' என்றாள். நடராஜன் கவனிக்கவில்லை. வந்த மூன்று நான்கு நாட்களாக உடன்வரும் தன் தந்தையுடன் மில்லைச் சுற்றி வளைய வரத்தான் அவனுக்கு சமயமிருந்தது. தேவகியையும் அவன் சரிவர கவனிக்கவில்லை. சுழல் நாற்காலியில் ஒய்யாரமாகச் சாய்ந்தபடி மேஜை மேல் வைக்கப்பட்டிருந்த தபால்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். தேவகி டைப் செய்தவாறு இடையில் நடராஜனை கவனித்தாள். தற்செயலாய் நடராஜன் நிமிர்ந்து தேவகியைக் கவனித்தான். தன் இருப்பிடத்திலிருந்து எழுந்து தேவகியின் மேஜைப் பக்கம் வந்து நின்றான்,

தேவகி தன் மேஜையின்மேல் ஒருபக்கம் 'புதுமைப்பித்தனின்' சிறுகதைத் தொகுதி ஒன்றை வைத்திருந்தாள். நடராஜன் அதை எடுத்துப் பிரித்துப்பார்த்தான். தேவகி உதட்டைக் கடித்துக் கொண்டாள்!

"இது சிறு கதைப் புத்தகமா....?" என கேட்டான்.

புத்தகம் வைத்திருந்ததற்காக தன்னை கோபிப்பாளே, என எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேவகி சற்றுத் தயங்கிய குரலில் "ஆமாம் ஸார்" என தலையாட்டினுள்.

"நாவல்கள் எல்லாம் பிடிக்காதோ....?" எனக் கேட்டான். நடராஜன் கோபிக்காமல் மேற்கொண்டு பேச்சை வளர்க்கவே "என்னவோ எனக்கு சிறுகதைகள் படிப்பதில் பிரியம்" என துணிவுடன் பதில் தந்தாள்.

"ஹூம்.... சரிதான்....!" என புத்தகத்தை புரட்டியபடி ஹாலின் பக்கம் நகர்ந்தான் நடராஜன். முன்பக்கம்

இருந்த குமாஸ்தாவின் மேஜை யருகில் சென்று நின்று கவனித் தான். மரியாதைக்கு எழுந்து நின்றார் அந்த குமாஸ்தா. நட ராஜன் அவரை உட்காரும்படி சைகை செய்து விட்டு மற்ற குமாஸ்தாக்களை எல்லாம் கவ னித்தான். அந்தகுமாஸ்தாவுக்கு தாம் காலையில் கொண்டு வந்த 'பிளிட்ஸ்' பத்திரிகையை மேஜையில்- அதுவும் நடராஜ னின் பார்வையில் படும்படி வைத்திருந்தது அப்போதுதான் ஞாபகம் வந்தது! வேலை செய் வதைவிட்டு அந்தபேப்பரை எப் படி எடுத்து ஒளிப்பது! என முழித்துக் கொண்டிருந்தார்! அதற்குள் நடராஜன் அந்த பத் திரிகையை எடுத்துப் பிரித்தபடி ''உங்களுக்கு பிடித்தமானது 'பிளிட்ஸ்,ஸா?'' எனக் கேட் டான்.

அந்த குமாஸ்தா எழுந்து அசட்டுச் சிரிப்புடன் தலையை தடவிவிட்டுக் கொண்டு மெது வாக ''ஆமாம் ஸார்....!'' என் றார். நடராஜன் ''சரிதான்'' என்று பத்திரிகையை மேஜைமேல் போட்டுவிட்டு அடுத்த மேஜைப் பக்கம் சென்று மற்றொரு குமாஸ்தா வைப் பார்த்து ''நீங்கள் ஒன் றும் படிக்கும் வழக்கம் இல் லையா....?'' என கேட்டான்.

''படிப்பதுதான் ஸார். முன்பு எல்லாம் ஆபீஸுக்கு பத்திரி கைகள் ஆபீஸ் செலவில் வந்து கொண்டிருந்தன. இப்போது அவைகளை வரவழைப்பதில்லை. நின்றுவிட்டன....!'' என்று தனது வெகுநாளைய இலவசப் படிப்பின் குறையை லாவகமாக துணிந்து சொல்லிவிட்டார் அந்த குமாஸ்தா.

''அப்படியா....? என்ன னென்ன பத்திரிகைகள் வந்துக் கொண்டிருந்தன....?'' என கேட்டு வைத்தான் நடராஜன்.

அவ்வளவுதான்....! இன்றைய தமிழ்நாட்டு பிரபல வார மாத சஞ்சிகைகளின் பற்பல பெயர் களும் அந்த ஹாலில் எதிரொ லித்தது! எல்லா குமாஸ்தாக் களும் தங்களுக்கு அதுசமயம் ஞாபகம் வந்த பத்திரிகையின் பெயரை எல்லாம் ஒப்புவித் தனர்! எல்லாரும் சமன் இல்லா மல் நடராஜனிடம் ஆஜர் ஆனார்கள்!

நடராஜன் அவர்களை எல்லாம் கவனித்துவிட்டு பின்பு ''ஹும்.... அவை எல்லாம் நின்று விட்டதாக்கும்....?'' என்று கேட்டான்.

''ஆமாம் ஸார்....!'' என பல குரல்கள் பதில் தந்தன.

''சரி வரவழைக்கலாம்'' என முனகியபடி தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளையின் மேஜை யின் பக்கம் சென்று அவரிடம் ''இதற்கு முன்பு ஆபீஸுக்கு என்னனென்ன பத்திரிகைகள் வந்து கொண்டிருந்தனவோ அவைகளை மட்டும் வரவழையுங் கள்.'' என சொல்லிக் கொண் டிருந்தான்.

''புரொப்ரைட்டர் என்றால் இப்படி அல்லவா சோஷலாக இருக்க வேண்டும். இதற்குத் தான் கிழம் கட்டைகள் போய் நிர்வாகத்துக்கு இளைஞர்கள் வரவேண்டுமென்பது....!'' என ஒருவர்க்கொருவர் பேசிக் கொண்டனர்.

நடராஜன் குமாஸ்தாக்கள் பக்கம் திரும்பி ஏதோ பேச விரும்பியவனாய் தொண்டை யைக் கனைத்தான். எல்லோரும் நடராஜனைக் கவனித்தனர்.

''நான் சொல்வதை உங்க ளின் நலனுக்காக கவனம் வைத் துக்கொள்ளுங்கள்! முன்போல் வழக்கப்படி மாத வார சஞ்சி கைகள் வரும். அவைகளையோ

அல்லது மற்ற பிரத்தியேக மான பத்திரிகைகளேயோ ஆபீஸ் ஓய்வு நேரம் தவிர வேலை நேரங்களில் யார் கையிலாவது பார்த்தேன்? அவ்வளவுதான். தயா தாட்சண்ய மில்லாமல் அதே நேரத்தில் அந்த நபரின் சீட்டு கிழிந்துவிடும்! ஞாபக மிருக்கட்டும்! இது என்ன ஆபீஸ் என நினைத்தீர்களா இல்லை ஏதாவது வாசகசாலை என நினைத்துக் கொண்டீர்களா....? ஆல் ரைட் போய் அவரவர்கள் வேலையைக் கவனியுங்கள்........'' என சமாதானமாக ஆரம்பித்த பேச்சை அனல்கக்க இரைந்து பேசிவிட்டு மடமட வென தன் அறைக்குப் போய் விட்டான்!

தலைமை குமாஸ்தா எல்லோரையும் பார்த்தார். நடராஜனின் எதிர்பாராத தாக்குதலில் அதிர்ந்து போயிருந்தனர்! தேவகி சிலையாக நின்றுவிட்டாள். அவளால் நடராஜனை புரிந்துகொள்ள முடியவில்லை!

தலைமை குமாஸ்தா, மேஜை யருகில் நின்று கொண்டிருந்த தேவகியைப் பார்த்து ''என்ன தேவகி, ஆளை சரிவர புரிந்து கொள்ளாமல் சூழ்ந்துகொண்டு அரட்டை அடித்தீர்களே. பார்த்தாயா! பசுப்போல் இருந்தவன் புலிபோல் உறுமியதை! பாவம் எல்லோருக்கும் ஒரு கலக்கம்....! இன்னும் கொஞ்ச நாட்கள் போனல் பழய கிழவனுர் எவ்வளவோ மேல் எனத் தோன்றும். இனி மேலாவது ஆழமறிந்து காலை விடுங்கள்....!'' என்றார் மெதுவான குரலில்.

தேவகி தெளிவடைந்து அவரிடம் மெதுவாகத் திரும்பி நடராஜன் ஆபீஸ் அறையைக் கவனித்து விட்டு ''ஏன் ஸார்.... நானும் வந்த இரண்டு மூன்று தினங்களாக நபரைக் கவனித்துக்கொண்டு வருகின்றேன். மனுஷனுக்கு நிமிஷத்துக்கு நிமிஷம் குணபாவம் மாறிக் கொண்டே இருக்கின்றது. ஏதாவது மூளைக் கோளாரோ?'' எனக்கேட்டு வைத்தாள்.

பதிலுக்கு தன் வாயில் விரலை வைத்து ''உஸ்.... இப்படி அசட்டுத்தனமாய் எதுவும் மற்றவர்களிடம் உளறி வைக்காதே! காதில் கேட்டால் தொலைத்து விடுவான்'' என்றார்.

டெலிபோன் மணி அடிக்கவும் தேவகி பேசுவதைவிட்டு தன் இடத்திற்கு விரைந்து சென்று கவனித்தாள். போனில் பேசி முடித்த நடராஜன் ஆபீஸ் பைல்களை எல்லாம் ஒவ்வொன்ருக எடுக்கச் சொல்லி பார்வையிட்டான். தேவகி அவன் பக்கம் மணிக் கணக்கில் நின்று அவன் சந்தேகங்களுக்கு விளக்கம் விபரம் எல்லாம் சொல்லி அலுத்துப் போனுள். அவளுக்கு இடுப்பும் கால்களும் கடுத்தன. நடராஜன் அவளின் சிரமத்தைக்

கவனியாமல் 'அதை எடு இதை எடு, அது எங்கே....இது எங்கே' என ஆபீஸ் விவகார சம்பந்தப்பட்ட பைல்களை எல்லாம் எடுக்கச் சொல்லி பார்த்துக் கொண்டிருந்தான். கடியாரம் மணி ஒன்று அடித்து ஓய்ந்தது. தேவகியைப் பார்த்து "நான் மத்தியானத்துக்கு மேல் ஆபீஸுக்கு வர மாட்டேன். முக்கிய விஷயம் ஏதாவது இருக்கும் பட்சத்தில் பங்களாவுக்கு போன் செய்.... என்ன....?" என சொல்லிவிட்டு புறப்பட்டான்.

* * *

மறுநாள் ஆபீஸ் அலுவல் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

வழக்கப்படி மணி 10 அடிக்கவும் நடராஜனின் கார் ஹார்ன் சத்தம் கேட்டது. அவன் வரவைக் கண்ட குமாஸ்தாக்கள் குனிந்த தலை நிமிராமல் வேலை பார்த்தனர். நடராஜன் தன் அறையில் சென்று அமர்ந்தான். வந்ததும் வராததுமாக தேவகிக்கு வேலை வைத்தான். முந்தின நாள் பார்க்காமல் விட்டுவைத்த பைல்களை எல்லாம் எடுக்கச் சொன்னான்.

தேவகி, அவன் பார்வைக்கு மில்லின் வரவுசெலவு அயிட்டங்களில் ஒரு பகுதியை காட்டினாள். நடராஜன் "சகல ரிஜிஸ்டரையும் நான் பார்த்தாக வேண்டும். எடுத்து வை!" என தேவகிக்கு உத்தரவிட்டான்.

அவள் தயங்கியபடி "அது எல்லாம் வந்து ....மானேஜிங் டைரக்டர் .... பெரியவர்.... எனக்கு கண்டிப்பாகச் சொல்லி இருக்கின்றார். அவர் அனுமதி பெற்றுக் கொண்டு வந்து........" என முடிக்கவில்லை.

நடராஜன் சீறி விழுந்தான்.

"பெரியவருக்கு நீ அவ்வளவு நம்பிக்கையான மனுஷியோ ....?" என அவளின் பேச்சில் குறுக்கிட்டு இரைந்தான், நடராஜன் போட்ட சத்தம்

அந்த ஆபீஸ் அறையே எதிரொலித்தது.

தேவகி அவன் அப்படி திடீரென கோபிப்பான் என எதிர்பார்க்கவில்லை! அவன் திடீர் தாக்குதலில் பதறிப் பயந்து போனாள்! பின்பு மெதுவாக "இல்லை சார்.... உங்களை நான் வந்து அப்படி...."

"ஷட்.... அப். விளக்கம் தேவையில்லை போகலாம்...." என கத்தினான். தேவகி தன் இருப்பிடத்தில் போய் அமர்ந்து கொண்டாள்.

ஆபீஸ் கடியாரம் மணி 12 அடித்து ஓய்ந்தது. நடராஜன் தன் கைக் கடியாரத்தைக் கவனித்துவிட்டு நிமிர்ந்து தேவகியைப் பார்த்தான். தேவகியும் வேலையின் இடையே நிமிர்ந்து நடராஜனைப் பார்த்தாள்.

"வந்து, உங்கள் பெயர் என்ன....?"

தேவகி எதிர்பார்க்காத—சம்பந்தமில்லாத கேள்வி! ஒரு கணம் தயங்கிவிட்டு சிறிது நாணத்துடன் "தேவகி ஸார்...." என பதில் தந்தாள்.

"ஓ சரிதான்.... பெயர் மறந்து மறந்து போகிறது. இருக்கட்டும்....வந்து, எனக்கு மத்தியான சாப்பாட்டை இங்கு அனுப்பி வைக்கும்படி பங்களாவுக்கு போன் செய்துவிடு!" என்றான்.

"சரி ஸார்...." என பதில் தந்தாள் தேவகி.

பங்களாவிலிருந்து கிடைத்த பதிலைக்கேட்டு "ஸார் உங்களை வீட்டிற்கு வரச் சொல்லுகிறார்கள்....!" என்றாள் தேவகி.

நடராஜன் பதில் தராமல் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். தேவகி மறுபடியும்,

"ஸார் உங்களை வீட்டிற்கு வரச் சொல்கிறார்கள்...." என்றாள். நடராஜன் நிமிர்ந்து அவளைப் பார்த்து அலுத்துக் கொண்டு "நான் உன்னிடம் என்ன சொன்னேன்....?" என்றான்.

"சாப்பாட்டை இங்கே அனுப்பி வைக்கும்படிக்கு....".

"அதைத்தானே நீ போனில் சொல்லிவிட வேண்டும். பதிலுக்கு என்ன ஆர்குமெண்ட் செய்து கொண்டிருக்கிறாய்!" என்றான் கோபத்துடன்.

தேவகி சட்டென போனில் பதில் தந்துவிட்டு பெருமூச்சு விட்டாள். தன் இடத்தில் வந்து உட்கார்ந்து அவனைக் கவனித்துவிட்டு "சேச்சே.... இவனிடம் அதிகநாள் வேலை பார்க்க முடியாது போலிருக்கிறதே....! ஹெட்கிளார்க் சொன்னது போல் பெரியவர் எவ்வளவோ மேல்.... இது என்ன சுத்த முசுடு.... எதற்கெடுத்தாலும் சீறிக்கொண்டு.... சை....!" என மனதுள் சபித்துக் கொண்டாள். மணி ஒன்று அடிக்க பத்து நிமிஷங்கள் இருந்தது. குமாஸ்தாக்களுக்கு வேலை ஓடவில்லை. சாப்பாட்டு நேரம்! எல்லோரின் கவனமும் அவரவர்கள் டிபன் செட்டுகளின் பேரில் இருந்தது. நடராஜன் தன் அறையிலிருந்து புறப்படாததால் மற்றவர்கள் அசையவில்லை! மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர்.

மணி ஒன்று அடித்து ஓய்ந்தது. ஹாலில் இருந்த குமாஸ்தாக்கள் அனைவரும் தேவகியைக் கவனித்தனர். ஒரு குமாஸ்தா தேவகியைப் பார்த்து 'நடராஜன் சாப்பிடப் போகவில்லையா....?' என சைகை செய்து கேட்டார்.

தேவகி பதிலுக்கு உதட்டைப் பிதுக்கினுள்!

நடராஜன் எழுந்து சோம்பல் முறித்தவனுய் தேவகியின் மேஜைப் பக்கம் வந்து நின்று ஹாலைக் கவனித்தான். பின்பு தலைமை குமாஸ்தாவைப் பார்த்து "டயம் ஆகிவிட்டதே! சாப்பிடப் போகச் சொல்லுங்கள்" என சொல்லிவிட்டு திரும்ப தன் இடத்தில் சென்று அமர்ந்து கொண்டான். குமாஸ்தாக்கள் சாப்பாட்டு அறைக்கு எழுந்து சென்றனர். நடராஜன் தேவகியைப் பார்த்து "சாப்பிடப் போகவில்லையா....?" என கேட்டான்.

"போகணும் ஸார்...." என பதில் தந்தாள்.

டெலிபோன் மணி அடித்தது. தேவகி எடுத்துப் பேசினுள்.

"ஸார் உங்கள் தாயார் பேசுகின்ருர்கள்.... சாப்பிட வீட்டுக்கு வரச் சொல்கின்ருர்கள்" எனச் சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர்பார்த்தாள்.

"டாம்....! எல்லாம் சுத்த நான்சென்ஸுகள்!" என கத்தி மேஜையை ஒரு உதை விட்டு தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான்! போனில் கேட்பதற்குப் பதில் சொல்ல வேண்டும். நடராஜனிடம் மறுமுறை கேட்க பயம்! இடையே தேவகி தவித்தாள். சிறிது துணிவுடன் "ஸார் போனில் கேட்கின்ருர்கள் என்ன சொல்லட்டும்....?" என கேட்டு வைத்தாள்.

"சாப்பாடு அனுப்பி வைத்தால் வைக்கட்டும், இல்லாவிட்டால் சாப்பாட்டுக்காக வரப் போவதில்லை எனச் சொல்லிவிடு" என்று இரைந்தான். அவன் சொன்னதை அப்படியே போனில் ஒப்புவித்தாள் தேவகி!

"ஸார், சாப்பாட்டை அனுப்பி வைக்கிருர்களாம்!" என போனில் வந்த பதிலைச் சொன்னுள்.

"பசியால் செத்து உயிர் போன பின்பு சாப்பாடு வரட்டும்!" என சொல்லிவிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டான். தேவகி சாப்பிடப்போகலாமா என தயங்கினுள்.

"மிஸ் தேவகி...."

"என்ன ஸார்...."

"இங்கே இருக்கும் காண்டீனில் நல்ல டிபன் கிடைக்குமா....?"

"நேரமாகி விட்டது சார்.... இது நேரம் எல்லாம் காலியாகி விட்டிருக்கும்! இருந்தாலும் காண்டீனில் அவ்வளவு நன்ருக இருக்காது" என பதில் தந்தாள்.

"சரிதான். ஏன் சாப்பிடப் போகவில்லை....?"

"போகணும் ஸார், பசியில்லை, அதனுல் பிறகு சாப்பிட்டுக் கொள்ளலாமென இருக்கின்றேன்."

"எனக்கு பசி அதிகமாக இருக்கிறது. வீட்டிலிருந்து சாப்பாடு வர நேரமாகலாம். ஒரு காரியம் செய்யலாம். தற்சமயம் என்ன டிபன் கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என நடராஜன் கேட்டான்.

நடராஜன் தனது டிபனைப் பற்றிக் கேட்கவும் தேவகிக்கு ஆச்சரியமாக இருந்தது!

"கொஞ்சம் தயிர்சாதம் தான் கொண்டு வந்திருக்கிறேன்!" என்ருள்.

நடராஜன் தாழ்வான குரலில் "தற்சமயம் உங்களுடைய டிபனை சாப்பிட்டுக் கொள்ளு கிறேன். எனக்கு வரும் சாப் பாட்டை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்! "என்றான்

தேவகியின் நிலை எக்கச் சக்க மாகிவிட்டது! 'தனது டிபனைத் தருவதா வேண்டாமா என தயங்கினாள். "ஆனால் உங் களுக்குத் தயிர் சாதம் பிடிக் குமா?' என கேட்டுவைத்தாள்!

"இப்போதுள்ள பசிக்கு எல்லாம் பிடித்துக்கொள்ளும்!" என சொல்லிவிட்டு தயார் ஆனான்.

மேலும் தேவகிக்கு மறுத்துப் பேசத் தோன்றாததால் டிபன் பாத்திரத்தை எடுத்து அவன் மேஜை மீது வைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறி னாள்!

* * *

ஆபீஸ் அறையில் பேசிக் கொண்டிருக்கும் நடராஜனை யும், தேவகியையும் பற்றி இரு அரட்டைக்கலி குமாஸ்தாக் கள் டிபன் சாப்பிட்டபடி வம்பு பேசிக்கொண்டிருந்தனர்!

தேவகி அறைக்குள் நுழைய வும், அரட்டையடிப்புக்கு முற் றுப்புள்ளி வைத்துவிட்டு எல் லோரும் தேவகியைக் கவனித் தனர். வெறும் கையுடன் வந்த தேவகி தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளையின் பக்கம் சென்று சோர்வுடன் அமர்ந் தாள்,

"என்ன தேவகி இன்று டிபன் ஒன்றும் கொண்டு வரவில் லையா....! கொஞ்சம் முன்னால் சொல்லியிருக்கக் கூடாதா....? நான் உனக்கு எடுத்து வைத் திருப்பேனே!" என அனுதா பத்துடன் விசாரித்தார். குமாஸ் தாக்கள் தங்கள் சொந்த விவ காரங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர், தேவகியைக் கவனிக்காமல்.

தேவகி மெதுவாக ராமசாமிப் பிள்ளையிடம், நடராஜன் தனது டிபனை வாங்கிக்கொண்ட விப ரத்தைச் சொன்னாள்.

ராமசாமிப் பிள்ளை சிரித்த படி "சரிதான் அப்படியானால் உங்க அப்பாவிடம் விபரத்தைச் சொல்லி வைக்கிறேன்" என் றார்.

"போங்க ஸார். உங்களிடம்

"நான் அழகான ஏரோப்பிளேனில் அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்ய இருந்ததை அம்மா கெடுத்து விட் டாள்...."

"ஏன், போக வேண்டாமென்று தடுத்து விட்டாளா?"

"இல்லை.... அதற்குள் என்னை தூக் கத்திலிருந்து எழுப்பி விட்டாள்"

வந்து நான் சொன்னேன் பாருங்கள்....! 'பசியாக இருக்கின்றது' என வாங்கிக்கொண்டார். வாய்விட்டுக் கேட்கும் சமயம் எப்படி சார் முடியாது எனச் சொல்வது....?''

''ஆமா, இன்று காலையிலிருந்து உன்னை இரண்டுமூன்று தடவை சத்தம் போட்டானே.... ஏன்....? நானே பயந்து போனேன். அவன் போட்ட கூச்சலைப் பார்க்கும்போது உன் சீட்டைக் கிழித்து விடுவானோ என்றுகூட நினைத்தேன்!''

"ஆமாம் ஸார்.... நான்கூட அப்படித்தான் பயந்து போனேன்! மனுஷனுக்கு வேளைக்கு ஒரு குணம் வருகிறது. அதுதான் நேற்றே உங்களிடம் கேட்டேனே 'ஸ்குரூ லூஸோ' என!''

''என்னிடம் கேட்பதை அவனிடமே கேட்டுவிடு!'' என சிரித்து ஓய்ந்துவிட்டு ''அது போகட்டும். கோபித்தான் என டிபன் கொடுத்து 'காக்காய்' பிடித்துவிட்டாய் ஆசாமியை!''

''ஹூம். குருவி பிடிக்கின்றீர்கள் போங்க சார்!'' என அவரைச் செல்லமாகக் கோபித்துவிட்டு தனியாக இருந்த மேஜையருகில் சென்று உட்கார்ந்து ஒரு பத்திரிகையை எடுத்து பிரித்தாள். ஆபீஸ் பையன் எவர் ஸில்வர் டிபன் காரியருடன் உள்ளே நுழைந்தான்! தேவகியின் முன்பு வைத்துவிட்டு ''உங்களிடம் கொடுக்கும்படி சொல்லி அனுப்பினார்!'' என சொல்லிவிட்டுச் சென்றான்.

நேரமாகிவிட்டதால் எல்லோரும் சென்றுவிட்டனர்.

தேவகி வந்ததும் நடராஜன் அவளைப் பார்த்து "உங்கள் டிபன் நன்றாக இருந்தது....'' என்றான்.

தேவகி அவன் பாராட்டுதலுக்கு தனது நன்றியை தெரிவிக்கத்தெரியாமல் திணறினாள். பின்பு நடராஜன் ''நீங்கள் சாப்பிட்டீர்கள் அல்லவா....? என விசாரித்தான்.

''ஆமாம் சார்....'' என நாணத்துடன் பதில்தந்தாள். பிற்பகல் வேலை ஆரம்பமாயிற்று.

நடராஜன் தன் வேலையின் பேரில் கவனமானான். மணி நான்கு அடித்து ஓய்ந்தது. இடையே அந்த மூன்று மணி நேரமும் நடராஜன் எழுதுவதும் பைலைப் புரட்டுவதுமாக இருந்தானே தவிர தேவகியைப் பார்க்கவோ பேசவோ இல்லை! ஊமை போல் இருந்தான். தேவகிக்கு அவன் பேசாமல் இருப்பது என்னவோ போலிருந்தது!

கடைசியாக தேவகி டைப் அடித்து நீட்டிய கடிதங்களில் கையெழுத்துப் போட்டு விட்டு தேவகியிடம் கூட ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட்டான். அவன்பேசாமல் போவதைக் கவனித்துவிட்டு தேவகி பெருமூச்சு விட்டுவிட்டு தன் நாற்காலியில் ஓய்ந்து உட்கார்ந்தாள்.

* * *

தேவகிக்கு நடராஜனைப்பற்றி சிந்தனை! வேலை ஓடவில்லை. அவளால் நடராஜனைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. கொஞ்ச நேரம் சுபாவமாக சிரித்துப் பேசுபவன், பிறகு திடீரென கோபப்படுகிறான் – சில சமயம் அதிக மரியாதையுடன் நடந்து கொள்ளுகின்றான். அவனைப் பற்றி ஒரு தீர்மானத்தில் எடைபோட்டு வைக்க முடியவில்லை தேவகியால்!

நடராஜனை தேவகி முதல் நாளில் பார்த்தபோதே அவள் மனம் பேதலித்து விட்டது! அவளையறியாமல் அவள் உள்ளத்தில் அவனைப் பற்றி ஒரு பாசம் வளர்ந்தது. அதை தேவகி உணர்ந்துதானிருந்தாள். தன்னுள் முளைவிடும் அந்த அபிலாசையை அறவே ஒழித்துவிட முயன்று வந்தாள் 'தனது நிலை அந்தஸ்து எங்கே, மில் சொந்தக்காரனும் லட்சாதிபதியுமான நடராஜன் எங்கே.?' மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தை தேவகி உணர்ந்துதான் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு வந்தாள்.

ஆபீஸ் நேரங்களில் நடராஜன் சிலசமயம் தன்னுடன் பேசிப் பழகும் சமயம் எல்லாம் நம்மை மனதுள் விரும்பித்தான் அப்படிப் பேசுகின்ருனே? என நினைத்து சந்தோஷமாக வேலை செய்வாள். மறு நிமிஷம் அவளின் சந்தோஷத்தை எரித்து சிதறடித்து விடுவான். முன்பின் தெரியாத நபரைப் பார்த்துப் பேசுவது போல் அவளைக் கோபிப்பான். கொஞ்ச நேரத்துக்கு முன்பு அவனைப் பற்றி மிகவும் அருமைபெருமையாய் கற்பனை செய்து சந்தோஷப் பட்டவள், மனமுடைந்து நடராஜனை நிந்திப்பாள்! அழுது விடுவாள்! சற்று நேரத்தில் பின்னும் நடராஜன் அவளுடன் பேச்சுக் கொடுப்பான். அந்த சமயம் தேவகி மாறி விடுவாள்!

* * *

ஒரு மாதப் பொழுது கழிந்தது. ஆபீஸ் வேலை விவகாரங்கள் ஒழுங்காய் நடந்து வந்தன. வழக்கப்படி தேவகி நடராஜனிடம் பாராட்டுதல்களும், சகஸ்ரநாம அர்ச்சனை போல் திட்டுகளும் வாங்கிக் கட்டிக்கொண்டு அழுதும் சிரித்தும் தன் காரியத்தைக் கவனித்து வந்தாள்!

* * *

ஒரு நாள் மாலை மணி நான்குக்கு எல்லாம் திடீரென வானம் இருண்டு மப்பு மந்தாரமாகி பலத்த மழை பிடித்துக்கொண்டது. அன்று திடீரென அப்படி மழை வரும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

"இது என்ன மழை. ஆபீஸ் விடும் நேரத்தில் எப்படி வீடு போய்ச் சேருவது" என்று ஒவ்வொருவரும் முனகியபடி வேலை செய்தனர். தேவகியும் "மழை ஏன் வந்தது?" என சபித்துக் கொண்டிருந்தாள். மணி 5 ஆகியும் மழை தூறிக்கொண்டுதானிருந்தது.

நடராஜன் தேவகியைப் பார்த்து "என்ன மழை! இன்னும் விட்டபாடில்லையே....?" எனக் கேட்டான்.

தேவகி எப்போதும் போல் "ஆமாம் ஸார்" என தலையை ஆட்டினுள்.

"உங்கள் வீடு எங்கே....?"

"நேதாஜி ரோட்டில் ஸார்...."

"ஓ நேதாஜிரோடா சரிதான். இந்த பைலை எடுத்துக்கொண்டு நீங்களும் தயாராகுங்கள். போகும் வழியில் உங்களை வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன்" எனச் சொல்லி நடராஜன் புறப்படத் தயார் ஆனுன்.

தேவகி அதற்கு மறுப்புப் பேசவில்லை. "வேண்டாம்" என வீண் ஜம்பம் செய்தால் கஷ்டம் மழையும் விடுவதாகத் தெரியவில்லை. நடராஜன் பின்னுல் தேவகி நடந்தாள். குமாஸ்தாக்

கள் எல்லோரும் இருவரது 'புறப்பாட்டைக்' கவனித்தனர்.

'ஆபீஸ் குமாஸ்தாக்கள் கேலி செய்வார்களே ?' என்ற ஒரு நினைப்பு இடையே....! மற்றவர்களைப் பற்றி கவலைப் படுவானேன்.?' என அவளே பதிலும் சொல்லிக்கொண்டாள்!

"மிஸ் தேவகி, நேதாஜிரோடு வந்து விட்டது. உங்கள் வீடு எங்கே....?"

தேவகி இந்த உலக நினைவில் இருந்தால் தானே? கற்பனை லோகத்தில் சஞ்சரிப்பவளுக்கு காது எங்கே கேட்கும்....?

பக்கத்தில் உள்ளவர்கள் கவனித்தனர். கார் சத்தம் கேட்டு வீட்டின் உள்ளிருந்து சுந்தரம் பிள்ளை – தேவகியின் தந்தைதான்–வெளியே வந்து பார்த்தார். தேவகியின் இளைய சகோதரனும் வந்து கவனித்தான்,

தேவகி காரிலிருந்து இறங்கினாள். மரியாதைக்கு நடராஜனைப் பார்த்து கரம் கூப்பினாள். நடராஜன் பதிலுக்கு தலையை ஆட்டினான். கார் நகர்ந்து விட்டது.

தேவகியின் சகோதரன் சம்பந்தம் அவளின் வாயைக் கிளறினான் !



"தேவகி" என நடராஜன் கூப்பிடவும் தேவகி உலுக்கி விழுந்து நடராஜனை பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தாள் !

"உங்களுக்கு என்ன....? வீடு எங்கே எனக் கேட்டேன்....!" என விசாரித்தான் நடராஜன்.

தேவகி வெளியே கவனித்து "அதோ தெரிகின்றதே வேப்ப மரம், அதன் பக்கம்தான்" என்றாள். கார் அவள் வீட்டு வாசலின் அருகில் சென்று ஹார்ன் கொடுத்து ஒரு குலுக்கல் போட்டு நின்றது! மழை ஓய்ந்த நேரம். தேவகியின் வீட்டுக்கு முன்பு கார் நிற்பதை அக்கம்

"ஏது இப்போதெல்லாம் காரில் வர்ராப்பிலே இருக்கே?" எனக் கேட்டான். அவன் கேள்வியில் கேலியும் கிண்டலும் கலந்திருந்தன !

"ஆமாண்டா.... அதுக்கு என்ன இப்போ.... உன் வேலையைப் போய் கவனி" என சீறினாள் தேவகி.

"ஏம்மா, அது பரமேஸ்வரம் பிள்ளை கார்தானே" என சுந்தரம் பிள்ளை தன் மகளை விசாரித்தார்.

"ஆமாம்.... மழையாக இருந்ததால் கொண்டுவந்து விட்டு

விட்டுப் போனுர்'' என்ருள் தேவகி.

"உள்ளே இருந்தது பரமேஸ்வரம் பிள்ளையில்லையே! யாரோ ஒரு துரை மாதிரி அல்லவா தெரிந்தது....!'' என அவளின் சகோதரன் குறுக்கிட்டான்.

தேவகி அவனை கோபமாகப் பார்த்துவிட்டு "இப்போ அவருக்கு பதில் பட்டணத்தில் இருந்து வந்த அவர் பிள்ளை நிர்வாகத்தைக் கவனிக்கிருர். அவர்தான் காரில் வந்தது!'' என்ருள்.

"இதை இவ்வளவு தூரம் சுற்றி வளைத்துச் சொல்வானேன்....?'' என சம்பந்தம் சொல்லி முடிக்காத முன்பு அவன் மேல் சீறி விழுந்தாள்.

"அவனுக்கு கொஞ்சமாவது கவலையிருந்தால்தானே.... படித்துவிட்டு ஊர் சுற்றுகிறவன்தானே'' என முனகியபடி வெளியே புறப்பட்டுச் சென்ருர் சுந்தரம் பிள்ளை. தேவகி வீட்டு வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

* * *

மறுநாள் தேவகி எப்போதும் போல் ஆபிஸுக்கு சென்று கொண்டிருந்தாள், ஹார்ன் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தாள் தூரத்தில் நடராஜனின் கார் வந்து கொண்டிருந்தது, சுமாரான வேகத்தில். 'முந்தின நாளைப் போல் தன்னைக்கண்டு காரில் ஏற்றிக்கொண்டு போவான்' என நினைத்தவளாய் அவன் பார்வையில் பட வேண்டும் என திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே நடந்தாள். வண்டியை நடராஜன் தான் ஓட்டிக்கொண்டு வந்தான். கார் சமீபிக்கவும் தேவகி காரைக் கவனித்தாள். நடராஜனும் அவளைப் பார்த்தான். ஆனுலும் கவனிக்காதவன் போல் காரை விட்டுக் கொண்டு சென்ருன்!

அவள் எதிர்பார்த்தது நடக்காததால் அவளுக்கே அவமானமாக இருந்தது! ஏனே அவளுக்கு கண் கலங்கி விட்டது!

ஆபீஸுக்குள் அடி எடுத்து வைக்கும்போதே "இன்று நம் மட்டுக்கு விறைப்பாகவே நடந்து கொள்ள வேண்டும்!'' என்ற வைராக்கியத்துடன் போய் தனது இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டாள்!

நடராஜன் நாற்காலியில் சாய்ந்தபடி அன்றைய தினசரியைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். தனக்கு வந்த தபால்களைப் பிரித்தபடி நடராஜனை கவனித்தாள். அவனது சிவந்த மேனிக்கு அன்று அவன் டிரஸ் செய்திருந்த கருப்பு ட்விட் ஸூட் கோட் மிகவும் கச்சிதமாயும் கவர்ச்சிகரமாகவும் இருந்தது. தேவகி தான் பூண்ட வைராக்கியத்தையும் மறந்து நடராஜனை நிமிஷ நேரம் வைத்த கண் வாங்காமல் அப்படிப் பார்த்தாள்!

சிறிது நேரம் கழிந்ததும் தேவகி தன் வேலையில் கவனமானுள். இடையே நிமிர்ந்து நடராஜனைக் கவனித்தாள். அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்ததும் முகம் சுளித்துக் கொண்டாள். மற்ற நாட்களில் அவன் நோக்கால் பரவசமடைபவள் அன்று வெறுத்தாள். மனதுக்குள் அவனைத் திட்டினுள்!

நடராஜன் காலிங் பெல்லை தட்டவும் ஆபீஸ் பையன் அவன் எதிரே வந்து நின்ருன். அவனிடம் ராமசாமிப் பிள்ளையை அழைக்குமாறு உத்தரவிட்டான் தலைமைக் குமாஸ்தா பிள்ளை அவன் அறைக்குள் வந்தார்.

அவரிடம் ஆபீஸில் குமாஸ்தாக்கள் அதிகம் இருப்பதாகவும் அதனுல் ஆள் குறைப்பை உத்தேசித்து ஒருவரை விலக்கிவிடத் தீர்மானித்திருப்பதாகவும். 'யாரை விலக்குவது' என தான் இன்னும் முடிவு செய்யவில்லை எனவும், இன்று அவர் குமாஸ்தாக்களுடன் கலந்து அவர்களுக்குள் வேலையில் இருந்து நின்று கொள்ளக்கூடிய நபர் பெயரை இன்று மாலை நான்கு மணிக்குள். தெரிவித்தாக வேண்டும் என்றும் சொல்லி முடித்தான்.

தேவகி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''தேவகி இதற்கு விலக்கா....? என கேட்டு வைத்தார்.

''நீங்கள் நீங்கலாக மற்ற பதினேறு பேருக்குள் ஒரு நபர் நின்ருக வேண்டும். ஆபீஸ் தேவைக்கு பத்து குமாஸ்தாக்களே அதிகம்!'' எனபதில் தந்துவிட்டான் நடராஜன்.

ராமசாமிப் பிள்ளைக்கு மேற்கொண்டு ஒன்றும் பேசத் தோன்ற வில்லை. சரி என்ற முனகலுடன் திரும்பிவிட்டார்!

தேவகிக்கு வேலை செய்ய மனமே இல்லை. 'ஆபீஸ் என இருந்தால் ஒரு ஷார்ட்ஹாண்ட் டைப்பிஸ்ட்டு கட்டாயம் இருந்தாக வேண்டும். அதிலும் ஒரு ஸ்திரி குமாஸ்தாவை வைத்துக் கொள்வது தற்காலிக புது பேஷன்! நம்மைவிலக்காகவைக்காமல் நம் வேலைக்கும் ஆட்டம் கொடுக்கும்படி வைத்து விட்டானே' என மனதுக்குள் வருத்தப்பட்டாள். 'அப்படி நடராஜனே நிறுத்துவதற்கு நபர் தேர்ந்தெடுத்தாலும் நாம் அவன் கவனத்துக்கு வரமாட்டோம்! நம்மை விசேஷ சிபாரிசின் பேரில் பரமேஸ்வரம் பிள்ளை வேலையில் நியமித்திருக்கும் போது பயமில்லை! அதுவுமல்லாமல் நடராஜனின்கவனத்துக்கு நாம் இலக்காகி இருப்பதால் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை! என தனக்குத்தானே மனதை திடப்படுத்திக் கொண்டாள்.

ஒரு நபர் வேலையிலிருந்து நின்றுவிட வேண்டும் என்ற விபரத்தைக் கேட்ட குமாஸ்தாக்களுக்கு யாருக்கும் மத்தியான சாப்பாட்டு நேரம் வரை வேலை ஓடவில்லை. மணி ஒன்று அடித்ததும் எல்லோரும் சாப்பாட்டு அறையில் கூடினுர்கள். ஒருவர் முகத்திலாவது எள் அளவு சந்தோஷம் கிடையாது!

எங்கே எந்த நிமிஷம் நம் பெயர் ஆபீஸிலிருந்து எடுபட்டுவிடுமோ என கலங்கியபடிஇருந்தனர்! தேவகிக்கு ஒன்றுமே தோன்றவில்லை 'தன் வேலை போய்விடும் பட்சத்தில் ஏழைத் தந்தையும், சகோதரனும், தானும் என்ன பாடுபட வேண்டியிருக்கும் 'என நினைத்துப் பார்த்தாள். அதை நினைக்கவே பயங்கரமாக இருந்தது! எல்லோரும் நடராஜனுடன் பேசி வாதாடிக்கொண்டிருக்கும் தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்!

ராமசாமிப்பிள்ளை வரவும் எல்லோரும் ''என்ன ஸார்?'' என விசாரித்தனர். ''நான் எவ்வளவோ கேட்டுப் பார்த்து விட்டேன் 'நாலு மணிக்குள் நின்று கொள்ளக் கூடிய நபரின் பெயரைத் தந்தாக வேண்டும் இல்லையாஞல் தன் இஷ்டப்படி யாரையாவது நிறுத்தி விடுவேன்' என சொல்லிவிட்டான். நான் என்ன செய்வது?'' என்று எல்லோரையும் பார்த்தார்.

எல்லோரும் புதிதாய் நிர்வாகத்துக்கு வந்த நடராஜனை நிந்தித்தனர்! சாப்பாட்டிற்கான ஓய்வு நேரம் கழிந்ததே தெரியவில்லை! எல்லோரும் அவரவர்கள் இடத்தில் போய் அமர்ந்தனர். ஒருவருக்காவது வேலை ஓடவில்லை. ஒரு இரு, நபர்களுக்கு குளிர்காய்ச்சலே வந்துவிட்டது.

தேவகி வேலையாக இருந்தாள்.

ஆபீஸ் பையன் டிபன் காரியரைக் கொண்டுவந்து தேவகியிடம் 'முதலாளிக்கு சாப்பாடு வந்திருக்கு' எனச் சைகை செய்தான்.

தேவகி நடராஜனைப் பார்த்து "ஸார் உங்களுக்கு சாப்பாடு வந்திருக்கு" என்ருள்.

"ரைட், கொண்டு வரச் சொல்" என தேவகியைப் பார்த்தான். ஆபீஸ் பையன் டிபன் காரியரை உள்ளே கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனன். தேவகி அவசியமில்லாமல் நடராஜனைப் பார்த்தாள்.

"சாப்பிட்டாய் விட்டதா....!" எனக் கேட்டான் நடராஜன்.

"ஆமாம் ஸார்...."

"என்ன.... ஆமாம்....?"

"சாப்பிட்டாய்விட்டது.... ஸார்".

'தன்னை இவ்வளவு அக்கரையுடன் விசாரிக்கின்ருனே!' என மனதுள் சந்தோஷப்பட்டாள். நம்பிக்கை யற்றிருந்த உள்ளத்தில் தெம்பு பிறந்தது! சரிவர நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். நடராஜன் சாப்பிடத் தயார் ஆனன். கொஞ்ச நேரத்துக்கு முன்பு குமாஸ்தாக்களுடன் துக்கப்பட்ட தேவகி இப்போது அவர்களைப் பார்த்து மனதுள் சிரித்தாள்!.

* * *

மணி 3 அடித்தது.

இனி ஒரு மணி நேர அவகாசம் தான்!

வேலையிலிருந்து நின்றுகொள்ளக் கூடிய நபரின் பெயர் இன்னும் தெரியவில்லை! மணி ஆக ஒவ்வொருவருக்கும் திகிலும் கலக்கமும் அதிகரித்தது! தேவகி மட்டும் திடமாக தன் ஸ்தானத்தில் அமர்ந்திருந்தாள். தலைமை குமாஸ்தாவுக்கு 'தனக்கு கீழ்படிதலாக, ஒழுங்காக, விசுவாசமாக வேலை பார்த்து வந்தவர்களில் யாரை எப்படி, நின்று கொள்ளச் சம்மதமா....?' எனக் கேட்பது என்ற கவலை!

ராமசாமிப் பிள்ளை நடராஜன் அறைக்குச் சென்ருர். குமாஸ்தாக்கள் எல்லாரும் 'என்ன ஆகுமோ?' என்று திகில்பட்டுக் கொண்டிருந்தனர்.

நடராஜன் அவரைப்பார்த்து, "என்ன நீங்கள் யாரைத் தேர்ந்தெடுத்தீர்கள். டயம் ஆகின்றது. இன்று இதற்கு ஒரு முடிவு செய்தாக வேண்டும்....".

"உங்கள் அப்பாவிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு செய்தால்...."

"இது அவரை கலந்து செய்யும் முடிவுதான். ஆல்ரைட் நீங்கள்போகலாம். நானே இதற்கு ஒரு முடிவு கட்டுகின்றேன்." என்றதும் பிள்ளை பேசாமல் திரும்பிவிட்டார்.

ஆபீஸில் அமைதி நிலவியது!

நடராஜன் மேஜைமேலிருந்த காகிதத்தை எடுத்து பரபர வென ஏதோ எழுதினன்.

"மிஸ் தேவகி, இப்படி வாருங்கள்" என்றான்.

தேவகி அவன் முன்பு சென்று நின்றாள்.

நடராஜன் சிறிது ஆலோசித்து பின்பு மெதுவாக "இதை டைப் செய்துகொண்டு வாருங்கள்" என தான் எழுதிய கடுதாசியைக் கொடுத்தான். தேவகி அதை வாங்கிக் கொண்டு தன் இடத்திற்குச் சென்று அமர்ந்து படித்தாள். அவளுக்கு தலை சுற்றி மயக்கம் வந்து விடும் போலிருந்தது! அந்த துண்டு கடிதத்திலிருந்த விஷயம் அவளைக் கலங்கடித்து விட்டது! அழுகையே வந்து விட்டது.

அதில் எழுதியிருந்த விஷயம் இதுதான் :

மிஸ் தேவகி அவர்களுக்கு,

" தங்களுடைய சேவை எங்களுக்கு தேவை இன்மையாக இருப்பதால். தங்களை ஒரு மாத நோட்டீஸுடன் இன்று முதல் நீக்கப்பட்டிருக்கிறது. தங்களின் இது நாள் வரை சேவைக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நடராஜா மில்ஸ்.

மானேஜிங் புரொப்ரைட்டர்."

தேவகி, நடராஜனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் ஏதோ தலை கவிழ்ந்து எழுதிக் கொண்டிருந்தான். 'அவன் அப்படி தனக்கே நோட்டீஸ் தருவான்' என அவள் எதிர்பார்க்கவில்லை. தேவகி அவனிடம் எழுந்து சென்று "ஸார் என்ன ஸார் இது....?" எனக் கேட்டாள்.

"நோட்டீஸ்....!" என சாவதானமாக பதில் தந்தான் நடராஜன். தேவகிக்கு ஆத்திரமும் கோபமும் பற்றிக்கொண்டு வந்தது.

"சார், நான் ஏதோ வெளிக்கு இப்படி படாடோபமாய் வருகின்றேனே ஒழிய, மிகவும் கஷ்ட தசையில் உள்ளவள். என்னை நம்பி என் தந்தை, தம்பி எல்லோரும்...."

" அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கின்றாய்.? யார் தான் கஷ்டப்படாமல் இருக்கிறார்கள்....?

"ஸார் நான் வந்து....?" தேவகியால் பேசமுடியவில்லை. அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. தேம்பினாள்.

"நான் தீர்மானித்துவிட்டேன் இந்த நோட்டீஸை வாங்கிக் கொள்ளப் போகின்றீர்களா இல்லையா....? இது என்ன நியூசென்ஸ்...."

அவனிடம் மேலும் கெஞ்ச மனமில்லாதவளாய் பதிலுக்கு தேவகியும் ஆத்திரத்தில் சத்தம் போட்டாள்!

" ஆமாம் ஸார், உங்களிடம் உழைக்கும் எங்கள் முறையீடுகள் நியூசென்ஸாகத்தான் இருக்கும். 'நீங்கள் மனிதர்' என முறையிட்டேன். உங்கள் நோட்டீஸை வாங்கிக் கொள்ள தயார் தான். உங்கள் அதிசயமில்லை விட்டால் வேறு வேலை எனக்கு கிடைக்காது பாருங்கள்....!" என பட பட வென பேசினாள்.

"ஆபீஸில் ஸ்திரீ குமாஸ்தாக்கள் கூடாது என்பது என் கொள்கை...." என்றான்.

" அதுதான் பட்டத்துக்கு வந்ததும் அமுலாகின்றதோ!" என்றாள். வேலை போய்விட்டது நிச்சயம். இனி என்ன இவனுக்கு மரியாதை தருவது என்றுதான் பதிலுக்கு பதில் பேசினாள்!

"மிஸ் தேவகி ஆத்திரப்படாதீர்கள். ஸ்திரீ குமாஸ்தாக்களால் ஒழுக்கம் கெட்டுவிடும். அதனுல்தான் உங்களை நான்!"

தேவகிக்கு கோபம் பின்னும் அதிகமாக பற்றிக்கொண்டு வந்தது. 'அவன் கிராப்பை பிய்த்து இரண்டு அறைகள் விடலாமா' எனக்கூட நினைத்து துடித்தாள்!

ஹாலில் இருந்த ராமசாமிப் பிள்ளை "இது என்ன அடிபிடிச் சண்டை போல்....நாம் உள்ளே போய் சமாதானப் படுத்தலாமா....?" என நினைத்தபடி உட்கார்ந்திருந்தார்.

நடராஜன் மேற்கொண்டு வாயே திறக்கவில்லை. தேவகியின் கோபத்தைக்கண்டு மேலே பேச விரும்பவில்லை அவன். காலிங் பெல்லை தட்டினுன். ஆபீஸ் பையன் எட்டி பார்த்தான். "ஹெட்கிளார்க்கை வரச் சொல்" என்றுன்.

தேவகி தன் மேஜை டிராயரைத் திறந்து தன் கைப்பையில் தனது சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். ராமசாமிப் பிள்ளை வந்து தேவகியையும் நடராஜனையும் கவனித்தார்!

அவரிடம் ஒரு காகிதத்தை நீட்டி "இதோ இந்த நோட்டீஸை டைப் செய்து மிஸ் தேவகியிடம் கையெழுத்து வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். இன்றுவரை கணக்கு முடித்து ஒரு மாதச் சம்பளம் அதிகப்படி கொடுத்துவிடுங்கள்.... சீக்கிரம் தயாரியுங்கள்" எனச் சொன்னுன் நடராஜன்.

"இன்று வரை என் கணக்கைப் பார்த்துக் கொடுத்தால் போதும். உங்களின் ஒரு மாத நோட்டீஸ், பணம் எனக்கு அனுவசியம்....!" என அலட்சியமாக அறையை விட்டு வெளியே வந்து குமாஸ்தாக்கள் தங்கும் ரெக்ரியேஷன் ரூமுக்குள் சென்று அங்கிருந்த மேஜையடியில் அமர்ந்தாள். அவளுக்கு அழுகை வந்து விட்டது!

தேவகியைத் தொடர்ந்து ராமசாமிப் பிள்ளை வந்து "என்ன தேவகி இப்படி திடீரென...." என்று விசாரித்தார்....

தேவகி குமுறிக்குமுறி அழுது விட்டாள்.

"இவனிடம் இனிமேல் வேலை செய்வதைவிட வேறு எங்காவது பிச்சை எடுத்துப் பிழைக்கலாம்...."

"என்ன இது அசட்டுத்தனமான பேச்சு...."

"என்னுல் இங்கு ஒழுக்கம் கெட்டுவிடுமாம். என்னை அவமானப்படுத்தி விட்டான்."

"சத்தம் போடாதே தேவகி. நீ இப்படி பேசுவதும் ஒழுங்கில்லை. ஆபீஸ் கட்டடத்தில் உட்கார்ந்து கொண்டு; என்ன இருந்தாலும் அவன் முதலாளி, அவன் காது கேட்கும்படி 'அவன் இவன்' என பேசலாமா....? பரமேஸ்வரம் பிள்ளையிடம் சொன்னுல் அவர் விசாரிக்கின்றூர்" எனச் சொல்லிவிட்டு ராமசாமிப் பிள்ளை நகர்ந்தார்.

தேவகி ஏதோ யோசித்தபடி இருந்தாள். நடராஜன் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலவியபடி இருந்தான்.

தலைமை குமாஸ்தா ராமசாமிப் பிள்ளை தேவகியின் சம்பளக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தேவகி என்ன நினைத்தாளோ, எழுந்து தனது மேஜைக்குச் சென்று கைப்பையை எடுத்துக் கொண்டு ராமசாமிப் பிள்ளையிடம் வந்து "நான் போகிறேன் சார்...." எனச் சொல்லி விட்டு மற்றகுமாஸ்தாக்களை எல்லாம் பார்த்துவிட்டு நான்போகிறேன் என கரம் கூப்பிவிட்டு நகர்ந்தாள். குமாஸ்தாக்கள் எல்லோருக்கும் கண் கலங்கிவிட்டது! வாய் பேசச் சக்தியற்றவர்களாய் தலையை ஆட்டினர்.

நடராஜன் எழுந்து வந்து தேவகியின் மேஜைப் பக்கம் நின்று ஹாலில் உள்ள குமாஸ்தாக்களைக் கவனித்தான். ஒருவர் முகத்திலாவது சுரத்தில்லை. உம், என உட்கார்ந்திருந்தனர். அவர்களை நோக்கி கருத்து நிறைந்த ஒரு புன்னகையை உதறிவிட்டு நடராஜன் வெளியே புறப்பட்டான்.

மறு நாள் காலை.... தேவகி தன் வீட்டில் உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரே அவள் தந்தை சுந்தரம் பிள்ளை கவலையுடன் அமர்ந்து இருந்தார். 'மகளுக்கு வேலை போய்விட்டதே' என அவருக்குக் கவலை.

தேவகி அவரைப் பார்த்து "நீங்கள் கவலைப் படாதீர்கள் அப்பா....இதோ இன்று இரண்டொரு இடங்களுக்கு அப்ளிகேஷன் போடப் போகிறேன். ஒரு வார காலத்தில் வேறொரு இடத்தில் இதைவிட நல்ல அந்தஸ்தில் உட்கார்ந்து விடுவேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது" என்றாள்.

வீட்டு வாசலில் கார் சத்தம் கேட்டது. தேவகி ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள். நடராஜனுடன் சவாரி செய்த அதே பாண்டியாக் கார் தான்.

"அப்பா பரமேஸ்வரம் பிள்ளையின் கார் வந்திருக்கு!" என்றாள். கார் ஹார்ன் சத்தம் கேட்டது. பிள்ளை வெளியே சென்று எட்டிப் பார்த்தார். "வாருங்கள் வாருங்கள்.... நீங்களா ஏது என் வீடு தேடி வந்து விட்டீர்கள்....? வாங்கோ உள்ளே...." என தன் தந்தை உபசரிப்பதைக் கேட்டு 'பரமேஸ்வரம் பிள்ளைதான் வந்து விட்டார் போலும்' என நினைத்தபடி உள் பக்கம் சென்று விட்டாள் தேவகி.

வந்தது பரமேஸ்வரம் பிள்ளை அல்ல. அவர் மனைவி- நடராஜனின் தாயார் பாலம்மாள் தான்!

"அப்பாவும் பிள்ளையும் உங்கள் பெண்ணைப் பார்த்து இருக்கின்றார்கள். நான் சரிவர பார்த்ததில்லையே! அதனால் தான் வந்தேன்!" என்று அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள் பாலம்மாள். சுந்தரம் பிள்ளை பாலம்மாள் பேசுவதை புரிந்துகொள்ள முடியாமல் விழித்தார்.

"ஒன்றுமில்லை. நம்ம பையன் நடராஜன் ஒரே பிடிவாதமாக 'கலியாணம் செய்வதாக இருந்தால் உங்கள் பெண் தேவகியைத்தான் செய்துக் கொள்வேன்' என சொல்லிவிட்டான். 'அதுதான் உங்களைப் பார்த்து கேட்டுவிட்டுப் போகலாம் என புறப்பட்டு வந்தேன். இன்று நல்ல நாள். நிச்சயம் செய்து கொள்ளலாம்....' என்றாள்.

சுந்தரம் பிள்ளைக்கு பதில் பேச நா எழவில்லை! கண்களில் ஆனந்தக்கண்ணீர் பொங்க "நீங்கள் பார்த்து எது செய்தாலும் சரி...." என சொல்லிவிட்டு

"தேவகி" என அழைத்தார். அடுத்த அறையில் ஒண்டிக் கேட்டுக் கொண்டிருந்த தேவகி மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்! அவள் சகோதரன் சம்பந்தம் "அப்பா அப்பா.... அக்காவுக்கு மயக்கம் போட்டு விட்டுது" என கத்தினன்.

சுந்தரம் பிள்ளையும் பாலம்மாளும் ஓடிச்சென்று தேவகியைக்கவனித்து மூர்ச்சை தெளிவித்தனர்!

"வேலே போய்விட்டது என வருத்தத்துடனிருந்தது" என்று சுந்தரம் பிள்ளை சொன்னர்.

"அப்படியிருக்கையில் திடுதிப்பென 'கலியாணம்' என கேட்டதும் மயக்கமடைந்து விட்டது!" என்று பாலம்மாள் பதில் சொல்லிவிட்டு தேவகியைக் கவனித்தாள். உணர்ச்சி பெற்று எழுந்த தேவகியை பாலம்மாள் மார்போடணைத்துக் கொண்டு "என்னம்மா இதெல்லாம்" என்று பரிவோடு கேட்டாள்.

தேவகி மகிழ்ச்சி நிறைந்த நாணத்துடன் பாலம்மாளைப் பணிந்து எழுந்தாள்.

பிறகு திருமண ஏற்பாடுகள் சம்பந்தமான பேச்சு முடிந்ததும் பாலம்மாள் புறப்பட்டுச் சென்ருள்.

தேவகி அறையில் சென்று உட்கார்ந்து நடராஜன் தன்னிடம் ஒருவார காலம் நடந்து கொண்டதை எல்லாம் நினைத்துப் பார்த்துக் கொண்டாள்! "அவ்வளவு தூரம் என்னை அழவைத்துப் பார்த்தது எல்லாம் இதற்குத்தான" எனக் கேட்டுக் கொண்டாள்!

அடுத்தவாரம் சுபதினத்தில் ஒருநாள் தேவகிக்கும் நடராஜனுக்கும் பலபிரமுகர்கள் சூழ்ந்து ஆசீர்வதிக்க– முக்கியமாக நடராஜா மில்ஸ் ஆபீஸ் குழுவினர் வியக்க, கலியாணம் நடந்தேறியது! அன்று மாலே தேனீர் விருந்து. பின்பு கச்சேரி!

நடராஜனிடம் "என்ன இருந்தாலும் நீங்கள் தேவகியை இப்படி அலேக்கழித்துப் பார்க்கக் கூடாது....!" என்ருர் தலேமை குமாஸ்தா.

'நான் என்ன செய்தேன். நன்ருக வேலே செய்ததைக் கண்டு பிரமோஷன் கொடுக்க நினைத்தேன். அப்படியே ஏற்பாடும் செய்துவிட்டேன்! புரிந்து கொள்ளாமல் என்னை நிந்தித்தால்....?" எனச் சொல்லிவிட்டு நடராஜன் சிரித்தான்.

"இனிமேல் புரிந்துகொள்ளக் கூடும்...." எனச் சொல்லிவிட்டு நகர்ந்தார் ராமசாமிப் பிள்ளை. நடராஜன் தேவகியைப் பார்த்தான்! தேவகி நடராஜனைப் பார்க்க வெட்கப்பட்டு தலேகவிழ்ந்தாள்!

நட்பு என்பது கண்ணுக்குப்புலப்படாத ஒரு அன்பு ஊற்று அது எங்கே தோன்றுகிறது, எப்பொழுது உண்டாகிறது என்று சொல்லிவிடமுடியாது.

— அறிவுத்திரள்.

உணர்ச்சி பொங்கட்டும்

கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் மக்களுக்கு தமிழ் நாட்டு உணர்ச்சியும் தமிழ் மொழி உணர்ச்சியும் பொங்கிப் பெருக வேண்டும். உணர்ச்சி பொங்குவதற்கு **சிந்திப்பது** ஒன்றே சிறந்த வழி! அச் சிறந்த வழி திறந்த வெளியில் தான் அமைந்திருக்கிறது.

சிந்தனையை ஒரு செல்வமாகக் கருதி வாழ்ந்து வந்தவர்கள் பழந்தமிழ் மக்கள், அதனைப் பெரும்பாலும் இழந்து வாழ்பவர்கள் இன்றைய தமிழ் மக்கள். சிந்தனைச் செல்வத்தை இழந்துவிட்ட ஒன்றினுலேயே தமிழ் மக்கள் உணர்ச்சியை இழந்துவிட்டனர், அதனுலேயே தமிழ் மக்களின் வாழ்வை இருள் கவ்விக்கொண்டு விட்டது. உணர்ச்சி பொங்கி விட்டால், வாழ்வும் பொங்கிப் பெருகும்; இன்றேல் அது மங்கி மடியும்,

இழந்த உரிமையை, இழந்த வாழ்வை, இழந்த நிலத்தை, இழந்த அரசை தமிழ் மக்கள் மீண்டும் பெற வேண்டும். அழிந்த பண்பை உயிர்ப்பிக்க வேண்டும், நிலை குலைந்த மொழியைப் போற்றி வளர்க்க வேண்டும். இவற்றிற்கு வேண்டுவது உணர்ச்சி ஒன்றே. அதைப் பெருவதற்கு உங்கள் உள்ளத்தில் சிந்தனைச் செடியை வளர்த்தாக வேண்டும், அதற்குரிய விதைகள் இவை :—

1) பிற நாட்டினர் அனைவரும் தங்கள் தங்கள் நாட்டின் எல்லைகளைப் பெருக்கியும், பாதுகாத்தும் வரும்பொழுது தமிழ் மக்கள் மட்டும் தங்கள் நாட்டின் எல்லைகளை நான்கு புறத்திலும் இழந்து வருவது ஏன்?

2) "கல் தோன்றி மண் தோன்ருக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர்" எனப் பெயர் பெற்ற தமிழ் மக்கள்,-தங்களைத் தாங்களே ஆண்டுவந்த தமிழ் மன்னர்களின் மக்கள்-இன்று அடிமைகளாக வாழ்வது எதன் பொருட்டு?

3) திசை எட்டும் திரிவதற்கு முன்னே, பின்னே தோன்றி, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இலக்கண வரம்பைப் பெற்று, இன்றும் எழில் குன்ருது இருக்கின்ற தமிழ் மொழியும், எழுத்தும், இன்று வந்தவன் போனவன் எல்லாம் குறைக்க, கூட்ட, கலக்க, சிதைக்க, மாற்ற, அழிக்க ஆளாகியிருப்பது எதனுல்?

4) கிறிஸ்து பிறப்பதற்கு 100. ஆண்டுகளுக்கு முன்னமேயே ரோமாபுரி முதலிய நாடுகளுக்கு பாய் கட்டிக் கப்பல்கள் மூலம் தமிழ் நாட்டு விளைபொருள்களை அனுப்பி, கடல் வணிகம் செய்து வந்த தமிழ் மக்கள் இன்று ஏற்றுமதி இறக்குமதி உரிமைகளைக் கூட இழந்து வருவது ஏன்?

5) மிக உயர்ந்த ஆடைகளைப் பஞ்சிலும், பட்டிலும், எலி மயிரிலும் நெய்து உலக முழுவதும் அனுப்பிப் பெயர் பெற்றுவந்த, கட்டபொம்மன் ஆண்ட 1800ம் ஆண்டில் கூட இங்கிலாந்துக்கு இங்கிருந்து ஆடைநெய்து வழங்கிய தமிழ் மக்கள் இன்று தங்கள் கைத் தொழிலையும் இழந்து தவிப்பது எதன் பொருட்டு?

6) தமிழ் நிலத்தில் செடி முளைத்தபோதே முளைத்த தமிழ் மருத்துவமானது இன்றும் உலகில் சிறந்த ஒன்ருக இருந்தும், அது தமிழ்மக்கள் முன்னுலேயே அதுவும் தமிழ் நாட்டிலேயே படுகொலைசெய்யப்பெற்று குற்றுயிராகக்கிடந்து வருவது ஏன்?

7) வந்த விருந்தினர்களுக்கெல்லாம் வாரி வழங்கி, உண்டு வாழ்ந்து வந்த தமிழ் நாட்டில் இன்று பட்டினிச் சாவுகள் நடைபெறுவது எதனுல்?

8) **முத்தமிழ்** என்ற பெயர் பெற்றுதமிழ்தோன்றியபோதே உடன் தோன்றியுள்ள தமிழ் இசையும், தமிழ் நாடகமும் தமது **பண்ணையும்**, தமது பண்பையும் வெளி நாடுகளில் பரப்ப முடியாவிட்டாலும் தமிழ் நாட்டில் கூட பரப்ப முடியாத நிலை ஏற்பட்டிருப்பது எதனுல்?

9) விடுதலை பெற்ற இந்தியாவில், தமிழ்நாடு மட்டும் தன் பங்கைப் பெற முடியாமல் வாழ்வது எதன் பொருட்டு?

10) வெளிநாட்டு தூதுவர்களாகவோ, கடற்படை, தரைப்படை, விமானப் படை தளபதிகளாகவோ இருப்பவர்களில் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் ஒருவர் கூட இல்லாதிருப்பது ஏன்?

11) பிற நாட்டு மக்கள் எல்லாம் மொழிவாரி நாடு பிரிக்கமுற்பட்டிருப்பதைக் கண்டும் தமிழ் நாட்டு மக்கள் அத்துறையில் ஊமையராய், செவிடர்களாய், குருடர்களாய் வாழ்ந்து வருவது எதன் பொருட்டு?

12) "எங்கள் நாட்டில் எங்கள் மொழியே அரசியல்மொழியாக இருக்க வேண்டும்" என்று பிற நாட்டவர் எல்லாம் போராடி வெற்றி பெற்று வருவதை அறிந்தும் தமிழ்மக்கள் மட்டும் சீராடிக் கொண்டிருப்பது ஏன்?

13) தமிழ் நாட்டிலுள்ள வானெலி நிலையம் தமிழ் மொழி இசை, கலைபண்பாடு முதலியவைகளை வளர்க்க விரும்பாமல், தெலுங்குக்கும், ஆங்கிலத்துக்கும், இந்திக்கும் உழைத்து, திருவள்ளுவர் விழா நடந்தாலும் செவிடாகவும், தமிழ்த் தலைவர்கள் இறந்தாலும் குருடாகவும், தபால் எழுதிக் கேட்டாலும் ஊமையாகவும் மாறி, இங்கிலாந்தில் நடக்கும் தமிழ் இசை, தமிழ்ப் பேச்சுக்களைக் கூட ஒலி பரப்பாமல் இருட்டடிப்பு செய்து கொண்டு, **வானெலி நிலையம்** என்ற தன் பெயரைக் கூட தமிழில் சொல்ல வெட்கப்பட்டு, **ஆகாசவாணி** என பிறமொழியிலும், **ஆல் இண்டியா ரேடியோ** என ஆங்கிலத்திலும் சொல்லிக்கொண்டு, தமிழ்நாட்டின் மானத்தையும், மரியாதையையும் போக்கிக் கொண்டிருப்பது எதன் பொருட்டு?

14) இலங்கையில் தமிழ் மொழி அரசியல் மொழியாக ஆக்கப்பட்டு, அறிவிக்கப் பட்டும் கூட தமிழ் நாட்டில் தமிழ் மொழி அரசியல் மொழியாக இல்லாதிருப்பது ஏன்?

15) இலங்கைத் தீவில் தமிழ் மொழியில் எழுதிய தந்திச் செய்திகள் ஏற்கப் பெற்றும் தமிழ் மொழியில் எழுதிய தந்தி செய்திகள் மக்களுக்கு வழங்கப்

பெற்றும் வருகிறது. தமிழ்நாட்டில் இல்லையே ! ஏன் ?

16) ஆந்திரர்களுக்கு ஆந்திர மகா சபையும், மலையாளிகளுக்கு கேரள ஐக்கிய சங்கமும், கன்னடர்களுக்கு கன்னட சம்யுக்த சம்மேளனமும் இருக்கும் பொழுது தமிழர்களுக்கு என **ஒரு கழகமும்** தமிழ் நாட்டில் இல்லாதிருப்பது எதன் பொருட்டு ?

17) ஒவ்வொரு நாட்டினர்க்கும் ஒவ்வொரு தலைவர் இருக்கும் பொழுது தமிழ் நாட்டிற்கு மட்டும் இல்லா திருப்பதும், இருக்க முடியா திருப்பதும் எதனல் ?

18) ஒவ்வொரு நாட்டிலும், அவரவர் மொழியை வளர்க்க, பாதுகாக்க என்று ஒவ்வொரு அமைப்பு இருக்கும் பொழுது **தமிழ் மொழிக்கு** என ஒரு அமைப்பு தமிழ் நாட்டில் கூட இல்லாதிருப்பது ஏன் ?

19) முன்னேற விரும்பி துடிதுடிக்கும் தமிழ்நாட்டு அரசியல் வானத்தில் யோக்கியர் பஞ்சம் ஏற்பட்டிருப்பது எதன் பொருட்டு ?

20) $2\frac{1}{2}$ இலட்ச நாற்புற மைல் நிலப்பரப்பும், 3 கோடி தமிழ் மக்களும், உயர்ந்த மொழியும், சிறந்த பண்பும், நுண்ணிய அறிவும், வீர மரபும், ஓயாத உழைப்பும், உலக வணிகமும், இரும்பு, உருக்கு, தங்கம், பழுப்பு நிலக்கரி முதலிய பலவித கனிப் பொருள்களும் பரந்து விரிந்த கடற்கரையும் இன்றும் கொண்டுள்ள இத் தமிழ்நாடு இந்த இழி நிலையில் இருப்பது எதனல் ?

ஒரே விடை **உணர்ச்சி இல்லை** என்பதுதான். இந்நிலை இன்னும் நீண்டால் தமிழ் நாடு செழிக்குமா ? தமிழ் மொழி வளருமா ? தமிழ் மக்கள் வாழ்வார்களா ? என ஒவ்வொரு தமிழ் மகனும் இப்போதாவது எண்ணிப் பார்க்க வேண்டும்,

உலகத் தோழர்களுக்கு தொண்டு செய்யச் சென்ற தமிழர்களும், ஆசியா புணருத்தாரணத்திற்கு தொண்டு செய்யச் சென்ற தமிழர்களும். ஒரே இந்தியாவுக்கு தொண்டு செய்யச் சென்ற தமிழர்களும், திராவிடத் தோழர்களுக்கு தொண்டு செய்யச் சென்ற தமிழர்களும் வழி திரும்பி வருவார்களா ? அவர்களின் கண்களுக்குப் **பெற்றெடுத்த நாடும், வளர்த்தெடுத்த மொழியும் தோன்றுமா ?** என்பது இன்றைய இளைஞர்களின் கேள்வியாக இருக்க வேண்டும்.

தமிழையும், தமிழ் நாட்டையும் மறந்து பிற நாடுகளுக்கு தொண்டு செய்யச் சென்ற தமிழர்கள் கட்டாயம் வழி திரும்புவார்கள். அதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. தமிழ் நாட்டிற்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு என ஒரு அமைப்பும் அமையும். அந்த நாள் வெகு விரைவில் மலர வேண்டும் எனவும், நாடும் மொழியும் செழித்து மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் எனவும் அதற்குரிய உணர்ச்சி உடனே பொங்கிப் பெருக வேண்டும் எனவும் இந்த நல்ல நாளிலே ஆசைப்படுவோமாக !

சிந்தனைச் செல்வம் சிறந்து விளங்கட்டும். எங்கும் உணர்ச்சி பொங்கிப் பெருகட்டும். தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழர் தம் நாடு உரிமை பெற்று உலகில் மிளிரட்டும்,

வாழிய தமிழகம் !

வளம் பல பொழிந்தே

[இக் கட்டுரையின் கருத்துக்களை திரு. கி. ஆ பெ. விசுவநாதம் அவர்களின் சொந்த அபிப்பிராயமாகவே கொள்ளவேண்டும் — ஆசிரியர்.]

ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ, பி. எல்.

பஞ்சு ஒரு ஸ்கூல் வாத்தியார். அவன் தகப்பனார் எங்கள் வீட்டில் ஒரு காலத்தில் காரியம் பார்த்துக் கொண்டிருந்தார். நான் "ரிடைர்" ஆகி ஊருக்கு வந்தவுடன் பஞ்சு என்னைப் பார்க்க வந்தான். அவனுடைய யோகக்ஷேமங்களை விசாரிக்கலானேன். அவனுக்கு அப்போதுதான் ஐந்தாவதாக பெண் பிறந்து ஒரு வாரமாயிற்று என்று அவன் தெரிவித்தான்.

"அப்பப்பா ஐந்து பெண்களா?" என்று வியந்தேன் நான்.

"என்ன செய்வது. சிரமம் தான்" என்றான் பஞ்சு பெருமூச்சு விட்டுக்கொண்டு.

"பிள்ளைகளானாலும் பரிசாரகம் செய்து பிழைக்கச் சொல்லலாம். பெண்களை என்ன செய்வது? இதுகளுக்கு வரனைத் தேடிக் கல்யாணம் செய்து கொடுத்தாக வேண்டுமே, குறைந்த திட்டத்தில் ஒரு பெண்ணுக்கு ஆயிரம் ரூபாய் விதம் கணக்குப் பார்த்தாலும் ஐந்து பெண்களுக்கு ஐயாயிரம் பணம் எங்கிருந்து வரப் போகிறது?"

"ஐந்து ரூபாய் மிச்சம் கிடையாது. ஐயாயிரத்துக்கு ஏது வழி? பெண்களையும் படிக்க வைத்து ஏதாவது உத்தியோகத்திற்கு அனுப்ப வேண்டியதுதான். கல்யாணமாவது மண்ணாங்கட்டியாவது! இந்தக் காலத்தில்தான் பெண்கள் எல்லாவித உத்தியோகங்களுக்கும் போகிறார்களே! தீராத பக்ஷத்திற்கு எல்லாவற்றிற்கும் துணிய வேண்டியதுதான்".

"அடடா; அதெல்லாம் நமக்கு நன்றாயிருக்குமா! ஏதோ பகவான் அவ்வப்போது கொடுப்பார். அதைரியப் படாதே! பெண்ணைப் பிறப்பித்தவன் அது அதற்குப் புருஷனையும் சிருஷ்டிக்காமலா யிருப்பான்? இருந்தாலும் நம் கவலையை நாம் பட்டுத்தான் தீர வேண்டும். அட பாவமே! ஐந்து பெண்களா? ஐந்து பெண்களைப் பெற்ற அரசனும் ஆண்டி என்பது ஔவையார் வசனம்!"

"அரசனே ஆண்டியானால் ஆண்டி என்னவாகிறது?"

"அரசனாக வேண்டியது தான்".

இருவரும் கடகடவென்று சிரித்தோம்.

பஞ்சு சம்பாஷணையைத் தொடங்கினன்.

"மூன்ருவது பெண் பிறந்தும் **ஸாவித்ரீ** என்று பெயர் வைத்தோம். அந்தப் பெயர் வைத்தால் பின்பு பெண் பிறக்காது என்று சொல்லுவார்கள். ஆனல் நான்காவதும் பிறந்து விட்டது".

"அப்புறம்?"

"நான்காவதற்கு **ஸம்பூர்ணம்** என்று பெயர் வைத்தோம்".

"முற்றிற்று என்று தீர்மானித்து விட்டீர்களாக்கும்?"

"ஆமாம்".

"அந்த ஆணையையும் மீறிக்கொண்டு ஐந்தாவது பெண் பிறந்து விட்டதே! இதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"அதுதான் புரியவில்லை".

"**மங்களம்** என்று பெயர் வைத்துப் பாரும்".

"வைத்தால்?"

"மங்களம் பாடியாகிவிட்டது. இனி கன்னிகைகளின் அவதாரம் கிடையாது என்று தாத்பரியம்".

"அவதாரம் என்ற வார்த்தையைக் கேட்கும்போதே பயமாயிருக்கிறது. எங்கப்பா அவதாரம் அவதாரம் என்று சொன்னல் தசாவதாரத்தின் எண்ணிக்கையைக் குறிக்கும் என்று சொல்லுவார்".

"அப்படியே பத்துப் பெண் பிறந்துவிட்டால் நீ என்ன செய்வாய்! உலகத்தில் அப்படியும் இருக்கவில்லையா என்ன?

"ஐந்து பெண்களைப் பெற்ற ஆண்டி அரசனவதா யிருந்தால் பத்துப் பெண்களைப் பெற்ற ஆண்டி சக்ரவர்த்தியாக வேண்டியதுதான் நியாயம்".

இருவரும் வாய்விட்டுச் சிரித்தோம், ஸம்பாஷணையை நான் துவக்கினேன்.

"சிலருக்குப் பெண்களால் அதிர்ஷ்டம் வருவதும் உண்டு. தாசில் சங்கர அய்யருக்கு ஒன்பது பெண்கள். எல்லோரும் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டு உன்னத தசையில் இருந்து வருகிருர்கள். ஒவ்வொரு மாப்பிள்ளையும் அவருக்கு ரத்னமாக அமைந்திருக்கிருன். **ரத்னம்** என்றே ஒருவன். அவன் கம்பெனி வேலையில் ரூபாய் ஆயிரம் சம்பளம் வாங்குகிருன். ஒரு மாப்பிள்ளை கிரஸின் பெட்ரோல் ஆயில் ஏஜெண்டு. நல்ல வரும்படி. ஒருவன்தான் வடக்கே ரயில்வே ஸர்விஸில் இருக்கிருன் என்று கேள்வி. இந்த மாதிரி எல்லோரும் நல்ல ஸ்திதியில் இருக்கிருர்கள். குடும்பத்திலும் ஒட்டுதலையாக இருக்கிருர்கள். மாமனரிடம் விச்வாசமும் மரியாதையும் ஆக நடந்து கொள்கிருர்கள். சங்கர அய்யர் ஒரு "ரவுண்டு" பெண் வீடுகளில் சுற்றி வந்தாரேயானல் ஒரு வருஷம் சுகமாகக் கழிந்து விடும். ஒரு தரம் பூப்பிரதக்ஷிணமும் ஆகிவிடும்".

பஞ்சு இந்த வருணனையை முகவிகாஸத்துடன் ரஸித்து கேட்டுக் கொண்டிருந்தான். அதைக் கண்ட நான் "ஏன் உனக்கு அந்தமாதிரி ஒன்பது அல்லது பத்துப்பெண்கள்தான் பிறந்து விட்டால் வேண்டாமென்ரு சொல்லி விடுவாய்?" என்றுகேட்டேன். 'ஐய்யய்யோ! வேண்டாம்! வேண்டாம்! பெரியவாள் வாயால் அப்படி அனுக்கிரஹம் செய்யக் கூடாது"

"சங்கர அய்யர்போல் இருந்தாலுமா வேண்டாம்?" என்றேன் நான் மீண்டும் பரிகாசமாக.

"வேண்டவே வேண்டாம். சங்கர அய்யர் அந்த ஒன்பது பெண்களையும் கல்யாணம் செய்து கொடுக்க என்ன பாடு பட்டிருப்பாரோ! ஒன்பது தரம் அக்னிக்கொப்பறையில் விழுந்து வெந்து போயிருப்பார். இப்போதுஎன்னமோ குளிர்ந்து விட்டது. வேறு உபாயம் கண்டு பிடிக்கவேண்டியதுதான். ஆனல் ஐந்து பெண்கள் மட்டும்தானு? பிள்ளைக்குழந்தை ஏதாவது உண்டா இல்லையா?"

"ஒருபிள்ளை பிறந்து உடனே தவறிப்போய் விட்டது"

"அடடா! ஆனல் இனி பிறக்கலாம். புத்ர தோஷம் இருக்கும் போலிருக்கிறது. ஏதாவது பரிகாரம் செய்து பார்த்தாயோ?"



இருக்கிறதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். வயது எழுபதுக்கு மேல் என்ன குளிர்ச்சி வேண்டியிருக்கிறது?"

"அப்படியானல் இனி பெண் பிறக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனல் தடை உத்திரவு எல்லாம் பெயர்வைப்பது மாத்திரத்தில் ஒன்றும் பலிக்காது என்று விளங்கி

"பரிகாரமாவது மண்ணுங்கட்டியாவது! என் மாமனர் கூட ஏதோ ராமேச்வரம் போக வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிருர். எனக்குத் தான் சௌகரியப்படவில்லை".

"அவர் செலவில் அழைத்துச் செல்வதானல் உனக்கு என்ன அசௌகரியம்?"

"அவர் செலவுதான். பின்னே நானு செலவு செய்து கொண்டு ராமேச்வரம் போகப் போகிறேன்?"

"அப்படியானல் கூடிய சீக்கிரம் ஸேது ஸ்நானத்தை முடித்துக்கொள். புத்ரதோஷம் நீங்க வேண்டியது அவசியம்".

"எனக்கு இருக்கிற சொத்திற்கு வாரிசு இல்லாமல்தான் குறைவாயிருக்கிறதாக்கும். எப்படியாவது ஆளை விட்டால் போதுமென்று இருக்கிறேன். இதையெல்லாம் நினைத்தால் எங்கேயாவது ஓடிப்போய் விட்டால் தேவலை என்று தோன்றுகிறது".

"எங்கே ஓடுகிறது; பெண்ணைப் பெற்றுவிட்டு? அதெல்லாம் மனோதிடமில்லாத வீண் பேச்சு. இந்தக் குட்டி நல்ல அதிர்ஷ்டசாலியாக இருந்தாலும் இருக்கலாம். என்ன நக்ஷத்திரம்?

"யாருக்கு?"

"இப்போது பிறந்திருக்கிற குழந்தைக்கு!"

"பரணி".

"பரணியா? பரணியில் பிறந்தவர் தரணி ஆள்வார் என்பது வசனம்".

"பிள்ளையாயிருந்தால் நீங்கள் சொல்வது சரி".

"ஏன்? பெண்ணுயிருந்தால் என்ன குறைவோ? எத்தனையோ நான் பார்த்திருக்கிறேன். உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், ஸ்வாதி இதெல்லாம் அதிர்ஷ்ட நக்ஷத்திரங்கள், ஆணுனலும் சரி, பெண்ணுனலும் சரி. நீ கவலைப்படாதே! இதற்கு நல்ல பெயராகப் பார்த்து வை. அதிர்ஷ்டம் அடிக்கும் பார், நான் சொல்கிறேனே என்று பார்!"

"நீங்கள்தான் ஒரு பெயர் வையுங்களேன். உங்கள் வாக்கு பலிக்கட்டும்".

"ஹேமா என்று வையேன்".

"மூத்தவளுக்கு ஹேமா என்று வைத்தாகிவிட்டது. முதல் பெண் பிறந்ததும் சந்தோஷமாகத்தானிருந்தது. பெண்ணல்ல, "பொன்" என்றுதான் கருதினேம். அவள் நிறமும் அப்படி. இரண்டாவது பெண் நல்ல அழகு. அவளுக்கு பத்மா என்று பெயர் வைத்தோம். அது வரையில் பயம் ஏற்படவில்லை".

"பிறகு பயமேற்பட்டதும் ஸாவித்ரீ, ஸம்பூர்ணம் என்றெல்லாம் பெயர் வைத்து பய நிவர்த்திக்கு வழி தேடப் பார்த்தீர்கள்!"

"ஆமாம், ஆனல் நிவர்த்தியைக் காணேம். விர்த்திதான் ஏற்பட்டது".

"இருக்கட்டும் பஞ்சு, பயப்படாதே! இந்தக் குட்டி நான் சொல்வதுபோல் ரொம்ப அதிர்ஷ்டசாலியாயிருப்பாள். அதிருக்கட்டும் இந்த ஐந்தாம் பஞ்ச வர்ணக் கிளிக்கு என்ன பெயர் வைக்கலாம் என்றல்லவா என்னைக் கேட்டாய்".

"ஆமாம், நீங்கள் வைத்த பேருக்காகவாவது இனி பெண் பிறக்காமலிருக்கட்டும். யோசித்துச் சொல்லுங்கள்."

"மங்களம் என்று வைக்கலாமென்று சொன்னேனே".

"என் தாயார் பெயர் மங்களம். அதை வைத்தால் வீட்டில் கூப்பிடுவது சிரமமாயிருக்கும்".

"ஓஹோ அப்படியானால் சரி. பெயர்களுக்கு என்ன? மெய்யெழுத்தில் ஆரம்பிக்க வேண்டுமா? உயிரெழுத்தில் ஆரம்பிக்க வேண்டுமா! ஒரே பதமாக இருக்க வேண்டுமா? பதத் தொடராக வேண்டுமா?"

"இதுவே கடைசிப் பெண்ணாக இருக்கவேண்டும் என்பதற்குப் பொருத்தமான பெயரை அல்லவா தேடிப் பிடிக்க முயன்றோம்".

"ஆமாம், ஆமாம். ஞாபகம் வந்துவிட்டது. சற்று இரு பார்க்கிறேன் — பலே! பேஷ்! ஒரு பெயர் இருக்கிறது. உன் அதிர்ஷ்டம்தான் அது எனக்குத் தோன்றியதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். இனி கவலைப்படாதே.

"என்ன பெயர் என்று சொல்ல மாட்டேன் என்கிறீர்களே".

"அதைத்தானே சொல்லப் போகிறேன்"

"சரி சொல்லுங்கள்".

"ரொம்ப உயர்ந்த பெயர்".

"இன்னமும் நீங்கள் சொல்லவில்லையே",

"சொல்லாததற்கா இப்போ ஆரம்பித்திருக்கிறேன். பெண் முகம் நல்ல லக்ஷணமா இருக்கோ, இல்லையோ?"

"நல்ல களையான முகம். கள்ளம், கபடு இல்லாத சிரிப்பு. அப்படி இருப்பதால்?"

"அப்படித்தான் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். அந்தப் பெயர் வைத்தால் அப்படித்தான் இருக்கவேணும்".

"அதாவது?"

"உமா என்ற பெயர்".

"உமாவா?"

"சரிதான். நான் சொன்னது சரியாய் போய்விட்டதல்லவா? நீ கேள்விப்பட்டிருக்கவே மாட்டாய்".

"அது எப்படியானாலும் போகட்டும். இந்தப் பெயருக்கு நமது ஸங்கல்பபடி இருக்க வேண்டிய சக்தி இருக்கிறதா என்பதல்லவா முக்யபிரச்னை?"

"இல்லாத போனால் நான் சொல்வேனா. ஆதாரத்தோடு சொல்கிறேன் கேள். உனக்கு **உமா** என்ற பதத்திற்கு அர்த்தம் தெரிந்திருந்தால் நீ இப்படி கேட்கமாட்டாய்".

"உமா என்றால் என்ன அர்த்தம்?"

"நீ குமார ஸம்பவம் படித்திருக்கிறாயோ?"

"குமாரனை யார் கண்டார்கள்? ஸம்பவத்தை யார் கண்டார்கள்? எனக்கு ஸம்ஸ்கிருதம் சுட்டுப் போட்டால்கூட வராது".

"பஞ்சு நீ அப்படி சொல்லிக்கப்படாது. ஆதி தம்பதிகளுக்கு பிள்ளை பிறந்த கதையை வாசித்

தால் உனக்கும் பிள்ளை பிறக்கும். அதை அவ்வளவு அலக்ஷிய மாய் பேசாதே''.

"சரி, குமார ஸம்பவத்தில் என்ன சொல்லி இருக்கிறது ?''

"பார்வதி பரமேச்வர விவாஹம். சுப்ரமண்யோத்பத்தி. ஒவ்வொரு கல்யாணத்திலும் கௌரி கல்யாணம் பாடுகிருர்கள். ஒவ்வொரு கல்யாணமும் குமாரோத்பத்தியில் ஸபலமாகவேண்டும்''.

"அது இருக்கலாம். குமார ஸம்பவத்திற்கும், உமாவுக்கும் என்ன சம்பந்தம்? அது அல்லவா இப்போது நம்முடைய பிரகிருத விஷயம்''.

"அதைச் சொல்ல வேண்டுமா? சரி கேள்:

பார்வதி பரமேச்வரனை பர்த்தாவாக அடையும் பொருட்டு தபஸிற்கு புறப்பட்டாள். அப்போது மேனு அவளை தபஸிலிருந்து தடுப்பதின் பொருட்டு "**உமா**" என்று கூறினுள். பார்வதியின் இளம் பிராயமும், மெல்லிய உடலும் தபஸிற்குலாயக்கில்லை என்று அர்த்தம்.''

"இருக்கலாம். அதனுல் நமக்கு என்ன ஆயிற்று ?''

"உமா என்ற பெயரை வைத்தால் இனி உனக்கு பெண்வேண்டாம் என்ற உன் எண்ணத்திற்கு பொருத்தமாயிருக்கும்.''

"அதுதானே எப்படி என்று என்று புரியவில்லை.''

"மேனு பார்வதியை உம்,உம், வேண்டாம், உம், உம், வேண்டாம், என்று தடுத்தாள். நீயும் உனது ஐந்தாவது பெண்ணிற்கு உமா என்று பெயர் வைத்தால் உம், உம், இனிமேல் பெண் வேண்டாம். வேண்டாம் என்று தடுப்பதாக அர்த்தம்.''

பஞ்சு சிரித்தான் நானும் சிரித்தேன். "ஒரு சந்தேகம்'' என்ருன் பஞ்சு.

"என்ன'' என்றேன்.

"உம், உம், வேண்டாம் என்ருல் இந்தப்பெண்ணே வேண்டாம் என்று அர்த்தமாகுமே தவிர, அடுத்த பெண் வேண்டாம் என்று எப்படி அர்த்தமாகும்.?''

"இதுதான் வந்துவிட்டதே. இதைப்பற்றி இனி தடைசெய்து என்ன பிரயோஜனம்!''

"சரி, பெரியவர்களின் வாக்கின்படிநடக்கவேண்டியதுதான் ஆனுல் எனக்கு தோன்றுகிறதையும் சொல்லி விடுகிறேன். உம், உம், வேண்டாம் என்று மேனு சொன்னுளே ஒழிய பார்வதி தபஸுக்கு போவதை நிறுத்தவில்லை. அது போல் நாம் "உமா, உம், வேண்டாம்.'' இனிமேல் வேண்டாம் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான், **ஸீரிஸ்** நிற்குமென்று தோன்றவில்லை. அதாவது "உமா'' முற்றுப்புள்ளியாகாது, **கமா** என்றுதான் தோன்றுகிறது.''

"அப்படி ஏற்பட்டால் வேரே பெயருக்கே இனி யோசனை செய்யாதே, **உமா ஸீரீஸ்** நெம்பர்-1, 2, 3 என்று தொடர்ந்து பெயரிட்டுக்கொண்டு போ, பகவான் விட்ட வழி விடட்டும்.

செட்டி நாடும் தமிழும்

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

செட்டி நாடு தமிழகத்தில் ஒரு சிறு பகுதி; எனினும் இப் பகுதியில் வாழும் மக்கள் தமிழ் மொழிக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிடற்கரியது. அதை ஓரளவு தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

செட்டிநாடு என்பது இராம நாதபுர மாவட்டத்துத் தேவ கோட்டை ரெவினியூ டிவிசன், புதுக்கோட்டைத் தனி அரசாக இருந்த பகுதியைச் சேர்ந்த திருமய்யம் வட்டம்—இவற்றில் அடங்கிய 96 (இப்போது 78) சிற்றூர்களையே குறிக்கும். இங்கு வாழும் மக்களில் மிகப் பலர் செட்டியார் அல்லாதவரே எனினும், கல்வி-பொருள்-செல் வாக்கு ஆகியவற்றால் ஏனை யோரை விடச் செட்டியார்களே சிறப்பாக விளங்குவதால், இப் பகுதி ''செட்டிநாடு'' என்று பெயர் பெற்றிருக்கிறது. இத் தகைய ஒரு சிறப்பு தமிழகத் தில் வேறு எந்தச் சமூகத்துக் கும் இல்லையெனலாம்.

மிகப் பழங்காலத்திலிருந்தே, செட்டியார்கள் தமிழ் மொழி யில் எல்லையற்ற பற்றுடையவ ராக இருந்து வந்திருக்கின்ற னர். பொருட் செல்வத்தை யெல்லாம் துறந்து, துறவறச் செல்வராக விளங்கிய பட்டினத் தடிகள் இச் சமூகத்தைச் சேர்ந்தவரே. புறநானூற்றில் சில பாடல்களைப் பாடியுள்ள கணியன் பூங்குன்றன் என்பவர் செட்டிநாட்டைச் சேர்ந்தவரே, கணியன் பூங்குன்ற நாடு என்ற பெயருடன் பத்து கிராமங்கள் இன்றும் செட்டிநாட்டில் மகி பாலன் பட்டியைச் சுற்றிலும் உள்ளன. அவற்றுக்கு நடுநாய கமாக உள்ள குன்றில், சாசனக் கல்வெட்டுக்களை இன்றுங் காண லாம். இக் குன்று நெற்குப்பை- மகிபாலன்பட்டிச் சாலையின் ஓரத்திலேயே இருக்கிறது.

புறநானூற்றில் குறிப்பிடப் பெற்றுள்ள மற்றொரு புலவ ரான ஒக்கூர் மாசாத்தியார் என்பவரும் செட்டிநாட்டவரே. ஒக்கூர் என்னும் ஊர் சிவகங் கைக்கு அருகாமையில் இருந்து வருகிறது. பாரி வள்ளலும் செட்டிநாட்டவரே. பரம்பு நாடு, பரம்பு மலை என்பவையே இப் போது பிரான்மலை என மருவி வழங்குகின்றது. அங்கு, வர லாற்றுச் சின்னங்கள் ஒன் றிரண்டை இன்றளவுங் காண லாம், கபிலரும் செட்டி நாட் டைச் சேர்ந்தவரே என்று கூறு வாருமுளர். சிலப்பதிகாரத்தி லும், செட்டியார்கள் இடம் பெறுவதைத் தமிழன்பர்கள் நன்கறிவர்.

கவிச் சக்கரவர்த்தியான கம் பர் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தைச் செட்டிநாட்டி லேயே கழித்தார். அவர் உயிர் நீத்தது நாட்டரசன் கோட்டை யிலே ஆகும். அங்கு கம்ப ருடைய சமாதியைச் சுற்றி ''கம்பன் கோவில்'' அமைக்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும், பங்குனித் திங்களில் அஸ்த நட் சத்திரத்தன்று, அங்கு கம்பன் திருநாள் சிறப்பாக நடை பெற்று வருகிறது. இதற்கு முந்திய இரண்டு, மூன்று நாட் களில் கம்பரையும் அவருடைய

காவியத்தையும் பற்றி "முத்தமிழ்த் துறையில் முறை போகிய உத்தமர் பலர்" சொற்பொழிவாற்றுவதும், "கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்க" அன்பர்கள் கூடுவதும், செட்டிநாட்டின் தலை நகராகிய காரைக்குடியில்தான்.

சென்ற நூற்றுண்டில் காலமான புலவர்களுள் செட்டிநாட்டார் இருவர் குறிப்பிடத் தக்கவர்கள். ஒருவர் பாடுவார் முத்தப்ப செட்டியார். இவர் இயற்கையாகவே புலமை நிரம்பியவர். நிகழவிருப்பவற்றை முன் கூட்டியே தெரிவிக்கும் பேராற்றல் நிறைந்தவர். ஆங்கிலேயருடைய ஆட்சி நீங்கிய பிறகு செட்டியார்களின் செல்வமும் குறையும் என்று அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே பாடியது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்பதை செட்டிநாட்டிலுள்ள நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக நாள்தோறும் உணர்ந்து வருகிறோம். அவருடைய பாடல் ஒன்றை மட்டும் ஈண்டு தருவோம் :—

காடுவெட்டிப் போட்டுக் கடிய
நிலந்திருத்தி

வீடுகட்டிக்கொண்டிருக்கும் வேள்
வணிகர் - வீடுகட்கு

அன்றைக்கு வந்திட்ட அம்மா
இலக்குமி நீ

என்றைக்கும் நீங்கா திரு

மற்றொருவர் சொக்கலிங்க ஐயா என்பவர். இவர் 70 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்; சிவஞான போதத்துக்கு உரை எழுதியிருப்பவர்; வேதாந்திகளை மறுத்தவர்; நால்வர் பிள்ளைத் தமிழைப் பாடியிருப்பவர்; கம்பர் காலத்திற்கும் பாடுவார் முத்தப்ப செட்டியார் - சொக்கலிங்க ஐயா காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் செட்டிநாட்டில் வாழ்ந்த புலவர்கள் மிகப் பலர். அவர்கள் புராணங்களையும் பதிகங்களையும் இதுபோன்ற வேறு பல சமய நூல்களையும் இயற்றியுள்ளனர். சில்லரையாகத் தனிப் பாடல்கள் பாடியவர்களும் மிகப் பலர். சைவத்தை வளர்த்த செட்டியார்கள் அதனோடு சேர்த்து பல நூற்றுண்டுகளாகத் தமிழையும் வளர்த்து வந்ததில் வியப்பில்லை. இக் கட்டுரையை மிகவும் விரிவாக்க விருப்பமில்லாமையால், இப் புலவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடவில்லை.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கு ஏடுகள் கொடுத்த சிறப்பு செட்டிநாட்டில் பல ஊர்களுக்கு உண்டு. இவற்றுள் குறிப்பிடத்தக்க ஊர் மிதிலைப்பட்டி என்பதாகும். இக் காலத்தில் செட்டிநாட்டில் இருந்துவரும் புலவர்களைப் பற்றி கூறுவதற்கு முன், பொதுவாக இங்குள்ள மக்களின் தமிழ்ப் பற்றைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

திரை கடலோடியும் திரவியம் தேடுபவர் செட்டியார்கள்! இவ்வாறு பொருளீட்டச் செல்லும் நாடுகளில் வழங்கும் [சிங்களம், பர்மா, மலாய், அன்னம், சாவா ஆகிய பல] மொழிகளை தங்களுடைய வியாபாரத்திற்காகக் கற்றுக் கொள்ள நேர்ந்த போதிலும், செட்டியார்கள் இன்றளவும் தங்களுடைய கணக்குகளைத் தமிழ் மொழியிலேயே எழுதி வருகின்றனர். அம் மட்டோ! பெரும்பாலும், தங்கள் கணக்குகளில் தமிழ் இலக்கங்களையே (க, உ) குறிப்பிட்டு வருகின்றனர். தமிழ் நெடுங்கணக்கைக் கற்பது இன்றியமையாத கல்வி என்ற கருத்து செட்டியார்

களிடம் வேரூன்றியிருக்கிறது. சென்னையிலும் வேறு இடங்களிலும் வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்கள் - அரசாங்கத்தாரைப் பின்பற்றி - ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 இறுதியாகத் தங்கள் கணக்குகளை எழுதி வருகின்றனர். ஆனால், செட்டியார்கள் தமிழ் ஆண்டு முறையை ஒட்டியே தங்கள் கணக்குகளை எழுதி வருகின்றனர். இன்னும் ஆண்டு தோறும், புரட்டாசித் திங்களில் வீடுகளில் இராமாயண ஏடுகளைப் படிக்கும் வழக்கமும், ஐப்பசித் திங்களில் ஆற்றங் கரைகளில் காவிரிப் புராணம் படிக்கும் வழக்கமும் செட்டியார்களிடம் (சிறப்பாகப் பெண்பாலரிடையே) இருந்து வருகிறது. திருமண விழாக்களில், சிறந்த தமிழ் நூல்களை அச்சிட்டு அன்பளிப்பதும், மணமக்களுக்கு நண்பர்கள் தமிழ் நூல்களை வழங்குவதும் நடைமுறையிலுள்ள பழக்கங்களிற் சில. செட்டிநாட்டில் வீடு தோறும் தமிழ் நூல் நிலையங்களைக் காணலாம். மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையிலும் கொப்பனாபட்டிக் கலைமகள் கல்லூரியிலும் உள்ள நூல் நிலையங்களில் கிடைத்தற்கரிய தமிழ் நூல்கள் சிலவற்றைக் காணலாம். இவ்வாறெல்லாம், தமிழ் நூல்களை வாங்குவதில் செட்டிநாடு சிறந்து விளங்குவதைப் போல, இவற்றை வெளியிடுவதிலும் செட்டிநாடு முன்னிலையில் இருக்கிறது. இப்போது தமிழ் நூல்களை வெளியிட்டு வரும் செந்தமிழ் நிலையம், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், கார்த்திகேயினி பிரசுராலயம், டியூகோ பப்ளிஷர்ஸ், ஸ்டார் பிரசுராலயம், பாரி நிலையம், இன்ப நிலையம், பாரதி பதிப்பகம், வெள்ளையன் பதிப்புக் கழகம், நவயுகப் பிரசுராலயம், புதுமைப் பதிப்பகம், பழநியப்பா பிரதர்ஸ். புக்ஸ் இந்தியா லிமிடெட், அன்பு நிலையம் ஆகிய யாவும் செட்டியார்களுடைய நிருவாகத்திலிருப்பவையே. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வளர்ச்சியிலும் செட்டியார்களுக்குப் பங்கு உண்டு. கலித்தொகை போன்ற பல சங்க இலக்கியங்களுக்கு மிக மலிவான விலையில் உரை வெளியிட்ட பெருமையும் சிறப்பும் பாகனேரி காசி விசுவநாதன் செட்டியார் அவர்களுக்கு உரியது. அவர்களுடைய தமிழ்ப் பற்றை எவ்வளவு பாராட்டினாலுந் தகும்.

நூல் வெளியீட்டுத் துறையினின்றும், இதழ்கள் வெளியீட்டுத் துறைக்குச் செல்லுவோம். தூய தமிழ் நடையில், - தமிழ் நாள் இதழ் ஒன்றை - மதுரையிலிருந்து ''தமிழ்நாடு'' என்னும் பெயரால் நடத்தி வருபவர் கலைத் தந்தை கருமுத்து தியாகராசச் செட்டியார் ஆவார்கள். ''குமுதம்'', ''பொன்னி'', ''பூஞ்சோலை'', நீங்கள் எல்லோரும் படித்து மகிழும் ''காதல்'' ஆகிய இதழ்களை நடத்தி வருபவர்கள் செட்டியார்களே. கடல் கடந்த நாடுகளிலும், செட்டியார்கள் தமிழில் பல இதழ்களை நடத்தியிருக்கின்றனர், கொழும்பிலிருந்து வெளிவரும் ''வீரகேசரி'', கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் ''தமிழ் நேசன்'' ஆகிய நாள் இதழ்கள் செட்டியார்களால் வெளியிடப்படுபவையே. இரங்கூனிலிருந்து ''தனவணிகன்'' இதழைச் சிறப்பாக வெளியிட்ட திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் பின்னர் சென்னையில் ''குமரி மலர்'' என்ற மாத இதழைத் தொடங்கினார்கள். மறைந்துபோன இதழ்களில், ''சக்தி'', ''குமரன்'',

"ஊழியன்" ஆகிய மூன்றும் மிகச் சிறப்பாகத் தமிழர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. "நல்ல தமிழுக்கு நவசக்தியும் ஊழியனும்" என்று 25 ஆண்டுகளுக்கு முன் சொல்லுவார்கள். "ஊழியனை"ப் பின்பற்றிக் காரைக்குடியிலிருந்து வெளிவரும் "வாரச் செய்தி" தமிழ்ப் பணியாற்ற முயன்று வருகிறது. "சிவநேசன்" என்பது மறைந்துபோன சமய இலக்கிய இதழ். இது பலவான்குடியிலிருந்து, சைவத் திருவாளரும் சிறந்த தமிழ் அறிஞருமான சிவநேசன் இராமசாமி செட்டியார் அவர்களால் வெளியிடப் பெற்றது.

செட்டியார் சமூகத்துச் சிறுவர்கள் கடல் கடந்த நாடுகளிலும் தமிழ்க் கல்வி பெற இயலுமாறு இரங்கோனில் "கம்பை" என்னும் பகுதியில் ஓர் உயர் நிலைப் பள்ளி அமைக்கப் பட்டது. அது, கடந்த சில ஆண்டுகள் வரையிலும் நடைபெற்று வந்தது. சிங்கப்பூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்காக ஒரு பேராசிரியக் கட்டில் ஏற்படுத்த அங்கு வாழும் செட்டியார்கள் பெரும் பொருளை உதவியுள்ளார்கள். கோலாலம்பூரில், திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்களுடைய முயற்சியால் அங்குள்ள தமிழ்ப் பண்ணை நல்ல முறையில் தமிழ்த் தொண்டு செய்து வருகிறது.

கடல் கடந்த நாடுகளில் தமிழை வளர்க்க இவ்வளவு பாடுபடும் செட்டியார்கள் தங்கள் நாட்டில் தமிழை வளர்க்கவும் பெரிதும் முயன்றிருக்கிறார்கள். வங்காளத்தில், சாந்திநிகேதனில் இரவீந்திரநாத தாகூர் ஏற்படுத்திய பல்கலைக் கழகத்தில், தமிழ் நூல் நிலையம் ஒன்றை அமைக்கப் பெரும் பொருள் உதவியவர் ராசா சர் அண்ணாமலைச் செட்டியார் ஆவார். மலையாள நாடாகிய திருவாங்கூரில், பல்கலைக் கழகத்தில் தமிழுக்கென ஒரு பேராசிரியப் பதவியை நிறுவுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியவர் வள்ளல் டாக்டர் அளகப்ப செட்டியார் அவர்கள். 1928-ல் தெலுங்கருக்குத் தனிப் பல்கலைக் கழகம் ஏற்பட்ட பின்னர் தமிழ் மொழிக்கென்று சிறந்த முறையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க முன் வந்த தமிழர் ஒரு செட்டியார் தான் என்பதை அறியாத தமிழ் மக்கள் இல்லை எனலாம். தமிழ் இசை இயக்கம் ஒன்றைத் தோற்றுவித்த சிறப்பும் அவருக்கே (ராசா சர் அண்ணாமலைச் செட்டியாருக்கே) உரியது. தந்தை துவக்கி வைத்த தமிழிசை இயக்கத்தை தளர்ந்து விடாமல் வளர்க்கும் முயற்சியில் இன்று ஈடுபட்டிருக்கிறார் தனயன் ராசா எம். ஏ, முத்தையா செட்டியார் அவர்கள். சென்னையில் இவர் முயற்சியால் அமைக்கப்பட்டுள்ள தமிழிசை மண்டபம் செட்டிநாட்டவர் தமிழுக்கு செய்யும் சேவைக்கு சிகரம் வைத்தது போல விளங்குகிறது. மற்றும் ராசா எம். ஏ. முத்தையா செட்டியார் அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் செய்து வரும் சேவைகள் நாடறிந்த விஷயமாகும்.

தமிழ்ப் புலவர்களையும் அறிஞர்களையும் சிறப்பிப்பதிலும் செட்டிநாடு எப்போதும் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் சிறந்து விளங்கி வருகிறது. விபுலானந்த அடிகளைத் தமிழ் நாட்

டுக்கு அறிமுகப்படுத்தியது சொ. முருகப்பா அவர்கள் வெளியிட்ட "குமரன்" என்னும் இதழ். அவர் இயற்றிய யாழ் நூல் முற்றுப்பெற உதவி செய்து, அதை அரங்கேற்றி வைத்தவர் நற்சாந்துபட்டி பெ. ராம ராம சிதம்பரம் செட்டியார் அவர்கள். நாகர்கோவில் தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு "கவிமணி" பட்டம் கொடுத்து அவர்களைப் பாராட்டியது ஆத்தங்குடியில் வாழும் செட்டியார்களே. கவிமணியின் பாடல்களை முதலில் வெளியிட்டது "குமரன்" இதழே. வாழையடி வாழையாகத் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வரும் வள்ளல்கள் செட்டிநாட்டில் மிகுதியாக உள்ளனர். அத்தகையவருள் நாம் இதுவரை குறிப்பிடாத ஒருவர் தேவகோட்டை, சைவ சித்தாந்தப் புரவலர் தமிழ் வள்ளல் சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் ஆவார்கள்.

எழுத்தாளர்களுக்குச் செட்டிநாட்டில் என்றுமே பஞ்சமிருந்ததில்லை. தமிழகத்துக்கு எழுத்தாளர்களைத் தந்துகொண்டே வரும் ஊற்று என்று செட்டிநாட்டைச் சொல்லலாம். மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்களைத் தமிழன்பர்கள் நன்கு அறிவார்கள். வடமொழியின் சிறப்பைப் பற்றிப் பல அன்பர்கள் மயிலாப்பூரிலும் ஏனைய இடங்களிலும் நாள்தோறும் பேசி வருகிறார்கள். ஆனால் வட மொழியிலேயே சிறப்பாக உள்ள நாடகங்களைத் தமிழில் பெயர்க்க அவர்கள் முன்வரவில்லை. இப் பணியில் ஈடுபட்ட முதல் தமிழர் பண்டிதமணியே ஆவார். இவ்வாறே ஆங்கிலத்திலிருந்து பல இலக்கியங்களை வி. ஆர். எம். செட்டியார் அவர்களும், இந்தியிலிருந்து பல நூல்களை கணமுத்தையா அவர்களும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். பிரெஞ்சு மொழியிலிருந்து பல நூல்களை மொழிபெயர்த்தும், தாமே பல புதிய நூல்களை எழுதியும் புகழ்பெற்ற சுவாமி சுத்தானந்த பாரதியார் செட்டிநாட்டின் எல்லையாகிய சிவகங்கையில் தோன்றினார். அவருடைய புகழுக்கும், அவருடைய நூல்கள் வெளிவருவதற்கும் காரணமாக இருந்தவர்கள் செட்டியார்களே ஆவார்கள். செட்டிநாட்டுக்கே நடுநாயகமாக விளங்குவது, குன்றக்குடி என்னும் தலம். இங்குள்ள திருவண்ணாமலை ஆதீனத் தலைவராக விளங்குபவர் தலைசிறந்த சொற்பொழிவாளரும் தமிழ் அறிஞருமான திருப்பெருந் திரு அருணாசல தேசிக சுவாமிகள். இவ் அடிகளாருடைய ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களில் தமிழிலேயே அருச்சனைகள் நடந்து வருவது மகிழ்ச்சிக்குரியது. அடிகளாருடைய தமிழ்த் தொண்டுக்குச் செட்டிநாட்டில் பேராதரவு இருந்து வரும் என்பது ஒருதலை.

சிறந்த அறிஞர்களாக விளங்கும் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, வெ. சாமிநாத சர்மா, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரைப் பிள்ளை ஆகியவர்களுடைய தமிழ்த் தொண்டு சிறந்து ஓங்கி வருவதற்குச் செட்டிநாடும் ஓரளவு துணை செய்திருக்கிறது. திரைப்பட நடிகராக விளங்கும் சுப்பு,

செட்டிநாட்டைச் சேர்ந்த கொத்தமங்கலம் என்னும் கிராமத்தவரே.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் புகழை நாடறியச் செய்த சின்ன அண்ணமலை, கம்பனின் புகழை நாடெங்கும் பரப்பிவரும் சா. கணேசன், சென்னை நகராண்மைக் கழகத்தில் தமிழில் முழக்கிய முன்னுள் மேயர் இராமசாமி நாயுடு, பிரயாண இலக்கியம் என்ற புதுவகை இலக்கியம் தமிழ் மொழியில் தோன்றத் துணை செய்த உலகம் சுற்றிய தமிழரும் மகாத்மா காந்தியடிகளின் வாழ்வைப் படமாக எடுத்தவருமான ஏ. கே. செட்டியார் போன்ற பலரைப் பெற்றெடுத்த பெருமை செட்டிநாட்டுக்கு உண்டு. தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்குப் பெரும் பொருள் உதவி செய்துள்ள செட்டியார்கள் மிகப் பலர். இக்கழகத்தின் பொருளாளராக இப்போது இருந்து வருபவர் ட்ரோசன் அண்ணமலைச் செட்டியார். முறைப்படி கற்றுப் பட்டம் பெற்று, வாழ்நாள் முழுவதும் தமிழ்த் தொண்டு செய்து, தமிழாசிரியர்களாக இருந்துவரும் செட்டியார்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இவர்களுள், அண்ணமலைப் பல்கலைக் கழகத்துத் துணைப் பேராசிரியர் (நெற்குப்பை) பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதச் செட்டியார் அவர்களையும், காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் மேலைச்சிவபுரி வ. சுப. மாணிக்கம் அவர்களையும் தமிழகம் நன்கு அறியும்.

பழமையான தமிழ்ச் சொற்கள் சிதைந்த உருவில் செட்டிநாட்டில் நாள்தோறும் வழங்கி வருகின்றன. இவற்றுக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இப்பகுதியில், பேச்சுத் தமிழில் வழங்கும் அரிய சொற்களைத் தொகுத்து வெளியிடச் சிலர் இப்போது முன் வந்திருப்பது மகிழ்ச்சிக் குரியது. செட்டியார்கள் எழுதிக்கொள்ளும் திருமண உடன்பாடு, ''இசைகுடிமானம்'' (இசைவு பிடிமானம்) எனப் பெயர் பெறும். இதில் வரும் சொற்கள் கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளும் தோற்றுப்போகுமாறு அமைந்துள்ளன. இவற்றிலிருந்து, தூய தமிழ் மொழியைப் பாதுகாப்பதில் இம் மக்களுக்கு இருந்துவரும் ஆர்வம் நன்கு புலனுகும். தமிழ் மொழி, ஆட்சி மொழியாக அமைய வேண்டுமென்ற கிளர்ச்சி வலுத்து வருகிற இந்நாளில், செட்டியார்களுடைய தமிழார்வமும் தமிழ்த் தொண்டும் இன்னும் பல மடங்கு பெருகும் என்பது உறுதி. வாழ்க செட்டிநாடு! வாழ்க தமிழ்!

ஒரு காதலனிடமிருந்து எவ்வாறு காதலைப் பிரிக்க முடியாதோ, அது போலவே தேசீய வீரர்களின் மனதிலிருந்து தேச பக்தியையும், தேசத்திற்காக மரணத்தை வரவேற்கும் ஆண்மையையும் பிரிக்க முடியாது.

— வீர சவர்க்கர்.

[library stamp]

ஜெகசிற்பியன்

உலையிலிட்ட இரும்புத் தகடு நிறம் மாறுவதைப்போல மாலைச் சூரியன் வெம்மை தணிந்து, பொன்னிறமாக மாறி, மேற்றிசையில் சரிந்துகொண்டிருந்தது.

நந்தவனத்தின் நடுவிலே கெடு கெடு வென்று நிமிர்ந்து நின்று கொண்டிருந்த சித்திர கூடத்தின் மத்தியில், போடப்பட்டிருந்த தங்க ஆசனத்தில், சோகத்தின் தலைமகனைச் சோர்ந்து அமர்ந்திருந்தான் அசோகன். ஒளியுமிழும் அவனது கண்கள் அன்று ஒளியிழந்து மங்கியிருந்தன. ஆலிலையில் இருக்கும் எண்ணற்ற நரம்புகள் போல அவனுடைய வெளிறிய பரந்த நெற்றியில் தாபக் கீறல்கள் பல தடமிட்டுக்கொண்டிருந்தன.

நீண்டநேர சிந்தனைக்குப் பின் நெடுமூச்செறிந்தவாறே மெல்லத் தலைநிமிர்ந்தான் அசோகன். வடக்கே இமயகிரியின் பனிமயத் தோற்றம் அவன் சோர்வுற்ற கண்களுக்குச் சற்றே இதமளித்தது, மேற்கே, பச்சைமலைத் தொடரும், அதையடுத்த பரந்த புல்வெளிப்பிரதேசமும், அவன் வாழ்க்கை நூலில் வாசித்து முடிந்துபோன ஒரு சம்பவ ஏட்டை புரட்டிக் காட்டுவனவாய் விளங்கின !....

அந்த மலைப்பிரதேசப் பெருவெளியில்தானே அவன் கலிங்கப்போரை நடத்தி, கருணை என்பது என்னவென்று அறிந்து புரிந்து கொண்டது !....

அசோகன் கண்ணிமைக்காமல் அந்தப் பசுமை வெளியையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சூன்யப் பிரதேசத்திலிருந்துபல்லாயிரம் போர் வீரர்களின் அவல மரண ஒலி அலையலையாக எழுந்து வந்து அவன் நெஞ்சிரலை அலைக்கழிப்பதைப் போன்றதொரு பிரமை அவனுக்கு ஏற்பட்டது !....

சட்டெனத் தன் கண்ணைக் கைத் தென் புறம் திரும்பினான் அசோகன். அங்கிருந்து ஐந்து காதம் தொலைவில், ஒரு பெரிய நீலச் சேலையை நெடுக விரித்து விட்டாற் போல பிரம்மபுத்திரா நதி, தன் முழுப் பிரவாகத்துடன் வளைந்தும் நெளிந்தும் ஓடிக் கொண்டிருந்தது,

அந்தப் புண்ணிய ஆற்றின் புதுப்புனல் கோலத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் அசோகன்.

அவன் மனம் இன்று 'பிரிவாற்றாமை' எனும் அவல ஆழியில் இறங்கிவிட்டிருந்தது. அந்த ஆழியிலிருந்து கரை யேறவே இந்தச் சித்திரக் கூடத்தில் வந்து தனிமையில் அமர்திருந்தான் அவன். ஆயினும், அந்த அவல ஆழியி லிருந்து அவ்வளவு எளிதில் அவன் மனம் கரையேற இயலா மல் தத்தளித்துக் கொண்டே இருந்தது. என்னதான் முயன் றாலும் அது எப்படி சாத்திய மாகும்? தன் அன்பில் விளைந்த அமுதச்சிலையான சங்கமித் திரையை பிக்ஷுணிக் கோல மாக்கிக் கடல்கடந்த நாடான ஈழத்திற்கு புத்தமத போதம் புரிவதற்கென அனுப்பி வைக்க இன்றுதானே அவன் இசைந்து விட்டு வந்திருக்கிறான்.

துன்பம் என்ற சொல்லின் பொருளைக்கூட அறிய விடாமல் கண்ணின் கருமணி போல் காத்து, தன் உயிரினும் மேலா கப் பேணி வளர்த்து வந்த அருமை மகளை, நாடு, நகரம், நான்கு பருக்கைச் சாதம் ஆகிய எவையுமே சொந்த மில்லாத ஒரு நாடோடி சந்நியாசினியைப் போலல்லவா இன்று அவன் ஆக்கி விட்டான்! ஈழத்துக்குச் செல்லப் போகும் சங்கமித்தி ரையை அவன் மீண்டும் காண் பான் என்பது என்ன நிச்சயம்? இந்தத்தசை தளர்ந்த வயதில், தன் செல்வக் குமாரியின் தண் முகத்தைப் பார்த்துக் கொண் டிருக்கக்கூட அவன் கொடுத்து வைத்திருக்கக் கூடாதா! அவன் வாழ்க்கையில் எண்ணித் தொலையாத துன்பங்களையும் துயரங்களையும் மனத்தால் அனு பவித்திருக்கிறான். ஆனால் இன்று அவன் தன் மகளைப் பிரிய வேண்டிய நிர்ப்பந்த துயரம் சகிக்க முடியாததா யிருந்தது!

'உலகமும், அதில் நிறைந் துள்ள சகல ஜீவராசிகளும் பாசம், அன்பு என்ற இரு மகத் தான பிணைப்பில் இணைந்தே இயங்குகின்றன' என்ற புத்த பிரானின் அருள் வாக்கு இப் போது அவன் நெஞ்சத்திரை யில் மின்னலிட்டது. அந்த பாசம் அன்பு என்ற இரு மந்திர சக்திகளும், பெற்ற மனத்திலி ருந்துதான் பெரும் அளவில் பெருக்கெடுக்கின்றன என்பதை யும் இப்போது அவனால் ஓரள வுக்கு அறிய முடிந்தது.

அசோகன், தான் அமர்ந்தி ருந்த ஆசனத்தைவிட்டு மெல்ல எழுந்து நின்றான். மரமரத்து விட்டிருந்த தன் கைகளை பின் புறமாகச் சேர்த்துக் கோத்துக் கொண்டு, கூடத்தின் விளிம் பண்டை வந்து நின்றான்.

அரண்மனைக்குச் சற்று அப் பாலுள்ள ஓர் பாதையில், பிரம் மபுத்திரா நதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது-பத்து பதினைந்து பேர்கள் கொண்ட ஒரு சிறு கூட்டம். தங்கச் சூரிய னின் செவ்வொளி அப்பாதை யில் விழுந்து, அதில் நடந்து செல்வோரின் உருவங்களை நன்கு தெளிவாக்கிக் காட்டியது.

அக் கூட்டத்தின் மத்தியி லிருந்து விட்டு விட்டு எழும் சங்

கின் ஒலமும், தபபட்டையின் ஒலியும் அசோகன் கவனத்தை அழுத்திப் பிடித்து இழுத்தன. சுருங்கியிருந்த தன் இமைகளைப் பரக்க மலர்த்தி உற்றுக் கவனித்தான்.

பத்துப் பதினைந்து பேராக கூடிச்செல்லும் அக்கூட்டத்தின் நடுவில், ஒருவாலிபன், சின்னஞ்சிறு செப்புக்குடமொன்றை ஏந்திச் சென்று கொண்டிருந்தான். அச்சிறிய குடத்தின் வாய்ப்புறம் மலர்களாலும், மாவிலைகளாலும் சுற்றி மறைக்கப்பட்டிருந்தது. மிக்க பய பக்தியுடன் அதை அவன் சுமந்து சென்று கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்திருந்த மற்றவர்கள் துக்கத்திற்கறி குறியாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடந்து கொண்டிருந்தனர்.

அசோகன் விழியசைக்காமல் அக்கூட்டத்தையே விறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கூட்டம், நதியின் தீரத்தை அடைந்தது. எல்லோரும் நதியின் கரையில் நின்றுக்கொண்டிருக்க, செம்பேந்தி வந்தவன் மட்டும் கொப்பளித்துக்குமுறிப் பாயும் வெள்ளப் பெருக்கில் இறங்கினன். சிறிது நேரத்திற்கெல்லாம் பிரம்மபுத்திராவின் பிரவாகத்தில் அந்தச் செம்பு மட்டும் மிதந்து செல்வது நன்ருகத் தெரிந்தது! ஆற்றில் இறங்கிய அந்த வாலிபன் கரையேறி விட்டான்.

இவ்வளவு நேரம் அந்தக் காட்சியையே கற்சிலை போல் நின்று கவனித்துக் கொண்டிருந்த அசோகனின் முகம், ஏனே இப்போது விகாரமாக வெளிறிச் சுருங்கி விட்டிருந்தது. வயோதிகத்தின் காரணமாய் கட்டு விட்டுத் தளர்ந்திருந்த அவனுடல் லேசாக நடுங்கியது.

'அஸ்தி!....அஸ்தி!....' என்ற ஒரேவித இரு வார்த்தைகள் அவன் நெஞ்சுக்குழியிலிருந்து வெளியேறி வந்து உடைந்து நொறுங்கின! தட்டுத்தடுமாறிக் கொண்டே மெல்ல நடந்து வந்து பழயபடி தன் ஆசனத்தில் 'தொப்'பெனச் சாய்ந்தான் அசோகன். அவன் கண்கள் இருண்டன. உலகமும் மெது மெதுவாக இருண்டு கொண்டு தான் வந்தது.

அஸ்தி—

இன்று நடந்த இந்த அஸ்தி கரைப்புச் சடங்கு போல, பத்தாண்டுகளுக்கு முன்னல் நடந்த அந்த அஸ்திகரைப்புச் சடங்கு மட்டும் நடந்தேறியிராவிட்டால், அசோகனுக்கு இன்று அன்பு, பாசம் என்ற சொற்களின் பொருளையே புரிந்து கொள்ள சக்தி இருக்காது! அதுமட்டுமல்ல; அவன் அருமை மகள் சங்கமித்திரை கூட காவியுடை அணிந்து ஈழம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது!

அசோகனின் புண்பட்டிருந்த உள்ளம், அந்தப் புனிதமான நிகழ்ச்சி ஏட்டைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தது....

இரவின் இரண்டாம் ஜாமம் கழிந்து, மூன்ரும்ஜாமம் ஆரம்பமாகிக்கொண்டிருந்தது.

ஐந்துமாத காலமாக கலிங்க தேசத்துப் படைகளுடன் கடுமையாகப் போரிட்டு இன்று மாலைதான் வெற்றிபெற்ற மகத நாட்டுப் போர் வீரர்கள் அவரவரின் கூடாரங்களில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

கலிங்கமன்னனுக்கும் அசோக சக்கரவர்த்திக்கும் போர்மூளும் போது, இரு தரப்பிலும் சுமார் ஐந்து லட்சம் வீரர்கள் ஆர்ப

ரித்தெழுந்து யுத்தகளத்தில் குதித்தனர். ஆனால், ஐந்து மாதப் போருக்குப்பின், மகத நாட்டுக்கு வெற்றி கிடைத்திருக்கும் இன்று, சில நூறு வீரர்களின் சடலங்களிலேதான் உயிர் இழைந்துக்கொண்டிருந்தது! பல்லாயிரம் போர் வீரர்களுடையவும், ஒருபாவமுமறியாப் பொதுமக்களுடையவும் பிணமேட்டின் மேலேதான் அதோ, அசோகனின் வெற்றிக் கொடி பறந்து கொண்டிருக்கிறது! ஐந்துமாத காலமாக இரவு பகல் இல்லாமல் இடைவிடாது எழும்பிக்கொண்டிருந்த வாட்களின் உராய்வு ஒலியும், கேடயங்களின் மோதல் ஓசையும், ஈட்டிகளின் பாய்ச்சல் தொனியும், யானைகளின் மரணப் பிளிறலும், பரிகளின் சவக் கனைப்பும், போர் வீரர்களின் சிங்கநாதமும், பொதுமக்களின் அவலக் கூக்குரலுமாகச் சேர்ந்து, அந்தப் பிரதேசம், அழிவுத் தேவனின் ஊழிக்காலத் தாண்டவத்திற்கு அமைத்த அரங்கு போல் அமைந்து விட்டிருந்தது!

ஆனால் இன்றோ?—

இமயத்தின் முடியில் பொதிந்து கிடக்கும் அழிக்க முடியாத அமைதி, அங்கிருந்து இறங்கி ஓடி வந்து இந்தப் பிரதேசத்தை ஆட்கொண்டு விட்டதைப் போலல்லவா இருக்கிறது!....

ஆயினும் இந்த அமைதி அங்கு நீண்ட நேரம் நிலவியிருக்க வில்லை. போர்களத்தில் குற்றுயிரும் குறையுயிருமாய் கிடக்கும் பல்லாயிர வீரர்களின் மரண இறுதிப் பெருமூச்சும், மலைக் குகையிலிருந்து இறங்கி ஓடிவரும் குள்ளநரிகளின் கும்மாள ஊளைச் சப்தமும், பிணந் தின்னும் ஜாமக் கழுகுகளின் ஆனந்தக் கேவுதலும் அவ்வப்போது எழுந்து அங்கு நிலவியிருந்த நிசப்தத்தை குலைத்துக் கொண்டிருந்தன.

உயரமான ஓர் புல்மேட்டின் மீது கூடார மடித்து அதில் தங்கியிருந்தான் அசோகன். அந்தக் கூடாரத்தில், பிரதம தளபதியும் மெய்க்காப்பாளர்கள் சிலரும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அசோகனுக்கு மட்டும் அன்று தூக்கமே வரவில்லை!

தென்பெண்ணை யாற்றிலிருந்து வடக்கே இமயம் வரையும், அதற்கு அப்பாலும் பரவி வியாபித்திருந்த அவனது அகண்ட சாம்ராஜ்யத்தில், இன்று கலிங்கமும் வந்து மண்டியிட்டுக்கலந்து விட்டது. கிரேக்க மகாவீரனான சிக்கந்தர், உலகையே தன் ஒரு குடையின் கீழ் கொண்டுவர முயற்சித்தான். ஆனால் அது முடியவில்லை, அவனுக்குப் பின். அசோகனும் அவ்விதமே நினைத்தான். அவனுடைய அந்த ஆசைக்கு ஊக்கமூட்டியிருக்கிறது இன்று கிடைத்திருக்கும் கலிங்க வெற்றி!....

அசோகன் தன் பாசறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தான்.

தேய்பிறைச் சந்திரன் உச்சி வானிலிருந்து கரகரவெனக் கீழே சரிந்துகொண்டிருந்தது. வெளியே சென்று சிறிதுநேரம் உலாவிவிட்டுவரலாமென கூடாரத்தின் வாசல் படுதாவை நீக்கிக்கொண்டு வெளிவந்தான் அசோகன்.

சிறிது தூரம் நடந்து சென்று ஒரு பாறையின் அருகில் வந்து நின்றான். தன் இடது காலைத் தூக்கி அப்பாறையின் மீது வைத்துக்கொண்டு, நிலவொளியின் உதவியால், தொலைதூரம்

வரை தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினான். பூமாதேவியின்மீது வானம் தலைசாய்த்து இருப்பது வரையும் அதற்கு அப்பாலும் அவன் ஆட்சிக்கு உட்பட்ட மண்ணாகவே இருப்பதறிந்து, அவனுடைய அகன்ற புஜங்கள், ஆனந்தத்தால் பூரித்துக் குலுங்கின. சந்திரகுப்த மௌரியன் ஸ்தாபித்த பரந்த சாம்ராஜ்யத்தை, அவனுடைய பேரனான அசோகன், இன்று பன்மடங்கு விரியச் செய்து விட்டானல்லவா?—

குதூகலத்தால் மெய்மறந்திருந்த அசோகனின் கவனத்தை, மகா பயங்கரமாக வெட்டியிழுத்தது, அவன் அருகிலிருந்து எழுந்து வந்த ஒரு மகா அவலமான அழுகுரல்!

திடுக்கிட்டுத் திரும்பினான் அசோகன். அழுகுரலையே இரவு பகல் இடைவிடாமல் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போயிருந்த அவனுடைய செவிகளுக்கு, இந்த ஒப்பாரி ஓலம், மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணி விட்டாலும், ஏதோ ஒருவித சலனத்தை அவனுள்ளத்தில் ஏற்படுத்தியே வைத்தது.

அந்தப் பிரதேசம் முழுமையும், குழந்தையின் கையில் கொடுக்கப் பட்ட துணி பொம்மையைப் போல, காலற்றதும், கையில்லாததும், சிரமற்றதுமான பல்லாயிரம் மனித சடலங்கள் மூலைக் கொன்றாய்ச் சிதறிக் கிடந்து, மனிதவர்க்கத்தைப் படைத்த அந்தக் கடவுளையே

கேலி செய்துகொண்டிருந்தன!

நாற்புறமும் சுற்றிப் பார்த்தான் அசோகன். அவன் நின்றிருந்த இடத்திலிருந்து சுமார் ஐம்பது கஜ தூரத்திலிருந்து தான் அந்தப் பயங்கரப் பொருமல் ஒலி எழுந்து எட்டுத் திக்கும் எதிரொலித்தது. வியப்பும், பரபரப்பும் அடைந்தவனாய் அழுகுரல் வரும் திக்கை நோக்கினான்.

வெண் போர்வை போர்த்திய ஒரு பெண் உருவம், பிணக்குவியலின் மத்தியில் உட்கார்ந்து, மாய்ந்து மாய்ந்து புலம்பிக் கொண்டிருப்பதை, மங்கிய நிலவொளியின் உதவியால் இப்போது தான் பார்த்தான் அசோகன்! நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய ஈட்டிகளை, எதிரி அவன்மீது வீசினாலும் அதைக் கண்டு சிறிதும் அச்சம் கொள்ளாத வஜ்ர உள்ளம் படைத்த அசோகனுக்குக்கூட இந்தக் காட்சியைக் கண்ட மாத்திரத்தில் லேசான ஒரு பதற்றமும் நடுக்கமும் ஏற்படத்தான் செய்தன.

ஐந்துமாத காலமாய் போர்க்களமாக இலக்காகிவிட்ட அந்தப் பிரதேசம் காபந்து இல்லா மயானமாய் காட்சியளிப்பதால், ஒருவேளை பேய் பிசாசுகளின் சேஷ்டையாக இருக்குமோ என்றும் அவன் நினைத்தான்.

மரணத்தின் போர்வையில் உலகமே அழுந்திக் கிடப்பது போன்று இருந்த அந்த மயானப் பிரதேசத்தில், அசோகனும், அழுதுகொண்டிருக்கும் அந்தப் பெண்ணுருவும்தான் அங்கே தனித்திருந்து மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது!

அழுகை ஒலி வரும் அந்தத் திசை பக்கம் போகலாமா? அல்லது கூடாரத்திற்குத் திரும்பிவிடலாமா வென ஒரு கணம் சிந்தித்தான். 'சே, கேவலம் ஒரு அநாதைப் பெண்ணின் அழுகுரலுக்கு அஞ்சி, இந்தப் பரந்த சாம்ராஜ்ய மன்னன் ஓடுவதா?' என்று தன்னைத் தானே திடப்படுத்திக்கொண்டு குரல் வரும் திக்கை நோக்கி மெதுவாக நடந்தான் அசோகன்.

ஆயிரக் கணக்கான வீரர்களின் குருதி வெள்ளம் அந்தக் களமேட்டில் பாய்ந்துவிட்டிருந்ததால், தரை ஒரே ரத்தச் சேருகக் குழம்பிக் கிடந்தது. அந்தக் குருதி உளையிலே ஓசைப்படாமல் நடந்து சென்றான் அசோகன். அப்படி அவன் நடந்து செல்லும்போது மனிதத் தலைகளும், முண்டங்களும் கால்களில் மிதிபட்டு உருண்டு ஓடின!

பிணங்கள் குவிந்து கிடப்பதற்குப் பத்தடி தொலைவிற்கப்பால், பேய்விளாமரம் ஒன்று தலைவிரித்து நின்றுகொண்டிருந்தது. மெல்ல நடந்துவந்த அசோகன், அம்மரத்தின் அடியில் போய் மறைந்து நின்றுகொண்டான். ஒப்பாரி வைத்து ஓலமிட்டுக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் உருவத்தை உற்று நோக்கினான்.

செம்படவன் கரைக்கு இழுத்துவந்து வலையிலிருந்து கொட்டிய மீன்குவியலைப்போல குவிந்து கிடந்த மனித உடல்களை, சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு மாது, மங்கலான நிலவொளியின் துணைகொண்டு இழுத்துப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்! அவள் கட்டியிருந்த வெள்ளைப் புடவை முழுதும் ஒரே இரத்தக் கறையாகி விட்டிருந்தது! தேம்பித் தேம்பிப் புலம்பிக் கொண்டு, பிணங்களைப் புரட்டிக்கொண்டிருந்த அவள், திடீரெனப் பயங்கரக் கூக்குரலிட்டுக் கதறியவாறே, ஒரு பிணத்தை இழுத்துத் தன் மடியில் வளர்த்தி, அதன் உருமாறிக் கிடந்த முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்! பின்னர் அவ்வுடலை அப்படியே சேர்த்து மார்போடணைத்துக் கட்டித் தழுவிக்கொண்டு முத்தமாரி பொழிந்தாள்! விநாடிக்கு விநாடி அவளின் கதறல் ஒலி கர்ணகடூர உச்ச ஸ்தாயியை எட்டிப் பிடித்துக்கொண்டே சென்றது.

சிறிது நேரங்கழித்து அவள் அப்பிணத்தை தன் தோள்மீது கிடத்திக்கொண்டு அவ்விடத்தை விட்டு எழுந்து சற்று அப்பால் போய் உட்கார்ந்து கொண்டாள். அவள் மடியில் விறைத்துக் கிடந்த சவத்தின் மீது மண்ணும் குருதியும் அப்பிமுறுகலிட்டுக்கொண்டிருந்ததைத் தன் முந்தானைத் தலைப்பால் மெதுவாகத் துடைத்தாள். அந்தப் பிணத்தின் மார்பில் பாய்ந்து சொருகிக் கொண்

டிருந்த வேல் ஒன்று ரத்தத்தில் உறைந்து அப்படியே இறுகி விட்டிருந்தது. அதை வெடுக்கெனப் பிடுங்கி தூர எறிந்தாள் வெறி நிலையிலிருந்த அந்தப் பெண். அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்த அவள் அளக பாரம் காற்றில் அலைபாய்ந்து கொண்டிருந்தது........

மரமோடு மரமாக ஒட்டி ஒளிந்து நின்றுக் கொண்டிருந்த அசோகனின் உடலும் உள்ளமும் இந்தக் கோரக் காட்சியைக் கண்டு நிலை கொள்ளாமல் குலுங்கி நடுங்கின. இடையிலிருந்த வாளை இறுகப் பற்றிக் கொண்டு கூர்மையாகத் தன் பார்வையைச் செலுத்தினன்.

தனி இடத்துக்கு வந்து தரையில் உட்கார்ந்து கொண்டு அந்தப் பிணத்தின் வெளுத்த முகத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த அவள், திடீரெனக் கூச்சலிட்டு ஆவேசம் வந்தவளைப் போலப் பேச ஆரம்பித்தாள் :

"என் அருமைச் செல்வனே! உன்னை நான் இந்த நிலையிலா காண வேண்டும்? இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல், உன்னைப் பெற்று ஏந்திய இந்தக் கரங்களிலேயா உன் உயிரற்ற சடலத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன்? உன்னைப் பிரசவித்துப் பஞ்சணையில் கிடத்தியபோது இந்தப் பேதையின் உள்ளம் எத்தனை ஆயிரம் இன்பக் கனவுகள் கண்டிருக்கும்! எத்தனை யெத்தனை இனியக் கோட்டைகள் கட்டி இறுமாந்திருந்திருப்பேன்!.... சந்திரகுப்தனின் பரம்பரையில் வந்த அசோகனின் ஆட்சியில், நீ, வாழ்க்கையின் சகல இன்பங்களையும் வேண்டிய மட்டும் அனுபவிப்பாய் என்றல்லவா எண்ணிப் பூரித்தேன்! அசோகனுடைய ஆட்சியில், சோகமே தலை காட்டாது; அசோகமே நிலைபெற்று ஒளி வீசும் என்றெல்லாமல்லவா மகிழ்ந்திருந்தேன்!.... இறுதியில் இன்று என் கனவும் மகிழ்வும் என்ன ஆயின? மண்ணசை கொண்ட அந்த மதோன்மத்தனின் மரணக் குழியிலல்லவா விழுந்து அழுந்தி விட்டாய்!.... என் கண்ணே! இந்த நாட்டின் ஒரு பகுதியிலிருந்த கிரேக்க ஆட்சியை ஒழிக்க, சந்திரகுப்தன்,

நாவலாசிரியர்: இந்த நாவலை உருவாக்க இருபது வருடங்கள் சிரமப்பட்டேன்

நண்பர்: ஓ.... இருபது வருடங்களாக சிந்தனை செய்து இந்த நாவலை எழுதினீர்களோ!

நாவலாசிரியர்: இல்லை. இரண்டே மாதத்தில் நாவலை எழுதி விட்டேன். இதை வெளியிடும் பிரசுராலயத்தைக் கண்டுபிடிக்க பாக்கி காலம் செலவாயிற்று

அரசியல் ஞானியான சாணக்கியனுடன் சேர்ந்து போர் தொடுத்தானல்லவா? அப்போது உன் அருமைத் தந்தை—என் அன்புக் கணவன் — நீ என் வயிற்றில் ஆறுமாதப் பிண்டமாயிருக்கும் போதே, அந்தப் போரில் ஈடுபட்டு வீர சொர்க்கம் புகுந்ததை நீ அறிவாயா?. அல்லது இந்த மதிகெட்ட மன்னன்தான் அறிவானு? கடைசியில், எனக்கிருந்த ஒரே துணையான உன்னையுமல்லவா இன்று இந்த போர் விரும்பிக்குப் பலியாக்கிவிட்டேன்! தனியொரு மனிதனின் மண்ணுசைக்காக உன் போன்ற எத்தனை லட்சம் கரும்பு உயிர்கள் அநியாயமாகக் ககனத்தில் கலந்து மறைந்துவிட்டன!.... கடவுளின் உன்னதப் படைப்பான மனித உயிர்களை உறிஞ்சி ஏப்பமிட, இந்த மன்னனுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஒரு பிடி மண்கூட இவனுக்குச் சாஸ்வத சொந்தம் இல்லையே!.... இந்த உன் பொன்னுன உடலை வளர்க்க நான் எத்தனையெத்தனை இன்னல்களும் இடுக்கண்களும் பட்டிருப்பேன்! எத்தனை இரவு பகல் கண் விழித்து, பட்டினி கிடந்து, பத்தியமிருந்து பாதுகாத்திருப்பேன்! அவையெல்லாம் இந்த நாடாசை கொண்ட நாசகார நரிக்குத் தத்தம் செய்யத்தானு? பிரிவாற்ருமை எனும் பெருந்துன்பத்தை அவன் அறிந்திருந்தால் இத்தகையப் பேய்ச் செயலைச் செய்யத் துணிவானு?.... இதோ பாரடா, என் கண்ணே! இந்தப் பழம்பெரும் பாரதபூமி விதவைக் கோலம் பூண்டிருப்பதைப் பார் செல்வனே! மக்களின் எலும்புக் கூடுகளின் மீது எழும்பி நிற்கும் இந்த சாம்ராஜ்யக் கோட்டை எத்தனை நாளைக்கு நிலைத்து நின்றுவிடும்? அப்படி நிலைக்கும் என்று எண்ணுபவனும், இவ்வுலகில் எத்தனைக் காலத்துக்கு நிலைத்து வாழப் போகிருன்? அவனும் ஒருநாள் உன்னைப்போல இந்த மண்ணில் சிரம் சாய்க்கத்தானே வேண்டும்! இவற்றையெல்லாம் அந்த மன்னன் ஏன் எண்ணிப் பார்க்கவில்லை?.... மகனே! உன் தாய்நாட்டை அந்நியர் கைப்பற்ற வந்தால், அந்த ஆபத்தைப் போக்க, நீ வீரப்போரிட்டு மரணமடைந்திருந்தால், அதற்காக நான் ஒரு சிறிதும் கலங்கி இருக்கமாட்டேன்! அதற்கு மாருகப் பெருமையும், குதூகலமும்தான் கொள்வேன்! ஆனுல், செல்வனே! சுதந்தரமாயிருந்த வேற்று நாட்டொன்றை வாள் முனையில் அடிமை கொள்ளவும், அடக்கி ஆளவும் எண்ணி, அதற்காக உன் போன்ற பல்லாயிரம் உயிர்களைப் பலியாக்கிய கொடுமையைத்தான் என்னுல் சகிக்க முடியவில்லையடா! அதர்மத்தை அழிக்க, பாரதப் போர் நடத்திய இந்தப் புண்ணிய பூமியிலா ஆதிக்க வெறிப் போர் நடப்பது! புத்தன் பிறந்த இந்தப் புனித நாட்டிலா போர் அரக்கன் தாண்டவமாடுவது!.... என் இன்பச் செல்வனே! என்னுடைய அந்திம காலத்தில், நீ எனக்குக் கொள்ளியிட்டு, என் அஸ்தியை இந்தப் புண்ணிய பிரம்மபுத்திராவில் கரைப்பாய் என்றல்லவா எண்ணிப் பூரித்திருந்தேன்! ஆனுல்?.... உன்னுடைய அஸ்தியே இவ்வாற்றில் சங்கமமாக, நீ கொடுத்து வைக்கவில்லையடா!.... அதோ பார்! மக்களின் குருதிக்கறை படிந்த கொடுமுடி, அசோகனின் சிரத்தில் அமர்ந்திருக்கிறது! அது எத்தனை நாளைக்கு அவன் சிரத்திலிருக்கும்? என்றைக் காவது ஒருநாள் என் போன்ற அபலைகளின் ரத்தக் கண்ணீரில், அது அமுந்தி மறையத்தான்

போகிறது!.... மண்ணாசையும், யுத்த வெறியும் இவ்வையத்தில் பூண்டற்றுப் போகும் புனித நாள் எந்நாள் என்று உனக்குத் தெரிந்திருந்தால், அதை எனக்குச் சொல்லிவிட்டுச் செல்லடா கண்ணே! அதைத் தெரிந்து கொண்டாவது என் குறை ஆயுளை ஒப்பேற்றி ஒழித்து விடுகிறேன்!.... மகனே!.... என் அருமை மகனே!....''—

அவள் இதற்குமேல் பேச முடியாமல் சோர்ந்து அந்தப் பிணத்தின்மீது குப்புற விழுந்து விட்டாள்!

இதுவரை செத்தப் பிணம் போல் உணர்விழந்து, அவளின் ஆக்ரோஷப் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்த அசோகன், தள்ளாடிக்கொண்டே அப் பெண்ணருகில் போய் நின்றான். தன் அருகில் யாரோ நடந்து வரும் ஓசை கேட்டதும் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தாள் அவள்.

''தாயே!'' என நடுங்கும் குரலில் அழைத்தான் அசோகன்.

மடியில் கிடத்தியிருந்த பிணத்தை இறுக அணைத்துக் கொண்டே ''யாரடா, நீ?'' என அண்டம் கிடுகிடுக்கும்படி கர்ஜித்தாள் அவள்.

இப்படி அவள் கூவியதைக் கேட்டு அசோகன் ஒரு கணம் திகைத்துவிட்டான்! பின்னர் மிகுந்த பணிவுடன் ''தாயே! இந்த அற்பப் புழுவை நீ தயை கூர்ந்து மன்னித்தருள வேண்டும்! இனிமேல், என் ஆயுள்பரியந்தம், நான் இந்த வாளை இக்கரங்களால் தீண்டவே மாட்டேன்! என்னைப் பெற்றெடுத்த பாரத அன்னையின்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்!''

என்று கூறிக்கொண்டே, மண்ணில் முழந்தாளிட்டு, தன் இடையிலிருந்த வைர வாளை அவிழ்த்து அந்தப் பெண்மணியின் பாதத்தில் வைத்தான் சாம்ராஜ்ய பூபதியான அசோகன்!

திக்பிரமை கொண்டவளாய் அவனையே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். மண்டியிட்டிருந்த மன்னன் மெல்ல எழுந்து நின்று, ''அம்மணீ! உன் அருமந்த மகனின் உடலை நானே தகனம் செய்து, அவனுடைய அஸ்தியை, அவனைப் போன்று உயிர்நீத்த பல்லாயிரம் வீரர்களின் சார்பாக, பிரம்மபுத்திராவில் கரைக்கிறேன்!'' என்று சொல்லி முடிக்குந் தறுவாயில், அவன் பின்னாலிருந்து யாரோ ''அசோகா!'' என அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினான்.

அங்கு சாந்தமே உருவாய் நின்றுகொண்டிருந்தார் உபகுப்தர்!

''சுவாமீ! இந்த அசோகனின் ஊனக் கண்கள் இன்றுதான் ஞான ஒளியைக் கண்டன!' என கதறிக்கொண்டே வேரற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்தான் அசோகன்.

''அப்பா! ஏன் இப்படித் தனியாக வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்? ஈழத்துக்குச் செல்லும் உங்கள் மகளை வழிகூட்டி அனுப்ப வரவில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே சித்திரக் கூடத்திற்குள் நுழைந்தாள் சங்கமித்திரை.

'அஸ்தி!.... அஸ்தி!....' என முனகிக்கொண்டே தலைநிமிர்ந்த அசோகனின் கண்கள் நீரில் மிதந்துகொண்டிருந்தன!

ஹாலில் மாட்டியிருந்த கடிகாரம் 'டாண் டாண்' என்று ஐந்து முறை அடித்து ஓய்ந்தது. போர்வையை இழுத்துச் சரியாகப் போர்த்திக் கொண்டாள் மீனு. கலைந்து, நாலு புறமும் பறந்துகொண்டிருந்த தலை மயிரைக் கோதி விட்டுக் கொண்டாள்.

''ஸிஸ்டர், கொஞ்சம் இந்த துணியை வாங்கி வென்னீரில் நனைத்துத் தருகிறீர்களா?''

வென்னீரில் நனைத்துக் கொண்டு வந்த துணியை வாங்கி முகத்தைத் துடைத்துக் கொண்டாள். சிதறிக் கிடந்த தலையணைகளை சரியாக வைத்து, சாய்ந்துகொண்டாள். நோயாளிகளைப் பார்க்க உறவினர்கள் ஒவ்வொருவராய் வந்துகொண்டிருந்தனர். ரகுபதி.... அவள் பார்வை வாசல் புறம் திரும்பியது. அதோ! ரகுபதியும் வந்து விட்டான்.

''மீனு! உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று கேட்ட வாறே கட்டிலில் உட்கார்ந்தான் ரகுபதி.

கடந்த மூன்று நாட்களாக அவள் மனதில் நடைபெற்று வந்த போராட்டங்களுக்கு அன்று ஒரு முடிவு கண்டு விட்டாள். அதை ரகுபதியிடம் சொல்ல வேண்டும்! அதைக் கேட்டால்........!

''என்ன யோசனை மீனு? நான் கேட்ட கேள்விக்குப் பதிலில்லையே'',

''உடம்பு எப்போதும் போல் தானிருக்கிறது'' என்றாள்.

''நீ என்னமோ சொல்லிவிடுகிறாய், எனக்கு எவ்வளவு கவலையாய் இருக்கு தெரியுமா? ஆபீஸில் வேலையே ஓடவில்லை, சாயந்திரம் உன்னைப் பார்க்காத வரையில் நிம்மதியில்லை''.

அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. பேச்சோடு பேச்சாக விஷயத்தைச் சொல்லிவிட விரும்பினுள்.

"நான்தான் பூர்வ ஜென்ம பலனுல் கஷ்டப்படுகிறேன் என்ருல், நீங்களும் வீணுகக் கவலைப்படவேண்டியிருக்கிறது. ஒரு நிம்மதியான வேளை உண்டா, சாப்பாடு உண்டா? பொழுது போனுல், பொழுது விடிந்தால் என் கவலையே உங்களுக்குப் பெரிதாகப் போய்விட்டது".

"இதென்ன மீனு! என்றுமில்லாத அலுப்பு உனக்கு?"

"எனக்கென்னமோ பிழைத்துப் புனர் ஜென்மம் எடுக்கப் போகிறேன் என்ற நம்பிக்கை இல்லை...."

"மீனு! அசட்டுப் பிசட்டென்று பேசக்கூடாது. நேற்று கூட டாக்டர் சொன்னுர், சீக்கிரத்தில் எழுந்து நடமாட ஆரம்பித்து விடுவாய் என்று".

"நான் என்ன பச்சைக் குழந்தையா? வாழைப் பழத்தைக் கொடுத்து ஏமாற்றி விடுவதற்கு. டாக்டர் உங்களிடம் சொன்னதை நர்ஸ் எனக்கும் சொல்லியிருக்கிருள். பிழைக்குமா, பிழைக்காதா என்ற இரண்டுங்கெட்டான் நிலைமையிலிருந்து உங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒன்று சொல்லுகிறேன். கமலாவைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள். அவள் என்னைவிட எவ்வளவோ தேவலை...."

"சீ! மீனு! இதென்ன வார்த்தை?"

"ஏன், இதில் தவறென்ன இருக்கிறது? நான் உள்ளதைத்தான் சொன்னேன். அதில் எனக்குப் பரம திருப்தி. வாழ்நாள் முழுவதும் உங்களுக்குச் சேவை செய்ய முடியவில்லை என்ற ஒரு குறைதான். அதுவும் உங்கள் சந்தோஷத்தை விட பெரிதல்ல. என் ஒருத்திக்காக நீங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும். உங்களுக்கும் மன நிம்மதி ஏற்படும்."

"மீனு! உன்னை மறந்து விட்டு இன்னொரு பெண்ணை நினைக்க முடியுமா? என்னை வற்புறுத்தாதே!"

"கமலா யார்? உங்கள் மச்சினி தானே! நீங்களே அடிக்கடி சொல்லுவீர்கள். 'மீனு, உன்னைப் பார்த்தால் கமலாவைப் பார்க்க வேண்டாம் என்று. என் நினைவை மறக்க அவள் துணையாயிருப்பாள்."

"மீனு, விளையாடாதே! போதும் இந்தப் பேச்சு."

"விளையாட்டுப் பேச்சல்ல இது. மரணத்தின்வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் என் கடைசி விருப்பம் இது. மறுக்காமல் ஏற்றுக் கொண்டேன் என்று வாக்குறுதி கொடுங்கள். அப்போதுதான் நான் நிம்மதியடைவேன். என் உயிர் போவதற்குள் நீங்கள் இருவரும் ஆனந்தமாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து மனங்குளிர வேண்டும்....எங்கே, சொல்லுங்கள்!...."

மீனு ரகுபதியின் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுள்.

அவள் வார்த்தை அவனை மிகவும் வேதனையடையச் செய்தது.

ஒருயிரும் ஈருடலுமாய் இருந்து வந்த மீனுவை அகற்றிவிட்டு அந்த இடத்தில் கமலாவை ஏற்றுக் கொள்வதா? நேற்று டாக்டர் இரண்டுங் கெட்டானுகச் சொல்லி விட்டார். பிழைப்பது அபூர்வம் என்று. அவளுக்கு நிம்மதியைத் தரக்கூடியது, அவள் வார்த்தையை ஏற்றுக் கொள்வதுதான்.

வெகு நேரம் அவன் பதில் சொல்லவில்லே. அவள் அவனே மீண்டும், மீண்டும் வற்புறுத்தி வந்தாள்.

"என் வேண்டுகோளேத் தட்டாதீர்கள். உங்கள் வாழ்க்கை மீண்டும் ஒளி பெற வேண்டுமென்றுதான் சொல்கிறேன்".

அவள் கைகளேக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"மீனு! உனக்கிஷ்டமான காரியத்தைத் தடை செய்ய எனக்குச் சக்தி கிடையாது."

அவன் கண்களில் துளிர்த்த கண்ணீர்த்துளிகள் அவள் கைகளில் விழுந்து உருண்டன.

"இப்போதுதான் மனம் நிம்மதி யடைந்தது" என்று சொல்லியவாறு படுக்கையில் சாய்ந்து கொண்டாள் மீனு.

* * *

கமலாவுக்கும் ரகுபதிக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது, அன்றைய தினத்திலிருந்து ஓர் அதிசயமும் நடந்தது. மரணப் பாதையில் முன்னேறிக்கொண்டு சென்ற மீனுவின் உடல்நிலே திருந்த ஆரம்பித்தது. ஆறு மாத காலத்திற்குள் வியாதி நீங்கி எழுந்து நடமாட ஆரம்பித்து விட்டாள். தான் இறந்துவிடுவோம் என்று ரகுபதியைக் கல்யாணம் செய்து கொள்ளத் தூண்டினுள் மீனு. இப்போது அவள் பிழைத்து விட்டாள்! அதற்காக கமலாவிடமிருந்து ரகுபதியைப் பிரித்துவிட அவள் விரும்பவில்லே. அந்த வீட்டில் அவளும் ஒரு மனுஷியாகவே இருந்து வந்தாள். ரகுபதியிடம் ஒன்றும் எதிர் பார்க்கவில்லே. தான் உண்டு தன் காரியம் உண்டு என்று இருந்தாள். கணவனிடம் தொடர்பையும் குறைத் கொண்டாள். எந்த விஷயமானுலும் கமலாவின் மூலமாக சொல்லியனுப்புவாள்.

ரகுபதி இதைக் கவனியாமலில்லே. அவன் உள்ளமும் வருத்தப்பட்டது, ஒன்றிரண்டு சமயங்களில் மீனுவிடம் நேரிலேயே சொல்லிவிட்டான்.

"மீனு, நீ நடந்து கொள்வது வேடிக்கையாக யிருக்கிறதே! கமலாவுக்கு உள்ளது உனக்கும் உண்டல்லவா? என் எதிரில் வருவதற்கு நடுங்குகிருயே!"

"அதெல்லாம் ஒன்றுமில்லே, நீங்கள் தவறுதலாக எடுத்துக் கொண்டு விட்டீர்கள்" என்று சமாளித்து விட்டாள்.

அவள் விருப்ப மெல்லாம், கமலா தன் மீது சக்களத்தி என்ற வெறுப்பு கொள்ளக் கூடாது என்பதுதான். அதற்குரியபடி நடந்து வந்தாள். டிராமாவுக்கோ சினிமாவுக்கோ போவதற்கு அழைத்தால் போக மறுத்துவிடுவாள்.

"எனக்கு எதற்கு? நான் பார்க்காத சினிமாவா? கமலாவை அழைத்துப் போங்கள்

அவள் சிறிசு. வீட்டைப் பூட்டி விட்டுப் போகக்கூடாது. நான் வீட்டில் தங்கி விடுகிறேன்'' என்று சாக்குச் சொல்லி அவர்களைமட்டும் போகச்செய்வாள். அல்லது தலையை வலிக்கிறதென்றோ, சினேகிதிகள் வீட்டிற்குப்போகவேண்டுமென்றோ தட்டிக் கழித்து விடுவாள். சிற்சில சமயங்களில் அவர்கள் தனிமையில் பேசிக் கொண்டிருக்கும் போது போய் விடுவாள். சட்டென்று ஏதாவது சாமானை எடுத்துக் கொண்டு போனபடியே திரும்பிவிடுவாள். அவர்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்க நிற்க மாட்டாள்.

நாம் நினைப்பது போலவே எல்லாம் நடந்து விடுகிறதா? மீனுவின் செய்கைகள் கமலாவின் மனதில் வேறுவிதமாகப் பட்டன. அக்கா தன் மீது பொறாமைப் படுகிறாள் என்று நினைத்தாள். அவர்கள் இருவருக்குமிடையே உள்ள பிரிவு தன்னால் நெருங்கத் தடையாய் இருப்பதாக மீனு கருதுவதாக எண்ணினாள். அப்போது பிழைக்கமாட்டோம் என்ற நிலையில் இரண்டாம் கல்யாணத்திற்கு சம்மதித்துவிட்டாள். இப்போது என்ன செய்வது? அவளாக விரும்பிச் சம்மதித்தது அல்லவா. ஆகவே அந்தக் கோபத்தை வெளிக்காட்ட முடியாமல் உள்ளுக்குள்ளேயே பொறுமுகிறாள் என்று நினைத்தாள்.

முதலில் தோன்றிய இந்த எண்ணம் நாளடைவில் கமலாவின் மனதில் வெறுப்பாக மாறி விட்டது. மீனுவைக் கண்ட போதெல்லாம் முகத்தைச் சிடுசிடுவென்று வைத்துக் கொள்வாள். இல்லாததற்கெல்லாம் எரிந்து விழுவாள். ஓரிரு சமயங்களில் அவளிடம் சண்டைக்கே போய்விடுவாள்.

இவையெல்லாம் மீனுவுக்குத் தெரியாமலல்ல. அவள் உள்ளம் வெதும்பினாள். ஆஸ்பத்திரியிலிருந்து ஏன் பிழைத்து வந்தோம் என்று வருத்தப்பட்டாள், வியாதி நீங்கி அந்த வீட்டிற்குள் மீண்டும் நுழைந்தது தவறு என்று தன்னைக் குறை கூறிக் கொண்டாள். அங்கு இருப்பது முள் மேலிருப்பது போன்றிருந்தது அவளுக்கு. அதுவும் அன்று கமலா பக்கத்து வீட்டுக்காரியிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட பிறகு அவளுக்கு அந்த வீட்டில் இருப்பது பிடிக்கவில்லை.

கிணற்றங்கரையில் கமலமும் பக்கத்து வீட்டுக்காரியும் பேசிக் கொண்டிருந்தனர். அந்தி விளக்கு ஏற்றிவிட்டுக் கொல்லைப்புறம் வந்த அவள் காதில் அவர்கள் பேச்சு விழுந்தது. நடுநடுவே அவள் பெயரும் அடிபடவே சற்று நின்று கவனித்தாள்.

கமலம் சொல்லிக் கொண்டிருந்தாள், ''........என்ன மாமி, அவள் அக்காவாயிருந்தது ஒரு சமயம். இப்போது சக்களத்தி தானே....'' அதற்குமேல் அங்கு நிற்க மனமில்லாமல் உள்ளே வந்துவிட்டாள். அவள் எது நடக்கக்கூடாதென்று ஒதுங்கி, ஒதுங்கி வந்தாளோ, அந்த வார்த்தை வந்துவிட்டது. இனி தான் அங்கிருப்பது நல்லதல்ல என்று முடிவு செய்தாள்,

அஸ்ஸாமிலிருந்த அவள் பெரியப்பாபிள்ளை லீவில் தென் இந்தியா வந்திருந்தான். ஊருக்குச் செல்லுமுன் அவளைப் பார்த்துவிட்டுச் செல்ல வந்திருந்தான். சில நாள் அவ

னுடன் சென்று இருந்துவிட்டு வருவதாகக் கிளம்பி விட்டாள் மீனு.

ஒரு வாரம் சென்றது. மீனு ஊரிலிருந்து கடிதம் போட்டிருந்தாள். கடிதத்தைப் பிரித்து படித்தான் ரகுபதி.

"அனேக நமஸ்காரம்,

நான் இவ்விடத்தில் சௌக்ய மாக இருந்து வருகிறேன். கமலாவுக்கு ஒரு குறைவும் இல்லாமல் கவனித்துக்கொள்ளுங்கள். கூடியமட்டும் என்னை மறந்து விட முடிவு செய்யுங்கள். அது ஒன்றுதான் நான் விரும்புவது. இனி இவ்விடத்தைவிட்டு அங்கு வருவதில்லை என்று முடிவு செய்துவிட்டேன். ஒரு முறை செய்த தவறை மறுமுறையும் செய்ய விரும்பவில்லை. அன்று ஆஸ்பத்திரியில் நான் இறந்து போகவேண்டியதுதான் நியதி. தெய்வச் சோதனை பாக்கியிருந்தது.

"ஒருமுறை கமலாவுக்கு உங்களைப் பூரணமாக அர்ப்பணித்து விட்டேன். மீண்டும் அதைத் திரும்ப பெறவேண்டும் என்று நான் கனவிலும் விரும்பவில்லை. உரிமையை முற்றிலும் கமலா ஒருத்தியே அனுபவிக்கட்டும். அதில் நான் தலையிட மாட்டேன்.

"கமலாவுக்கு என் உறுதியைத் தெரிவியுங்கள். அவளுக்கு என்றும் நான் சகோதரிதான். சக்களத்தி என்ற உறவு அறுந்துவிட்டது. எஞ்சிய வாழ்நாளைத் தங்கள் நினைவாகவே கழித்துக் கொண்டிருக்கிறேன்"

தங்கள் அன்புள்ள,

மீனு.

கடிதத்தைப் படித்த கமலா சிறு குழந்தைபோல தேம்பித் தேம்பி அழுதாள்.

"அக்காவை நான் தவருகப் புரிந்து கொண்டு விட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்" என்ருள் ரகுபதியிடம், கலங்கிய கண்களுடன்.

ஒரு ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டு ரகுபதி தன் கண்களைத் துடைத்துக்கொண்டான்.

மாமரம் நிரம்பப் பூக்கிறது; ஆனுல் அவ்வளவுமா பழங்களாகின்றன? வாழ்க்கை மரமும் அப்படித்தான்! ஆசைப் பூக்கள் தான் அதிகம். மிகச் சிலதான் பழமாகின்றன.

— அறிவுத்திரள்.

ஜீவான்ஜன்

ஜலதோஷம், வாதநோய்கள்

மற்றும் **வலிகளை** குணமாக்கும்

ஓர் ரசாயன களிம்பு.

மிருகக் கொழுப்பு

கலப்பில்லாதது.

எரிச்சல் அளிக்காது,

மாய மந்திரஜாலமல்ல.

அணுக்குண்டு சக்தி உள்ளதெனப்

புகழவில்லை.

TRADE MARK

ஸோல் ஏஜண்டுகள் :

K. K. பிள்ளை & கோ.,

15, வெஸ்ட்காட் ரோடு,

ராயப்பேட்டை, :: மதருஸ்.

'கட்.... கட்.... கட.... கட' வென்ற ஒலியுடன் வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது டைப் அடிக்கும் யந்திரம். பாமாவின் முகத்தில் முத்து முத்தாக வியர் வைத்துளிகள் அரும்பிக்கொண்டிருந்தன. ஆயிற்று! இன்னும் அரை மணி நேரத்திற்குள் அவர்கள் கொடுத்து விட்டுச் சென்ற கையெழுத்துப் பிரதி முழுவதையும் டைப் அடித்தாக வேண்டும்.

வாசல் திண்ணையில் சுவற்றில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தான் சேதுராமன். பாமா உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள். "பாமா!.... பாமா!...." என்று அழைத்தான் சேதுராமன்.

"இதோ வந்துட்டேன் ...." என்று கூறிவிட்டுக் கை வேலையை அப்படியே விட்டு விட்டு ஓடிவந்தாள் அவள்.

கே. ஆர். கௌஸல்யா

"இந்தா!.... இதை இன்னும் அரை மணி நேரத்திற்குள் 'டைப்' அடிக்க வேண்டுமாம்.... அதோ அவர்கள் கொடுத்து விட்டுப் போகிறார்கள்...."

காலம் கடந்த கருணை

அவர்கள் வீட்டு வாசலிலிருந்து அப்போதுதான் புறப்பட்டுக் கொண்டிருந்த காரைச் சுட்டிக்காட்டிச் சொன்னான் அவன். அவனுடைய கையில் டைப் அடிக்க வேண்டிய கையெழுத்துப் பிரதி இருந்தது.

சேதுராமன் சுட்டிக் காட்டிய காரைத் திரும்பிப் பார்த்தாள் பாமா. நாகரீகமான ஆடை அலங்காரங்களுடன் காரில் பின்புறம் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணின் முதுகுப் புறம்தான் அவள் கண்களுக்குத் தென்பட்டது. கார் அதற்குள் கொஞ்ச தூரம் நகர்ந்து விட்டது

உள்ளே வந்த பாமா சமையலறைக்கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு வாயிற்புற அறையில் வந்து டைப் யந்திரத்தின்முன் உட்கார்ந்து டைப் அடிக்க ஆரம்பித்தாள். அவள் மனக்கண் முன் சற்றுமுன் காரில் பார்த்த பெண்ணின் உருவம் வந்துநின்றது. அவளுக்குக் கிட்டத் தட்ட பாமாவின் வயதுதான் இருக்கும். ஆனால் அதிர்ஷ்டத்தில் பாமாவை விட நிச்சயம் உயர்ந்தவளாகத்தான் இருக்க வேண்டும்! வாழ்க்கைக் கடலில் சந்தோஷமாக நீந்துகிறாள். பணத்தில் புரளுகிறாள். நினைத்த இடமெல்லாம் காரில் செல்லத்தக்க அந்தஸ்து அவளுக்கு இருக்கிறது. அரை வயிற்றுக் கஞ்சிக்காக அல்லும் பகலும் இயந்திரத்தோடு இயந்திரமாக ஒரு டைப் யந்திரத்தைக் கட்டிக்கொண்டு பாமாவைப் போல் அவள் கஷ்டப் படவேண்டாம்!

பாமாவின் இதய ஆழத்திலிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது. மனத்தில்துயரப்பளுஏறியது

* * *

சென்னையில் ஏதோ சுமாரான சம்பாத்தியத்தில் குடும்பம்நடத்தி வந்த பரசுராமய்யரின் ஒரே பெண் பாமா. அவளுக்கு இரண்டு வயதாக இருக்கும் போது கண்ணை மூடிவிட்டாள் அவளுடைய தாய். மூத்த தாரத்தை இழந்தவுடன் மறு விவாகம் செய்து கொள்ள இஷ்டப்படவில்லை பரசுராமய்யர். பாமாவுக்கு மூன்று வயதாக இருக்கும் போது அவர்கள் குடும்பத்தில் வந்து சேர்ந்தான் பாமாவின் அத்தை பிள்ளை நாகராஜன்.

இரண்டுங் கெட்டான் வயதிலிருந்த பாமாவை வளர்க்கும் பொறுப்போடு, சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த நாகராஜனை ஆதரிக்கும் பெரியதொரு பொறுப்பும் சேர்ந்து விட்டது பரசுராமய்யருக்கு. தம் குறைந்த வருவாயிலும் நாகராஜனை எவ்விதக் குறைவும் இல்லாமல் ஒரு தனி மதிப்புடன் நடத்தி வந்தார் அவர்.

பாமாவுக்கு அப்போது வயது பதின்மூன்று. நாகராஜன் ஸீனியர் இண்டரில் படித்துக்கொண்டிருந்தான். பள்ளிப்படிப்பு வரை அவனுடைய படிப்புச் செலவை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வந்து விட்ட பரசுராமய்யர் அவன் காலேஜ் படிப்பை ஆரம்பித்தவுடன் பண நெருக்கடியால் மிகவும் திணறினர். 'பணத்திற்கு என்ன செய்வது?.... அதற்காக நாகராஜனின் படிப்பை அறைகுறையாக நிறுத்தி விடுவதா....!' என்று செய்வதறியாமல் குழம்பித் தவித்தார். சிறு வயதாக இருந்த போதிலும்கூட தந்தையின் கஷ்ட நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டு விட்டாள் பாமா. அத்துடன் அவளுக்குச் சிறுவயது முதலே நாகராஜனின் மீது ஒருவித அன்பு விழுந்து விட்டது. அவனுடைய படிப்பு விஷயத்தில் பரசுராமய்யருக்கு இருந்ததைவிட அதிக அக்கரை தோன்றி விட்டது பாமாவுக்கு. உடனே ஒருபெருந்தன்மையான காரியத்தைக் செய்ய முன்வந்தாள்.

தன் தாயார் இறந்தபிறகு அவளுடைய நகை முழுவதையும் பாமாதான் போட்டுக் கொண்டிருந்தாள். கல்லுக் கல்லாக நல்ல தங்கத்தில் செய்யப்பட்டிருந்த அந்த பழங்கால நகைகளை ஒவ்வொன்ருக விற்று அவனுடைய படிப்புக்குச் செலவழித்தால் என்ன என்ற யோசனை அவள் உள்ளத்தில் உதித்தது. உடனே அப்பாவிடம் ஓடினாள். தன் எண்ணத்தை வெளியிட்டாள். அவளுடைய பெருந்தன்மையான மனப்போக்கைக் கண்ட பரசுராமய்யர் வியப்பால் ஸ்தம்பித்து விட்டார்.

பாமாவின் நகைகள் ஒவ்வொன்ருய் குறைந்துகொண்டே வந்தன. அவை விற்றுப் பணமாக்கப் பட்டு நாகராஜனின் படிப்புக்குச் செலவழிக்கப் பட்டன! பின்னல் நாகராஜன் படிப்பை முடித்து விட்டுப் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்ததும் அவனுக்கும் தனக்கும் விவாகமாகிவிடும்....அப்போது இந்த நகைகளைப்போல் பத்து மடங்கு அவன் தனக்குச் செய்து போட மாட்டான!....' என்று எண்ணி பெருமையால் பூரிப்பாள் பாமா.

* * *

இப்போது நாகராஜன் ஒரு எம்.ஏ. காலேஜ் ஒன்றில் அஸிஸ்டெண்ட் புரொபஸர் உத்தியோகம் கிடைத்தது. நல்ல அந்தஸ்து—பெருமையுள்ள பதவி. பரசுராமய்யர் பெருமையால் பூரித்துப்போய் விட்டார். சீக்கிரத்தில் பாமாவுக்கும் அவனுக்கும்திருமணம் செய்து வைத்து விடத் தீர்மானித்து விட்டார்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. மாடியில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்தான் நாகராஜன். மெள்ள மாடி ஏறி வந்தாள் பாமா. அவள் வந்ததைப் பார்த்தும் பார்க்காதது போல் கால்மேல் கால் போட்டவாறு படித்துக்கொண்டிருந்தான் நாகராஜன். மெள்ள அவனுக்கெதிரே வந்து நின்ற பாமா "அத்தான்!...." என்று அழைத்தாள். அவள் குரலில் அபரிமிதமான வாஞ்சைநாதம் இழைந்திருந்தது.

"என்ன?...." என்று கேட்டுவிட்டு நிமிர்ந்தான் அவன்.

"வந்து.... இனிமேல்...." தயங்கினாள் அவள்.

"இதோ பாரு....சொல்றதான சீக்கிரம் சொல்லு...." அவன் குரலின் கண்டிப்பு அவளுக்குப் புதிதாக இருந்தது.

"வந்து.... உங்க படிப்பெல்லாம் என்னவோ முடிஞ்சு போச்சு.... நல்ல உத்தியோகமும் கிடைச்சுடுத்து.... அப்பா ரொம்பவும் சந்தோஷப் பட்டார். இப்போது அவருக்கு சதா நம்மைப் பற்றிய சிந்தனை தான்".

"நம்மைப் பற்றியா?" நாகராஜன் வியப்புடன் கேட்டான்.

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நம்மைப்பற்றிதான் —அதாவது நமது விவாகத்தைப் பற்றி" இதைக் கூறும் போது நாணம் கலந்த புன்னகை பாமாவின் உதடுகளில் மின்னிற்று.

'தொப்' பென்று புத்தகத்தை மேஜை மீது போட்டுவிட்டு நிமிர்ந்தான் அவன்.

"என்ன, உனக்கும் எனக்கும் விவாகமா?.... யார் சொன்னார்கள்!...." பாமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"ஏன் யாராவது சொல்ல வேண்டுமா என்ன!...."

"நீ அப்படி தவருகக் கற்பனை செய்துக் கொண்டிருந்தால் அதற்கு நான் என்ன செய்வது?...."

திகைப்புடன் அவனை நோக்கினுள் பாமா.

"அத்தான்!.... நீங்கள் விளையாடுகிறீர்களா?.... அல்லது நிஜமாகவேதான்...."

"விளையாட்டென்ன!.... நிஜமாகத்தான் சொல்லுகிறேன். இப்போது நான் படித்திருக்கும் படிப்புக்கும், அமர்ந்திருக்கும் உத்தியோகத்துக்கும், எவ்வளவோ பெரிய உத்தியோகஸ்தர்கள் போட்டி போட்டுக் கொண்டு நல்ல சீர் வரிசைகளுடனும், வரதக்ஷிணையுடனும் பெண்ணைக்கொடுக்க வருவார்கள். உன்னை மணந்து கொள்ளுவேன் என்று நீ எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அது யார் தவறு பாமா? அந்தஸ்தையும், செல்வத்தையும் விரும்பாதவர் இந்த உலகத்தில் யாராவது உண்டா?.... நீயே சொல்...." தன் மனத்தில் அழுந்தி இருந்த எண்ணத்தை ஒளிவு மறைவின்றி உடைத்து விட்டான் அவன். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு கல்லாய்ச் சமைந்துவிட்டாள் பாமா.

"பாமா!.... உன் தந்தைக்கு நான் மிகவும் கடமைப்பட்டவன் என்பதை மறக்கவில்லை. ஆனுல் கடமையை மட்டும் எண்ணி எனக்கு வரவிருக்கும் மகத்தான அந்தஸ்தையும், பெருமையையும் தியாகம் செய்யச் சொல்லுகிருயா...." அவன் நெஞ்சு பாருங்கல்லாக இருந்தது பேசும் போது.

".... உண்மைதான்!.... நீங்கள் உங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்துவதுதான் நியாயம்". கண்களிலிருந்து மடை திறந்த வெள்ளம் போல் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கீழே இறங்கிச் சென்று விட்டாள் பாமா.

முன்புற ஹாலில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார் பரசுராமய்யர். காலடி சப்தம் கேட்டு நிமிர்ந்த அவர் "பாமா.... இங்கேவா....!" என்று அன்புடன் அழைத்தார்.

"ஏனப்பா!...." தன் மனக் குழப்பத்தையும், கலவரத்தையும் சமாளித்துக் கொண்டு கேட்டாள் அவள்.

"இப்படி உட்கார்!...." தமக்கெதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினர் அவர்.

என்ன சொல்லப் போகிறார் என்று புரியாமல் விழித்துக் கொண்டே உட்கார்ந்தாள் பாமா.

''நாகராஜன் எங்கே?....''— என்று திடுமெனக் கேட்டார் பரசுராமய்யர்.

''மாடியிலே இருக்கார்!'' என்று சுருக்கமாதப் பதிலளித்தாள் பாமா.

''....வந்து....முதல்லே உன் இஷ்டத்தைக் கேட்கணும். அப்புறம் அவன் கிட்டே பிரஸ்தாபிக்கலாம்னு இருக்கேன்....'' என்று இழுத்தார் அவர்.

''எதைப்பற்றி அப்பா!....'' அவர் சொல்லப் போவதை ஒருவாறு ஊகித்துக் கொண்டாலும் தெரியாததுபோல் நடித்தாள் பாமா.

''ரொம்ப நாளாகவே நினைத்துக் கொண்டிருக்கும் விஷயம் தானே இது!.... உனக்கும், நாகராஜனுக்கும் ஒரு நல்ல நாளில் முடிபோட்டுவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்....ஆனால் எதையும் உன்னைக் கேட்காமல் செய்ய எனக்கு விருப்பமில்லை....''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்....?'' என்று மனக்குழப்பத்தை மறைத்துக் கொண்டு கேட்டாள் பாமா.

''ஏன் பாமா!''

நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டே பாமா, ''அப்பா! உடன்பிறந்த சகோதரன்போல் அவருடன் இவ்வளவு நாட்கள் பழகிவிட்ட பிறகு, அவரையா மணந்து கொள்ளச் சொல்லுகிறீர்கள்....? அது கொஞ்சங் கூட பொருந்தாது அப்பா.... அந்த எண்ணத்தை விட்டுவிட்டு நம்ப நாகராஜனுக்கு வேறு ஒரு நல்ல இடமாகப் பாருங்கள்....'' படபடவென்று துடிக்கும் தன் நெஞ்சத்து உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மட மட வென்று சொன்னாள் அவள்.

அவளிடமிருந்து அத்தகைய ஒரு பதிலை சற்றும் எதிர்பார்க்கவில்லை பரசுராமய்யர். மேலே என்ன பேசுவது என்றுகூடத் தோன்றவில்லை அவருக்கு.

உள்ளே செல்லத் திரும்பினாள் பாமா.

''சரி அம்மா!.... உன் இஷ்டத்திற்கு விரோதமாக நான் ஏன் ஒரு காரியம் செய்யப் போறேன்....'' துயரம் தேங்கிய குரலில் பரசுராமய்யர் கூறிய போது பாமாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

* * *

நாட்கள் தேய்ந்தன. ஒருநாள் நாகராஜனையே தேடிக் கொண்டு ஒரு வரன் வந்தது. அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸில் உயர்ந்த சம்பளம் வாங்கும் கனகராஜய்யர் தம் பெண் கீதாவை அவனுக்கு ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணையுடன் கொடுக்க முன் வந்தார். கேட்க வேண்டுமா?.... நாகராஜனுக்குப் பரிபூரண சம்மதம். அவன் எதிர்பார்த்தது அது தானே!....

ஒரு நல்ல நாளில் விவாகம் நடந்தேறி விட்டது. கொஞ்ச நாட்களுக்கெல்லாமே நாகராஜன் பிரிந்து சென்று ஆனந்தமாகத் தனிக் குடித்தனத்தை ஆரம்பித்து விட்டான். அவனுடைய ஈவிரக்கமற்ற தன்மையை அப்போதிலிருந்து தான் புரிந்து கொண்ட பரசுராமய்யர் அதே வருத்தத்தில் உள்ளம் உடைந்து போனார்.

நாகராஜனை ஆதியிலிருந்து படிப்பு சொல்லிக் கொடுத்துக் காப்பாற்றி வந்ததனால் ஊரில் சில இடங்களில் கொஞ்சம்

கடன் பாக்கியாக நின்றிருந்தது. அவற்றை அடைக்க வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருந்தார் பரசுராமய்யர்.

இதனிடையில்தான் அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டான் சேதுராமன். பாமாவுக்குத் தாய் வழியில் ஏதோ உறவினனை அவன், மிலிடரியில் வேலையாக இருந்தான். எவ்வளவோ வருஷங்களுக்குப்பிறகு ஊருக்கு ஒரு மாத லீவில் வந்திருந்த அவன் பரசுராமய்யரைப் பார்க்க வந்திருந்தான். இயற்கையிலேயே இரக்க சிந்தை வாய்ந்த அவன் பரசுராமய்யரின் கஷ்ட நிலைமையைக் கண்டு மனம் வருந்தி தான் வைத்திருந்த ரொக்கத்தைக்கொண்டு அவர் கடன்களை அடைத்து விட்டான். அவனுடைய விசால மனப்பான்மையையும், தன்மீது அவனுக்குள்ள பச்சாத்தாபத்தையும் கண்ட பரசுராமய்யர் மனம் நெகிழ்ந்தார். அவர் உள்ளத்தில் அதுவரை நாகராஜன் சுவிகரித்துக் கொண்டிருந்த இடத்தை சேதுராமன் பிடித்துக் கொண்டான். பாமாவை அவனுக்கு விவாகம் செய்து கொடுக்க எண்ணினர் அவர்.

கூடியசீக்கிரத்திலேயே பாமா சேதுராமன் இவர்களுடைய பரிபூரண சம்மதத்தின் பேரில் அவர்களுக்கு அதிக ஆடம்பரமின்றி திருமணம் நடந்தேறியது

சேதுராமனுக்கு ஒருமாத லீவு முடிந்துவிட்டது. அவன் திரும்பவும் மிலிடரிக்குச் சென்றுவேலை ஏற்றுக்கொள்ளவேண்டிய நாள் வந்துவிட்டது. பாமாவும், பரசுராமய்யரும் அவனைப் பிரிந்திருக்க வேண்டுமே யென்று ரொம்ப வருத்தப் பட்டனர். கூடிய சீக்கிரமே அவன் திரும்பவும் வேலையை மாற்றிக் கொண்டு வந்து விடுவதாக அவர்களுக்குத் தேறுதல் கூறி விட்டு, பிரிய மனமின்றி சென்ருன் சேதுராமன்.

ஏற்கனவே ஸ்கூல் பைனலில் தேறியிருந்த பாமா சேதுராமனைப் பிரிந்திருக்கும் துயரை மறப்பதற்காக டைப் யந்திரம் ஒன்று வாங்கிக்கொண்டு டைப் அடிக்கக் கற்றுக் கொண்டாள்.

நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன.

அன்று உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள் பாமா. வாயிற்புற அறையில்உட்கார்ந்துபேப்பர் படித்துக் கொண்டிருந்தார் பரசுராமய்யர். வாசலில் டாக்ஸி வந்து நின்ற சத்தம் கேட்டு கைவேலையை விட்டு விட்டு ஓடி வந்தாள் பாமா. டாக்ஸியிலிருந்து 'ஸ்டெச்சரில்' படுத்திருந்த சேதுராமனை இரண்டுபேராக உள்ளே எடுத்து வந்தனர். ஒரு காலை யிழந்து பரிதாபகரமான தோற்றத்துடன் படுத்திருந்த அவனைக் கண்டு 'ஓ' வென்று அலறிவிட்டாள் பாமா. அதற்குள் அங்கு

> வாழ்க்கையில் முன்னேறுவதற்கு பெரிய பெரிய முயற்சிகள் செய்து தோல்வியுற்றவர்களைப் பற்றி சிலர் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.
>
> மௌனமாக உட்கார்ந்திருந்த ஒரு ஆசாமி திடீரென உரத்த குரலில் "நான் என் வாழ்நாளில் ஒரு தடவை கூட எந்த முயற்சியிலும் தோல்வியடையவில்லை" என்ருன்.
>
> மற்றவர்கள் ஆச்சரியத்துடன் "அது எப்படி முடிந்தது?" என்றனர்.
>
> "எப்படியென்ருல், நான் என் வாழ்க்கையில் முன்னேறுவதற்காக எந்தவித முயற்சியும் செய்ததே கிடையாது"

வந்த பரசுராமய்யரும் சேதுராமனின் அலங்கோல நிலைமையைக் கண்டு திகைத்து விட்டார். அவர்களைக் கண்ட சேதுராமனும் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான்.

ஒரு நாள் மிலிடெரி லாரியில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று ஏற்பட்ட ஒரு விபத்தில் சேதுராமன் தன் வலது காலை இழந்து விட்டான். உடல் எந்த வேலைக்கும் இனி பயன் படாதவாறு ரொம்பவும் பலவீனப்பட்டு விட்டது. மேலதிகாரிகள் அவனிடமிருந்து பரசுராமய்யரின் விலாசத்தைத் தெரிந்து கொண்டு அவனை அங்கு கொண்டுவந்து விட்டு விட்டனர்.

இனி சேதுராமன் ஓடியாடி மற்றவர்களைப் போல் வேலை செய்ய முடியாது. அவன் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகருவதற்கே காலுக்குப் பதில் ஒரு மரக்கட்டையை ஆதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.... இதை நினைக்கும் போதே நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது பாமாவுக்கு. உலகமே இருண்டு காணப்பட்டது அவள் கண்களுக்கு.

சிறு வயதிலே தாயை இழந்து ஒரு சுகமும் அனுபவித்து அறியாத பாமாவுக்கு மணமானபின் பாவது நிம்மதிபிறக்கும் என்று நம்பியிருந்த பரசுராமய்யர் தம் ஒரே பெண்ணின் தலையில் விழுந்த இந்தப் பேரிடியை எண்ணி எண்ணி அதே துயரத்தால் உளுத்துவிட்ட இதயத்துடன் ஒரு நாள் உயிரை விட்டு விட்டார்.

ஏற்கனவே பட்டிருந்த துயரங்களுடன் தந்தையின் மரணமும் சேர்ந்தது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது பாமாவுக்கு. செய்வதின்னதென்றே புரியாமல் கலங்கிநின்ற சமயம் தான் அவளைக் கை கொடுத்து காப்பாற்ற முன் வந்தது அவள் கற்றிருந்த அந்தக் கலை. டைப் அடித்துக் கொடுத்து தன் கணவனையும், தன்னையும் காப்பாற்றிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்து விட்டாள் பாமா.

ஒன்றுக்கும் பிரயோஜனப் படாத பலவீனமான உடலுடன் ஒரு காலையும் இழந்து, பாமாவைக் கஷ்டப் படுத்தித் தான் பிழைக்க வேண்டி யிருக்கிறதே என்று எண்ணி எண்ணிக் குமுறுவான் சேதுராமன். ஆனால் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து அல்லல் பட்டிருந்த போதிலும் கூட பாமா, பெண்குலத்திற்கே உரித்தான சகிப்புத்தன்மையை தியாகபுத்தியை, கலங்கா நெஞ்சத்தை இழந்து விடவில்லை. கஷ்டங்களுக்கு மேல் கஷ்டங்களாக அனுபவித்ததனால் அவள் பொறுமை புடம்போட்ட பொன் போல்பிரகாசிக்க ஆரம்பித்தது,

சேதுராமன் வருத்தப்படும் சமயங்களில் அவனை ஆறுதல் கூறித் தேற்றுவாள் பாமா.

ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அதில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தனர் பாமாவும், சேதுராமனும். வாசலில் 'டைப் அடித்துக் கொடுக்கப்படும்' என்று ஒரு போர்டு மாட்டப்பட்டது. வாசல் திண்ணையில் தன் காலுக்குப் பதில் ஆதாரமாக வைத்துக் கொண்டிருந்த மரக்கட்டையுடன் உட்கார்ந்திருப்பான் சேதுராமன். யாராவது கையெழுத்துப் பிரதிகள் எடுத்து வந்தால் அதை வாங்கி பாமாவிடம் கொடுப்பான். பாமா டைப் அடித்து முடிந்ததும் அதை வாங்கி அதற்கு உரியவர்களிடம் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுவான்.

கையெழுத்துப் பிரதி முழுவதையும் டைப் அடித்து முடித்து விட்ட பாமா, அந்தத் தாள்களை சேதுராமனிடம் கொண்டு வந்து நீட்டினாள்.

''அதற்குள் முடிந்துவிட்டதா பாமா!....'' என்று பரிவுடன் கேட்டான் சேதுராமன். அதற்குள் வாசலில் ஹார்ன் சப்தம் கேட்டது. காரிலிருந்து இறங்கிய அந்த புருஷன் சேதுராமனிடம் வந்து டைப் அடித்த காகிதங்களை வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பதற்காகப் பர்ஸை எடுத்தான். வாயிற்படியோரமாக நின்றிருந்த பாமா உள்ளே சென்று விட்டாள்.

வந்திருந்த மனிதன் கொடுத்த பணத்துடன், மெள்ள திண்ணையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு இறங்கி ஒருகையால் திண்ணையின் ஒரு ஓரமாக வைத்திருந்த தன் மரக்கட்டையை எடுத்து ஆதாரமாக வைத்துக் கொண்டு மெள்ள நொண்டி உள்ளே வந்தான் சேதுராமன். பாமாவிடம் பணத்தை—ஒரு பத்து ரூபாய் நோட்டை – நீட்டினான்.

''நம் கையில் சில்லறை இல்லையே!.... நீங்கள் சரியான தொகையையே வாங்கி வந்து விடுவது தானே....'' என்று கூறி அந்த நோட்டை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள் அவள்.

''இல்லை பாமா!.... என்னைப் பார்த்துப் பரிதாபப் பட்டு, நம் கஷ்ட நிலைமைக்காக அவர் நமக்குப் பத்து ரூபாயாகவே கொடுத்து விட்டார்.... மீதி சில்லறையைக் கொடுக்க வேண்டாம்....'' என்று சந்தோஷத்துடன் கூறினான் அவன்.

''வேண்டாம்.... தயவு செய்து இதை அவரிடமே திருப்பிக் கொடுத்து விட்டு, பத்து பக்கம் டைப் அடித்ததற்கு ஒரு பக்கத்துக்கு நாலணு வீதம் நமக்குச் சேரவேண்டிய இரண்டரை ரூபாயை மட்டும் வாங்கி வாருங்கள்....'' என்று உரத்த குரலில் கண்டிப்புடன் கூறினாள் பாமா.

''ஏன் பாமா! நாமாக அவரிடம் 'கொடு' என்று கேட்கவில்லை....அவராக நம் நிலைமையைக் கண்டு பரிதபித்துக் கொடுத்துதவினுல் அதை நாம் வாங்கிக் கொண்டால் என்ன தவறு?''

''இல்லை.... அப்படிபட்ட ஒரு உதவி நமக்குத் தேவையேயில்லை.... ஏதோ இந்த வேலைக்குப் பிழைப்பதற்குக் கடவுள் நமக்கு ஒரு வழியைக் காட்டியிருக்கிறுர். அது நீடித்து நிரந்தரமாக நடந்து வருவாய் கிடைத்து வந்தால் அந்த வருமானமே நமக்குப் போதுமானது. இந்த அநாவசியமான பரிவும், அதிக பட்சமான உதவியும் நமக்குத் தேவையில்லை....'' என்று கூறி அந்த ரூபாய் நோட்டை அவனிடம் திருப்பிக் கொடுத்தாள் அவள்.

டைப் அடிக்கக் கொடுத்த மனிதனிடம் பணத்தைக் கொடுத்து விட்டு சரியான தொகையையே கொர்டுக்கும் படியாகக் கேட்டான் சேதுராமன். பத்து ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டு சரியான தொகையையே கொடுத்து விட்டு காரிலேறிக் கொண்டு சென்று விட்டான் அந்த மனிதன்.

* * *

அடுப்பைப் பற்ற வைத்து சேதுராமனுக்காக காப்பித் தயாரித்துக் கொண்டிருந்தாள் பாமா. சேதுராமன் கூடத்தில் போட்டிருந்த கட்டிலில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் இருந் தான்.

வாயிற் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுப் பரபரப்புடன் எழுந்து சென்று கதவைத் திறந்தாள் பாமா.

மலர்ந்த முகத்துடன் அங்கே நின்றிருந்தான் சற்று முன் காரில் வந்த மனிதன்—பாமாவின் அத்தான் நாகராஜன். கடுகடுத்த முகத்துடன் அவனை ஏறிட்டு நோக்கினாள் பாமா,

'உனக்கென்ன வேலை இங்கே இப்போது?....' என்பது போல் இருந்தது அவள் பார்வை. 'பாமா!'.... என்று குழைவுடன் கூடிய குரலில் அழைத்தான் அவன். "நான் சற்று முன்பு வந்தபோதுதான் நீ இங்கிருப்பதைத் தெரிந்து கொண்டேன். காலில்லாக் கணவனுடன் நீ நடத்தும் வாழ்க்கையைக்கண்டு உண்மையில் என் மனம் மிகவும் வருத்தப்பட்டது. உன் கையால் உழைத்து, உடலை வாட்டி உன் கணவனை உட்கார வைத்து நீ பாடுபடுவதைப் பார்த்து என் மனம் கலங்கிவிட்டது. உன் நிலைமையைக் கண்டு மனம் வருந்தி இந்த பணத்தை உனக்குக் கொடுப்பதற்காக வந்தேன்.... இந்தா !..." மூச்சுவிடாமல் கூறிய அவன் கைகளில் ஒரு கத்தை ரூபாய் நோட்டுகள் இருந்தன.

'வெடுக்' கென்று அவன் நீட்டிய ரூபாய் நோட்டுக் கத்தையை வாங்கி அதைத் தூர சுழற்றி எறிந்தாள் பாமா. கோபாவேசத்துடன் வீசி எறியப்பட்ட அது காரின் முன்புறச் சக்கரத்தில் உராய்ந்து கொண்டு போய் விழுந்தது.

"கருணை !..." என்று வெறுப்புடன் கூறிய பாமாவின் இதழ்க் கடையில் ஏளனச் சிரிப்பு நெளிந்தோடியது... "இந்தக் கருணை முன்பே இருந்திருக்க வேண்டும். இப்போது அது காலம் தப்பிய கருணையாகி விட்டது. இத்தனை வருஷங்களாக உம்முடைய இந்தப்பணம் இல்லாமலேயே எளிய முறையானாலும் மனநிறைவுடன் கூடிய வாழ்க்கையை நடத்தி வந்திருப்பதுபோலவே, இனியும் எங்கள் வாழ்க்கை நடந்து விடும். எனக்கும் இதயம், மான உணர்ச்சி எல்லாம் உண்டு. எப்பொழுதோ நடந்ததானாலும், காலம் விழுங்கிவிட்ட போதிலும் அந்த விஷயங்களை நான் இதற்குள் மறந்து விட்டு நீங்கள் அளிக்க வந்த இந்தப் பிச்சைக்காசைக் கை நீட்டி வாங்க முன் வருவேன் என கனவு காண வேண்டாம்... போய் வாருங்கள்...." என்று ஆவேசம் வந்தவள் போல் பாமா உரத்த குரலில் கூறி விட்டு படீரென்று வாயிற் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

உள்ளே கட்டிலில் படுத்திருந்த சேதுராமன் சற்றுப் புரண்டு படுத்தான். "காப்பி கொண்டு வரட்டுமா?...." என்று பரிவுடன் கேட்டாள் பாமா. சற்று முன்பு நாகராஜனிடம் பேசும்போது ஆக்ரோஷமும், ஆவேசமும் தொனித்த அதே குரலில் இப்போது பரிவும், அன்பும் ஒருங்கே நிரம்பி வழிந்தன.

நல்லகாலம் பொறக்குது!

சுரதா

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

நல்ல காலம் பொறக்குது
நல்ல காலம் பொறக்குது

ஐயாவைத் தேடி அதிர்ஷ்டம் வருகுது
வாலிபர்க் கெல்லாம் வருகுது யோகம்
ரோஜாப்பூ போல ராஜாத்தி வருகிறாள்
அல்லிப்பூ போல அழகி வருகிறாள்

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

கிளிஞ்சிபோல் இறகு உள்ள குருவிகள்
வெளியில் கிளம்பும் விடியற் காலையில்
பக்கிரி சொல்கிறான் பலிக்கப் போவுது
பாவா வாக்கு நடக்கப் போவுது

கவலை, கஷ்டம், கண்ணீர், வறுமை
இவைகளுக் கெல்லாம் ஆதரவு காட்டும்
துன்பம் இனிமேல் தொலையப் போவுது
மனிதரைப் பங்கு பிரித்துவைத் திருக்கும்
மதங்கள், ஜாதி எண்ணிக்கை எல்லாம்
எரிந்து முடிந்த கற்பூரம் போல
அடையாளம் இல்லாமல் அழியப் போவுது

செந்தமிழ் நாடு செழிக்கப் போவுது
நமது மொழிக்கு நல்ல காலம்
இனிமேல் நிச்சயம் ஏற்படப் போவுது
கூடிய சீக்கிரம் கற்கண்டுத் தமிழே
அரசாங்க மொழியாய் அமையப் போவுது
ஜக்கம்மா சொல்லடி ஜக்கம்மா சொல்லடி
பக்கிரி நாக்கை பலிக்க வையடி

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

அம்மைத் தழும்புகள் அதிகமாய் உள்ளவன்
மச்சு வீட்டு மங்கை ஒருத்தியின்
கழுத்தில் தாலி கட்டப் போகிறுன்
வைகாசி மாசம் விவாகம் நடக்கும்

அதற்குப் பிறகு அவனும் அவளும்
வெடித்த அரும்பும் வண்டும் போல
இருக்கப் போகிறுர் இனிக்கும் படுக்கையில்
சங்குச் சிரிப்பு பொங்கப் போவுது
அறையில் எரியும் விளக்கை சீக்கிரம்
அணைக்கப் போகிறுன் அடிக்கடி, அறையும்
இருட்டப் போவுது இவர்களுக் காக!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

கீறிய தேங்காய்க் கீற்று போல
வெண்ணிலா மிதக்கும் வேளை தன்னில்
எழுபது வயதுக் கிழவி ஒருத்தி
புதையல் எடுக்கப் போகிறுள் கொல்லையில்

இந்த ஊரில் அதிசயம் ஒன்று
நடக்கப் போவுது நாலைந்து நாளில்
எல்லாம் சொல்கிறேன் எடுத்துச் சொல்கிறேன்
பானைக் குழியில் படுத்துக் கிடக்கும்
ஈரச் சோறு இருந்தால் போடு!

திட்டம்

எஸ். டி. ஸ்ரீனிவாசன்

"நீங்க ஆயிரம் தான் சமாதானம் சொன்னாலும் உங்க அக்கா இன்னிக்கு நடந்திண்ட விதம் எனக்குத் துளிக்கூடப் பிடிக்கலே....''—வருத்தப் படும் தோரணையில் சொன்னாள் விசாலம்.

'அவள் மேலே கோபப்பட்டுப் பிரயோஜனமில்லை. உன் பிள்ளைக்குத் தன் பெண்ணைக் கொடுக்கிறேன்னு அவள் ரெண்டு வருஷத்துக்கு முந்தியே சொன்னா. நீ 'மாட்டேன்' னே. இன்னும் உன் பிள்ளைக்குக் கல்யாணம் ஆகலை. அவள் பெண்ணுக்கு இடம் குதிர்ந்து போச்சு. கல்யாணமும் 'ஜாம் ஜாம்'னு நடக்கப் போகிறது. அவள் ஏன் கர்வப்பட மாட்டா?....'' என்றார் நாராயணன்.

''என் பிள்ளைக்கு என்ன சோடை? ஆயிரக்கணக்கிலே கொட்டிக் கொடுத்து அவனுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுக்க ஏகப்பட்ட பேர் காத்திண்டிருக்கா.... இப்போ அவனுக்கு வரனு வராமல் போச்சு?.. நான் தான் ரொம்ப நல்லதாக வரட்டும் என்று இருக்கேன். ஆனால் இன்னிக்குக் காலம்பர உங்க அக்கா, பத்திரிகையையும் கொடுத்துட்டு அழைச்சுட்டும் போகும் போது நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துட்டேன். அவள் பெண்ணுக்குக் கல்யாணம் நடக்கிற அதே முகூர்த்தத்திலே நம்ப ராகவனுக்கும் கல்யாணம்....'' தீர்மானமாகச் சொன்னாள் விசாலம்.

''விசாலம்! நானும் ரெண்டு வருஷமாக உனக்குச் சொல்லிப் பார்த்தாச்சு. ரொம்பப் பேராசைப்பட்டுண்டு சுமாராக வர்ரதையும் விட்டு விடக்கூடாது. பையனுக்கோ வயசாயிண்டே வரது. அவன் இருக்கிறதோ தூரதேசம். சீக்கிரம் ஒரு பெண்ணை அவன் காலிலே கட்டறது தான் நல்லது.'' — பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னார் நாராயணன்.

''ராகவன் நான் கிழிக்கிற கோட்டைத் தாண்டமாட்டான். நான் போட்டு வச்சிருக்கிற 'லிஸ்ட்' படி சீர் செய்ய முன் வரவாள் பெண்ணைத்தான் நான் பார்ப்பேன்.... அதுக்கு ஒத்திண்டு வரவாள் ஆயிரம் பேர் இருக்கா.... ''சொல்லிக் கொண்டே தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றாள் விசாலம். சங்கடப்படும் மனத்தோடு வெளியே கிளம்பினார் நாராயணன்.

* * *

நாராயணன்—விசாலம் இவர்களுக்கு ராகவனைத் தவிர வேறு

புத்திர பாக்கியமே ஏற்படவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன் ஹானர்ஸில் முதல் வகுப்பில் தேறிய ராகவன் பம்பாயில் ஒரு சிறந்த உத்தியோகம், இருநூறு ரூபாய் சம்பளத்தில், கிடைக்கவே அங்கு சென்றான். நாராயணனுக்குப் போஸ்டல் ஆடிட் ஆபீஸில் உத்தியோகம். விசாலம் நாராயணனை மணந்து அவருடன் குடித்தனம் செய்ய வரும்போதே நிறைய சீர் வரிசைகளுடன் வந்தவள். அவளுடைய தந்தை சீர்காழி தாலுக்காவில் அவளுக்கு இரண்டு வேலி நிலம் மஞ்சள் காணியாக விட்டிருந்தார். சாப்பாட்டிற்கு அரிசியும் மேல் செலவுக்கு பணமும், அதிலிருந்து தாராளமாக வந்து கொண்டிருந்தது. ஆரம்ப முதலே விசாலம் செட்டாகக் குடித்தனம் செய்து பணத்தைச் சேர்த்து சென்னையில் அபிராமபுரத்தில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கினாள். பிள்ளையை ஹானர்ஸ் வரை படிக்க வைத்தாள். நாராயணன் ஒரு சுத்த அப்பாவி மனிதர். ஆபீஸ் போகும் நேரம் தவிர. மீதி நேரத்தில் ராமாயண, மகாபாரத புத்தகங்கள், காலக்ஷேபம், இவைகளுண்டு அவருண்டு. முதல் தேதி சம்பளத்தைக் கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்து விடுவார். அத்துடன் தீர்ந்தது அவர் பொறுப்பு.

ராகவன் ஹானர்ஸ் தேறினதுமே பலர் அவனுக்குப் பெண் கொடுக்க வந்தார்கள். ஆனால் விசாலம் பேராசைக்காரி. வரதக்ஷிணையாக நாலாயிரம், பாத்திரம் நகை, மற்றும் சீர்வரிசை இத்யாதிக்கு நாலாயிரம் என்று கணக்குப் போட்டு வைத்திருந்தாள். இதில் காலணா அளவுக்குக் குறைந்தாலும் தன் பிள்ளைக்கு அந்த பெண்ணைப் பண்ணிக் கொள்வதில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

சாரதா நாராயணனின் சகோதரி. ராகவனுக்குப் பம்பாயில் உத்தியோகம் ஆனதுமே சாரதா சென்னைக்கு வந்து தன் பெண் சுசீலாவை ராகவனுக்குக் கொடுப்பதாகச் சொன்னாள். நாராயணனும் உறவு விட்டுப் போகாமல் இருக்குமே என்று நினைத்தார். ஆனால் விசாலம், ''எனக்கு இருப்பது ஒரே பிள்ளை. நிறைய சீர் செனத்தியோடு நாட்டுப் பெண் வந்தால் தானே எனக்குக் கௌரவம்....'' என்று ஒரே பிடிவாதம் பிடித்தாள். சாரதாவின் கணவர் ஒரு ஏழை. விசாலம் எதிர்ப்பார்ப்பதில் பத்தில் ஒரு பங்குகூட அவரால் செய்ய முடியாது. ஆகவே சாரதா மன வருத்தத்துடன் தன் ஊருக்குத் திரும்பிச் சென்றாள்.

தினம் கணவர் காலை பத்து மணிக்கெல்லாம் ஆபீஸுக்குப் போய் விட்டால் அப்புறம் விசாலத்திற்கு வேறு வேலை கிடையாது. வீட்டைப் பூட்டிக் கொண்டு, சிநேகிதிகள் வீடுகளுக்குக் கிளம்பி விடுவாள். போகும் இடங்களிலெல்லாம் தன் பிள்ளையைப்பற்றியும் அவன் கல்யாணத்திற்குச் சம்பந்தி வீட்டார் என்னென்ன வாங்க வேண்டும், ஆடிப் பண்டிகைக்கு என்ன, ஆருமாதத்திற்கு என்ன, தீபாவளிக்கு என்ன என்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பாள்.

ராகவன் பம்பாய்க்குச் சென்ற ஆறு மாதத்திற்கெல்லாம் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தம் பெண்ணை ராகவனுக்குக் கொடுக்க முன் வந்தார். விசாலம் எதிர் பார்த்த அளவுக்கு தான் சீர் செய்வதாக ஒத்துக் கொண்டார். தந்தி கொடுத்து ராகவனை பம்பாயில் இருந்து

வரவழைத்தாள் விசாலம். வரும் போதே அவன் "அம்மா! எங்கமானேஜிங் டைரக்டர் என் வேலையைக் கண்டு சந்தோஷப் பட்டு என் சம்பளத்தை ஐம்பது ரூபாய் உயர்த்தி இருக்கிறார் அம்மா" என்று சந்தோஷத் தோடு கூறினன்.

அன்று எல்லோரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெண் லலிதா வைப்போய்ப் பார்த்தனர். எல் லோருக்கும் பெண் பிடித்திருந் தது. 'கிட்டி முட்டி' வரும்போது தன்னுடைய சீர் லிஸ்டை விசா லம் இன்னும் பெரிதாக்கிவிட் டாள். தன் 'எஸ்டிமேட்டில்' இன்னும் இரண்டாயிரம் ரூபாய் அதிகமாக்கி விட்டாள். இன்ஸ்பெக்டர் சற்று அதிர்ச்சி யடைந்தவராய். "நீங்கள் முத லில் சொன்னதற்கெல்லாம் நான் ஒத்துக் கொண்டேன். ஆனல் திடுமென்று இப்போது இன்னும் இரண்டாயிரம் உயர்த்தி விட்டால் நான் என்ன செய்வது?...." என்று கெஞ்சாத குறையாகச் சென்னர்.

"முதலில் நீங்கள் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தபோது என் பிள்ளைக்குச்சம்பளம் இருநூறு. இப்போது அவனுக்கு இருநூற் றைம்பதுரூபாய் சம்பளம். நீங் கள் அதற்குத் தகுந்தாற்போல் செய்யத்தான் வேண்டும்" என்று ஒரே தீர்மானமாகச் சொன்னள். கல்யாணம் நின்று விட்டது. ராகவன் பம்பாய்க்குத் திரும்பி விட்டான்.

அடுத்ததாக சென்ற வருஷம் ஒரு எஞ்ஜினீயரின் பெண் வந்தது. விசாலம் ராக வனைப் பம்பாயில் இருந்து வர வழைத்தாள். ஆனல் விசாலத் தின் பேராசையால் அதுவும் நின்று விட்டது.

தீபாவளியின் போது ராகவன் ஒரு மாத லீவில் சென்னைக்கு வந்திருந்தான். அவன் சென்னை யில் இருந்த காலத்தில் ஒரு நாள் கும்பகோணத்தில் இருந்து சங்கரன் வந்திருந்தார். சங்கரன் நாராயணனின் பால்ய சிநேகிதர். இருவரும் பி, ஏ. வரை ஒன்றுகவே படித்தவர்கள். அவருக்கு கௌசல்யா என்ற ஒரு பெண் இருந்தாள். சென் னைக்கு வந்த போது ராகவனைக் கண்டார். கௌசல்யாவை அவனுக்குக் கொடுத்து விட லாம் என்ற சபலம் தட்டியது அவருக்கு. கட்டாயப் படுத்தி நாராயணன், விசாலம், ராக வன் மூவரையும் தன்னுடன் கும்பகோணத்திற்கு அழைத் துப் போனர். பெண் எல்லோ ருக்கும் பிடித்திருந்தது. தான் இதுவரை பார்த்த பெண்கள் எல்லோரையும் விட கௌசல் யாவே ராகவனின் மனத்தை அதிகம் கவர்ந்தாள். ஆனல் திரும்ப விசாலத்தின் பிடிவாதத் தால் இந்தஇடமும் குதிரவில்லை. ராகவன் பம்பாய்க்குச் சென்று விட்டான்.

இப்போது தன் பிள்ளைக்கு முன்னூறு சம்பளமாதலால் - இரண்டு வருஷங்களுக்கு முன் விசாலம் சொல்லிக் கொண் டிருந்த சீர்களைக் காட்டிலும் அவள் அதிகமாக எதிர்பார்த் தாள்.

விசாலத்தின் பேராசையைக் கண்டு பெண் வைத்திருப்பவர் கள் அவளை அணுகவே பயப்பட் டனர்.

நாராயணனின் மனம் மிகவும் வருந்தியது. எப்படியாவது தன் பிள்ளைக்குக் கல்யாணம் ஆகி, குடியும் குடித்தனமுமாக இருப்பதைப் பார்க்க அவர் விரும்பினர். தன் மனைவியின் பேராசை அதற்குக் குறுக்கே நிற்பது அவருக்குத் துளிக் கூட பிடிக்கவில்லை. இருந்தாலும் மனைவியை விரோதித்துக்

கொண்டு ஏதாவது ஒரு இடத்தை ராகவனுக்கு முடித்து வைக்கவும் அவருக்கு அவ்வளவு துணிச்சல் ஏற்படவில்லை.

அன்று காலையில் சாரதா, ஏதோ ஒரு இடத்தில் தன் பெண்ணுக்கு ஏற்பாடு செய்துக் கொண்டு, பத்திரிகையும் போட்டு எடுத்துக்கொண்டு தன் சகோதரன்வீட்டாரை அழைக்க வந்தாள். அவள் பேச்சோடு பேச்சாக, ''பெண் வைத்திருக்கிறவாள் பிள்ளை வீட்டாரை அணுகினால் பிள்ளை வீட்டார் உச்சாணிக் கிளையிலே ஏறிக் கிரு! பெண் என்று உலகத்திலே ஒருத்தி பிறக்கிறத்துக்கு முந்தியே அவளுக்கு ஒரு ஆம்படையானையும் ஈஸ்வரன் சிருஷ்டிக்கத்தான் செய்யருன். இதை பிள்ளைவீட்டார் மறந்துடரு. பிள்ளையை வச்சிண்டிருக்கிற ஒவ்வொருத்தரும் தாங்கள் ஒரு பெண்ணைத் தன் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக்க வில்லை என்ருல் அந்தப் பெண் ஆயுசு பூராவும் கன்னியாகவே நின்னுடும்னு நினைக்கிரு. ஆனல் எந்தப் பெண்ணும் அப்படி நின்னுடறது இல்லை. அதற்கு ஏத்தவரன் ஏதாவது வரத்தான் வர்ரது....'', என்று இடித்துக் காட்டி விட்டுப் போனது நாராயணன் விசாலம் இருவர் உள்ளத்திலும் 'சுருக்' கென்று பட்டது. அவள் வார்த்தைகள் தான் விசாலத்தை தன் பிள்ளைக்கும் எப்படியாவது அதே முகூர்த்தத்தில் கல்யாணத்தைப் பண்ணிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வரச் செய்தது.

* * *

நாராயணன் சாப்பிட்டு விட்டு ஆபீஸுக்குப் போய் விட்டார். கிட்டு வாத்தியார் வீட்டுக்குக் கிளம்ப வேண்டும் என்று நினைத்தாள் விசாலம். அவரே வந்துவிட்டார். அவர் ஒரு கல்யாண தரகர். அவர் பேஷான ஒரு இடம் கொண்டு வந்திருந்தார். பத்தாயிரம் ரூபாய் வரையில் அவர்கள் செய்ய ஒத்துக்கொண்டிருப்பதாயும் சொன்னுர் ''பெண் இண்டர் வரை படித்திருக்கிருள். தகப்பனருக்கு மத்திய அரசாங்கத்தில் உத்தியோகம். பெற்ருேருக்கு ஒரே பெண். கல்யாணத்தை முடிப்பதற்கென்று ஒரு மாத லீவில் அவர் வந்திருக்கிருர். பெண்ணைப் பத்திச் சொல்லவே வேண்டாம். நல்ல அழகு. பாட்டு, பிரம்மானந்தமாகப் பாடுவாள். நீங்க 'ஊங்' கொட்டினல் அடுத்த முகூர்த்தத்தில் கல்யாணம்....'' என்ருர்.

இந்த இடத்தை—பத்தாயிர ரூபாய் சீருடன் வரும் இதை—எப்படியும் விடக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள் விசாலம். அடுத்த திங்கட்கிழமை நல்ல நாளாக இருந்தால், பத்து மணிக்கு மேல் விசாலமும் நாராயணனும் முதலில் பெண்ணைப் போய்ப் பார்ப்பதென்றும் பிறகு ராகவனை

உமா
சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ. 3
வெளி நாடுகள்	ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

விளம்பர விபரங்களுக்கு நிர்வாகிக்கு எழுதவும்.

★

உமா
4/32, தாதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1. போன்: 2200.

வரவழைப்ப தென்றும் ஏற்பாடாயிற்று. மாலையில் தன் கணவன் வந்ததும் விஷயத்தை அவரிடம் சொன்னாள் விசாலம். எப்படியாவது சீக்கிரம் ராகவன் கிரகஸ்தனானால் அதுவே போதும் என்று அவர் விசாலத்தின் ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார்,

* * *

அன்று திங்கட்கிழமை. பெண் பார்க்கப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தாள் விசாலம். நாராயணனும் அன்று ஆபீஸுக்கு லீவு போட்டிருந்தார்.

மணி ஒன்பதரை. தபாற்காரன் ஒரு கல்யாணப் பத்திரிகையை ஜன்னலின் வழியாக விட்டெறிந்து விட்டுச் சென்றான் யார் அதை அனுப்பி இருக்கிறார்கள், என்று அறிய மெதுவாக விசாலம் அதை எடுத்துப் பிரித்தாள். பத்திரிகை ஆங்கிலத்தில் இருந்தது. ஒரு கண்ணோட்டம் விட்டாள் விசாலம். அவளுக்குத் தெரிந்த ஆங்கில அறிவை வைத்துக் கொண்டு அதைப்படிக்கமுயன்றாள். "ராகவன், கௌசல்யா, நாராயணன் சங்கரன்" என்ற வார்த்தைகள் அதில் இருந்தன. அவளுக்குப் 'பகீர்' என்றது. 'பரபர' வென்று அதை எடுத்துக் கொண்டு கணவனிடம் ஓடினாள்.

"என்ன, இதை யார் அனுப்பி இருக்கா.' யாருக்குக் கல்யாணம்?...." என்று கேட்டாள் சற்று கலவரத்துடன்.

நாராயணன் அதை ஒரு முறை படித்தார். அவர் உடல் என்னமோ செய்வது மாதிரி இருந்தது. நெற்றியில் வேர்வை முத்து முத்தாய்க் கோத்து நின்றது.

"யாருக்குக் கல்யாணம்? ஏன் இப்படி பிரமை பிடித்தவர் மாதிரி உட்கார்ந்திருக்கேள்?" என்றாள் மறுபடியும்.

"நம்மை அறியாமல் ஏதேதோ நடந்துபோச்சு. நம்ம ராகவனுக்கும் அந்தக் கும்பகோணத்துப் பெண் கௌசல்யாவுக்கும் இருபதாம் தேதி கல்யாணம்...." கலவரத்துடன் உரைத்தார் அவர்.

"என்னது இது.? ஏன் விளையாடறேள்? யார் போய் ஏற்பாடு பண்ணா, யார் பத்திரிகை போட்டா? என்ன ஒரே கூத்தா இருக்கே...." ஒன்றுமே புரியாமல் விழித்தாள் விசாலம்.

"பத்திரிகை பம்பாயிலே 'பிரிண்ட்' ஆகி இருக்கு. நம்ம ராகவன்தான் இதை பிரிண்ட் பண்ணி இருக்கணும். அவனேதான் இதை நமக்கு அனுப்பியும் இருக்கான்....யார் ஏற்பாடு பண்ணா, என்ன என்கிறது ஒண்ணுமே விளங்கலே...."

விசாலத்திற்குத் தலை 'கிறுகிறு' வென்று சுற்றுவது போல் இருந்தது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அடுத்த தபாலில் சங்கரனே மற்றொரு பத்திரிகை தமிழில் அடித்து அனுப்பி இருந்தான்.

அதைக் கண்டதும், விசாலம் "இதெல்லாம் ஒரே மர்மமாக இருக்கு.... முகூர்த்தத்துக்கு இன்னும் மூணே நாள் இருக்கு. அவாள் ஆயிரம் ரூபாய்க்கு மேலே செய்ய முடியாது என்று அப்பவே சொன்னா. நாம் ரெண்டு பேரும் உடனே கும்பகோணத்துக்குப் போய் இந்தக் கல்யாணத்தை நிறுத்தி யாகணும்...." என்றாள்.

அன்று இரவு இருவரும் கும்பகோணத்திற்குக் கிளம்பினர்.

சங்கரன் வீட்டை அடைந்ததும் சங்கரன் தம்பதிகள் இவர்

களை அன்போடு வரவேற்றனர். விசாலம், சங்கரனின் மனைவி ஜானகியை அணுகி "யார் இந்தக் கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணது? எவ்வளவு சீர் செய்யறதாக உங்கள் எண்ணம்?...." என்று அதிகாரத்தோடு கேட்டாள்.

"சம்பந்தியம்மா: எங்கள் மேலே கோவிச்சுக்காதேயுங்கோ. போனவாரம் உங்க பிள்ளையாண்டான் இங்கு வந்திருந்தார், முகூர்த்த தேதியை அவர்தான் வச்சுக் கொடுத்தார்.... ஆயிரம் ரூபாய்க்கு நாங்க செய்கிறதாக ஒத்துண்டோம். எங்க அப்பா அம்மா வந்து கேட்டா நீங்க ஒண்ணும் சொல்லவேண்டாம்னு சொல்லி விட்டுப் போய் விட்டார்" என்றாள். விசாலத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

தன் கணவனிடம் போய், "என் ராகவன் இவ்வளவு தூரம் செய்வான் என்று நான் துளிக்கூட நினைக்கவில்லை.... நாம் கல்யாணத்திற்கு இருக்க வேண்டாம். பட்டணம் போகலாம், வாங்கோ" என்றாள்.

நாராயணன்." விசாலம்! நடந்தது நடந்து போச்சு. இனி வருத்தப்படறதிலே பிரயோசனம் இல்லை. நம் ஒரேகுழந்தை கல்யாணத்திற்கு நாம் இல்லாது போறது நன்னு இருக்கா.' மீதிப்பேர் நம்மைப் பத்தி என்ன நினைச்சுப்பா...." என்றார்.

விசாலமும் முனுகிக் கொண்டே இருந்தாள். ராகவன் பம்பாயிலிருந்து எல்லோருக்கும் பத்திரிகை அனுப்பி விடவே அவனுடைய உறவினர்கள் எல்லோரும் கல்யாணத்திற்கு வந்து விட்டனர்,

கல்யாணத்தன்று விடியற் காலையில் தான் ராகவன் பம்பாயில் இருந்து வந்தான். விசாலம் அவனைச் சுட்டெறித்து விடுபவள் போல் பார்த்தாள். ஏதோ கோபமாக அவனிடம் பேசினாள். அவன் ரொம்பச் சாவதானமாக, "அம்மா! பெண் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது.... பணம் இன்னைக்கு வரும், நாளைக்குப் போகும்.... அதனாலே உங்களையும் கேட்காமல் என் இஷ்டப்படி இந்த இடத்தை நானே முடிச்சிண்டுட்டேன்.... என்னை மன்னிச்சு ஆசீர்வதிக்கணும்...." என்றான்.

முகூர்த்தம் முடிந்து, கல்யாணத்திற்கு அவர்கள் செய்து கொடுத்திருந்த பாத்திரம் முதலியவைகளைப் பார்த்த போது விசாலத்திற்கு அகங்காரம் சொல்லி முடியவில்லை. கல்யாணம் நடந்த மறுநாள், எல்லோரும் ஊருக்குக் கிளம்பி விட்டனர்.

விசாலம் இரண்டு நாட்களாக யாருடனும் பேசாமல் முகத்தை 'உர்' ரென்று வைத்துக் கொண்டு சம்பந்தி முறுக்குடன் எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்தாள். அன்றிரவு ராகவன் பம்பாய்க்குப் போவதாக இருந்தது.

தான் அடைந்த பெருத்த ஏமாற்றத்தின் அதிர்ச்சியில் இருந்து மீளாத விசாலத்திற்கு பித்துப்பிடித்தது மாதிரி இருந்தது. அன்று இரவு எல்லோரும் சாப்பிட்ட பின் அவள் நாராயணன் இருக்கும் இடத்திற்குச் சென்று, "ராகவன் தன் இஷ்டப்படி தத்தாரியாகப் போய் விட்டான்.... எனக்குப் பட்டணத்துக்கு, இப்போ திரும்பிப் போக அவமானமாக இருக்கு. எங்க சிநேகிதிகள் எல்லாம் 'சம்பந்தி யாத்தவா கல்யாணத்திற்கு என்ன சீர் செய்ஞ்சா'ன்னு கேட்டால் நான் என்ன சொல்றது?.... என் முகத்தை

எங்கே கொண்டு போய் வச்சுக்கிறது ;.... ரயில்காரன்தான் இப்போ எங்கே வேணுமானலும் போகிறதற்கு முப்பது ரூபாய் டிக்கட் ஒண்ணு கொடுக்கிருனமே, பேசாமல் நம்ப ரெண்டு பேருக்கும் ரெண்டு டிக்கட் வாங்குங்கோ. ஆபீஸுக்கும் லீவு எழுதிப்போட்டுட்டுப் புறப்படுங்கோ. இப்படியே நாம் ராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி எல்லா இடத்திற்கும் போய்விட்டு, அப்புறம் பட்டணத்துக்குப் போவோம். போகிற வழிக்காவது புண்ணியமுண்டு....'' என்று விரக்தியோடு சொன்னுள்,

'' இதோ புறப்படலாம்....ஒரு நிமிஷம், சங்கரன்கிட்டே சொல்லிண்டு வந்துடறேன்....'' என்று சொல்லிவிட்டு நாராயணன் சங்கரனின் அறைக்குச் சென்ருர்.

மாடிப் படியண்டை நின்று கொண்டிருந்த விசாலத்தின் காதுகளுக்கு, மாடியில் ராகவனும் கௌசல்யாவும் பேசிக்கொண்டிருந்தது நன்ருகக் கேட்டது.

'' எங்கே நீங்க ஏமாத்திவிடறேளோ என்று நான் ரொம்ப கவலைப்பட்டிண்டு இருந்தேன்....'' இது கௌசல்யாவின் குரல்.

'' திட்டப்படிதான் எல்லாம் நடந்திண்டு வரதே, அதற்குள்ளே நீ ஏன் கவலைப்படணும்? ....சீக்கிரம் பம்பாயிலே இடம் பார்த்து உன்னை அழைச்சிண்டு போய்விடறேன்....'' இது ராகவனின் பதில்.

அதே சமயத்தில் நாராயணன் சங்கரனிடம், '' எல்லாம் நாம் போட்ட ரகசியத் திட்டப்படி நடந்துடுத்து. ஒவ்வொருத்தரும் அவா அவா பாகத்தை நன்னவும் நடிச்சுட்டோம். ராகவனும் நம்ம யோசனைப்படி பம்பாயிலே பத்திரிகையை அச்சடிச்சு அனுப்பிகுட்டை வெளியிடாமல் பழியை தான் எடுத்துண்டுட்டான். இப்படி புருஷாள் ஒத்துழைத்தால்தான் பொம்மனட்டிகளின் பேராசையை அடக்கலாம்....'' என்ருர்.

விசாலத்தின் தலை 'கிர்' ரென்று சுற்றியது. '' இவர்கள் எல்லாம் ஒன்ருகச்சேர்ந்து முன்னேற்பாடாக செய்த தந்திரமா இது ?'' என்று அவள் வாய் முணு முணுத்தது.

ஹாலின் மத்தியிலே கிடந்த சாய்வு நாற்காலியிலே அமர்ந்து சுவாரஸ்யமான நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள் நீலா. உள்ளேயிருந்து அவள் தாயின் குரல் கேட்டது.

''நல்ல பெண் இது! எப்போழுது பார்த்தாலும் கதை, கதை, கதைதானா? சாப்பாடு வேண்டாம், தூக்கம் வேண்டாம் ஒன்றுமே வேண்டாம்; கதை இருந்தால் போதும். அந்த நாளில் நாங்களெல்லாம்........''

துளசியம்மாளின் வார்த்தைகள் தங்கு தடையின்றி வளர்ந்து கொண்டே போயின.

''என்ன அம்மா இது? எதுக்கு இப்படி வளவள வென்று சத்தம் போடுகிறாய்? என்ன செய்யணும் இப்போ?''

''எனக்கு ஒன்றும் செய்ய வேண்டாமடி அம்மா! எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தால் தலையை நன்றாகத் துவட்டி அடித் தலை, மயிர் எல்லாவற்றையும் காய வைத்துக்கொள்ள வேண்டாமா என்றுதான்....''

சட்டென்று முடிந்திருந்த கூந்தலை இடதுகையினால் அவிழ்த்து விட்டுக்கொண்டாள் நீலா.

''இங்கே வந்து பாரேன். எல்லாம் சரியாகச் செய்து கொண்டுதான் இருக்கிறேன்''.

தாயை அடக்கிவிட்டாள் பெண். ஆயினும் தன் தவறையும் அது நிகழக் காரணமான தனது கதைப் பைத்தியத்தையும் எண்ணித் தனக்குத் தானே சிரித்துக் கொள்ளத்தான் செய்தாள். இமைப் பொழுதுதான் அங்கிலை. அதன் பிறகு மீண்டும்

அவள் கண்ணும் கருத்தும் கதையிலே பதிந்துவிட்டன.

இன்று நேற்றல்ல; சுமார் நாலைந்து வருஷங்களுக்கு முன்பிலிருந்தே அவள் உள்ளம் சிறு கதைகளிலும் நாவல்களிலும் லயிக்கத் தொடங்கி விட்டது. நாள் ஆக ஆக, கண்ட குப்பைகளையெல்லாம் படித்துப் பொழுதை வீணடிக்கும் வழக்கம் குறைந்து கதைகளில் சிறந்தவற்றைத்தேர்ந்தெடுத்து ஊன்றிப் படித்து விமரிசனம் செய்யும் பழக்கம் வளர ஆரம்பித்தது. அதிலும் கடந்த ஒரு வருஷமாக அவள் மனம் ''மனோஹர்'' என்பவரின் சிருஷ்டிகளை மிகவும் விரும்பி வரவேற்கலாயிற்று. மனோஹரின் முதல் கதை மிகச் சிறப்பாக இருந்தது. அதன் பிறகு அந்தப் புனை பெயரில் எழுதுபவர் கதைகள் அனைத்துமே அவள் வரையில் தேனாகத்தான் இனித்தன. அது எதனால்? உண்மையிலேயே அவை சிறந்தவைதாமா; அல்லது மனோஹர் என்ற பெயரிலே விழுந்த ஒரு மோகத்தில் சூழ்ந்த மயக்கமா என்பது அவளுக்கே புரியாத புதிர். இப்போதும் மனோஹரின் நாவலைத்தான் அவள் அத்தனை சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தாள். அதிலும் வாசிக்கும் கட்டம்........!

மனத் தத்துவ ரீதியிலே காதலைப் பற்றிப் பக்கம் பக்கமாக விளாசியிருந்தான் மனோஹர். காணாத மனிதர் அல்லது பொருள்மீது ஒருவர் மனம் பிரேமைகொண்டு சதாகாலமும் அதே நினைவாக இருந்து, பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தான் பிரேமைகொண்ட மனிதர், அல்லது பொருளைக் காண நேரும் போது, மனத்திலே உருவாகியிருந்த கற்பனை உருவைவிட நேரிலே கண்டது தாழ்ந்ததாக இருந்தால் பிரேமை கொண்ட மனத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்ற கேள்வியை எழுப்பி அதற்குப் பல்வேறு ரூபங்களில் பதில் கொடுத்திருந்தான் மனோஹர். எவ்வளவோ தெளிவாக எழுதியிருந்தும் பிரச்னை சற்றுக் கடுமையானதாக இருந்ததால் நீலாவால் லேசில் மனசிலே கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம் அவள் கேவலம் ஒரு வாசகி என்கிற நிலையிலே மட்டும் அதைப் படிக்காமல் தன் மன நிலையோடு அவ்விஷயத்தைப் பொருத்திக்கொண்டு அவஸ்தைப் பட்டதுதான். தன் மனப்போக்கை அநுசரித்து வரும் இடங்களையெல்லாம் அவளால் புரிந்துகொள்ள முடிந்தது; ரசிக்கவும் செய்தாள். அதற்கு எதிரிடையான விஷயங்களை அவளால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை; ரசிக்கவும் முடியவில்லை. கடைசியில் ''எல்லாவற்றையும் ஆற அமர யோசித்துப் பார்க்குமிடத்து, அவசரப்பட்டுக் கண்ணால் காணாத மனிதர் மீதோ, பொருள் மீதோ மனசை ஓட விடாமல் தடுத்துக் கொள்வது மிகவும் நலம்'' என்று முடித்திருந்தான் மனோஹர்.

''ஆ! அப்படியானால்?.... என் மனம் மனோஹரை நேசித்தது தவறுதானா?....''

அதற்கு மேல் அவளால் படிக்க முடியவில்லை. மூளையில் ஏற்பட்ட குழப்பம் தலைவலியை உண்டுபண்ணி விட்டது. புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்தாள். அதனால் அவள் அந்தப் பிரச்னையிலிருந்து விடுபட்டுவிட முடியுமா? புத்தகத்தை மூடி வைத்தால் என்ன, எங்கே சென்றால் என்ன, என்ன செய்தால் என்ன! மனம் தன் போக்கிலே இயங்கிக் கொண்டு தான் இருந்தது.

வக்கீல் ரங்க பாஷ்யம் நடுத்தர அந்தஸ்தை உடையவர். நல்ல குணசாலி. அவர் மனைவி துளசியும் அவரைப் போலவே நற்குணங்களும் பெருந்தன்மையும் கொண்டவள். அவர்களுக்கு நாலைந்து குழந்தைகள் பிறந்து காலமான பின் பிறந்தவள் நீலா. அதனால் அளவற்ற செல்லம். அவர்கள் இருந்த வீடும், பாங்கியிலே இருந்த சிறிது ரொக்கமும் அவளுக்கே. அவள் எஸ். எஸ். எல். ஸி. வரைபடித்தாள். அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கினாள். மூன்று வருஷ காலமாக அவளுக்குக் கல்யாணம் செய்ய முயன்று கொண்டிருக்கின்றனர் பெற்றோர். பிரஸ்தகாலம் வரவில்லை. சென்ற வருஷத்துக்கு முன்பு வரையில் நீலா தன் இல்வாழ்க்கை சம்பந்தமாகத் தனக்குள் எவ்விதத் திட்டமும் வகுத்தவள் இல்லை. பெற்றோர் பார்த்துச் செய்வதே சரி என்று இருந்தாள். வாய்க்கும் கணவன் குலம், குணம், அழகு, அறிவு ஆகியவற்றிலே குறை அற்றவனாக இருக்க வேண்டும் என்று மட்டும் தெய்வத்தைப் பிரார்த்தித்தாள். ஆனால் கடந்த ஒரு வருஷ காலமாகவோ, அவள் மன நிலையில் பெரிய மாறுதல் தோன்றி அவளை உலுப்பிக் கொண்டே இருந்தது. கவர்ச்சிகரமான எழுத்தின் மூலம் அவள் உள்ளத்திலே மனோஹர் புகுந்து கொண்டதுதான் அதற்குக் காரணம்.

'....மனோஹர்! எத்தனை அழகான பெயர்! பெயரும் அழகு, எழுத்தும் உயர்வு! அதே போலத் தோற்றத்திலும் இருப்பாரா? வயசு என்ன இருக்கும்? கல்யாணம் ஆகியிருக்குமா? அவர் அழகராகவுமிருந்து பிரம்மசாரியாகவும் இருந்தால்.......'

இந்த ரீதியிலே ஓடத்தொடங்கிய மனசைத் திருப்ப அவளுக்குச் சக்தி இல்லை. நாள் ஆக ஆக அவள் மனத்தில் உதயமான பிரேமை வெண்ணிலா தனது தண் கிரணங்களை அதிகமாகப் பரப்பி அவள் உள்ளமெல்லாம் காதல் ஜோதியைப் பிரகாசிக்கச் செய்தது. 'அவர் யார், எப்படி இருப்பார், எங்கே இருப்பார், நினைவு கைகூட வழி என்ன' என்பன அவளுக்கு மட்டுப் படவே இல்லை, தாயிடம் சொன்னால் கர்நாடக மனுஷியான அவளால் புரிந்து கொள்ள முடியாது. தகப்பனாரிடம் சொல்லவோ வெட்கம், பயம். ஏதாவது ஒரு பத்திரிகாலயத்தின் விலாசத்திற்குக் கடிதம் எழுதலாம் என்றாலோ, அதை நினைக்கும் போதே

ஒருவன் தன் நண்பனிடம் சென்று "என் மனதில் ஒரு சிக்கலான பிரச்னை ஊசலாடுகிறது. நல்ல பணக்காரியான ஒரு விதவை இருக்கிறாள். அவளை சீர்திருத்த திருமணம் செய்து கொள்வதா? அல்லது என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஏழையான இளம் பெண்ணை மணப்பதா? இதை தீர்மானிக்க முடியாமல் திண்டாடுகிறேன்" என்றான்.

"என்னைக் கேட்டால் உன் மனதிற்கு துரோகம் செய்யக் கூடாது. உள்ளத்தைக் கவர்ந்த இளம் பெண்ணைத்தான் நீ மணக்க வேண்டும்"

"நீ சொல்வது சரிதான். இளம் பெண்ணையே மணந்து கொள்கிறேன்"

"சபாஷ்.... நீதான் உலகத்திலேயே உயர்வான மனிதன். அது இருக்கட்டும், அந்த பணக்கார விதவையின் விலாசத்தை தயவு செய்து எனக்குத் தருகிறாயா?"

அவள் குலே நடுங்கிற்று. அதனுல் எத்தகைய விபரீதங்கள் சம்பவிக்குமோ என்று. ஆக எதுவும் செய்யத் திறனற்ற நிலேயில் உருப்புரியாத ஒருவரிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டுத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த அவளால் ஒரே ஒரு காரியத்தைமட்டும் செய்ய முடிந்தது. மனேஹர் விஷயம் ஒரு முடிவுக்கு வராத வரையில் பெற்ருேரின் முயற்சிகள் வெற்றிபெறக்கூடாதென்றுகடவுளேப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவள் பிரார்த்தனேயின் பலன் தானே என்னவோ ரங்கபாஷ்யத்தின் முயற்சிகள் தோல்வி அடைந்து கொண்டே வந்தன. ஆனுல்—கடைசியில் இந்த நிலேக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கென்றே வந்தவன் போல வந்து சேர்ந்தான் சாரங்கன். நாலு மாசத்திற்குமுன் தெருக்கோடியில் இருந்த வீட்டிலே தாயுடன் குடியேறிய அவன் மீது விழுந்தது ரங்கபாஷ்யத்தின் நாட்டம். காளேப் பருவம். நல்ல பரம்பரை. சொற்பச் சம்பளமானுலும் நல்ல உத்தியோகம். சிறுகச் சிறுக அவனேப் பற்றி விசாரித்து உணர்ந்த ரங்கபாஷ்யம் அவனேயே தம் மாப்பிள்ளேயாக்கிக் கொண்டுவிடுவதென்ற முடிவுடன் துளசியிடம் அடிக்கடி அது பற்றிப் பேசிக் கலந்து ஆலோசிக்கலானுர்.

இந்தப் பிரஸ்தாபம் காதில் விழுந்தது முதல் மருந்து குடித்தவள்போல் ஆனுள் நீலா. எடுப்பிலே குமட்டல், பின்னர் சாரங்கனேப் பார்த்துப் பார்த்துச் சமாதானம், ஆயினும் மனேஹரிடமிருந்துபிரிய மறுத்த உள்ளம். இப்படிக் கிடந்து தத்தளித்தாள் அவள். அந்நிலேயிலேதான் அந்த மனேஹர் எழுதிய நாவலே அவளுக்கு அறிவுரை கூறலாயிற்று. அதை அவள் அறிவுரையாகக் கொண்டு திருந்த முயன்ருளா? முயன்ருலும் அவளால் முடியக் கூடிய காரியமா? தவித்தாள்.

* * *

அன்று ஏற்பட்ட மனக் கோளாறிலே பாதிக்கப் பெற்ற உடல், காய்ச்சல் என்ற பெயரில் படுக்கையிலே கிடந்து புரண்டு எழச் சுமார் இருபது நாட்களாயின. தனிமையில் ஓய்வு பெற்றுப் படுக்கையிலே கிடந்த போது அவ்ள் உள்ளம் எத்தனே எத்தனேயோ யோசனேகளேச் செய்து கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தது. அதன் படி உடல் நிலே குணம் பெற்றதும் மெல்லப் பெற்ருேரிடம் வாதாடலானுள், தன் கல்யாணத்திற்கு அவசரம் இல்லே என்று. ஏன் என்று அவர்கள் திருப்பிக் கேட்டபோது அவளால் காரணங்கூற முடியவில்லே. அவள் மன நிலே அறியாத பெற்ருேர் சாரங்கனேப் பேசி முடித்துவிட்டனர். முகூர்த்த தேதி குறிப்பிட வேண்டியதுதான் பாக்கி.

'சரி, அதுதான் நலம்' என்று தனக்குத்தானே முடிவு கட்டிக் கொண்ட நீலா, 'சாட்சிக்காரன் காலிலே விழுவதைவிடச் சண்டைக்காரன் காலிலே விழுவதே மேல்' என்கிற ரீதியிலே சாரங்கனிடமே சரண் புகுவது என்று தீர்மானித்தாள். தன் மனத்தில் இருப்பதை ரத்தினச் சுருக்கமாக அவனுக்கு எடுத்துரைத்து அவனே சகோதரன் ஸ்தானத்தில் இருந்து அந்த மனேஹரைத் தேடிப் பிடித்து அளிக்கும்படி கேட்டுக்கொள்வது என்று எண்ணினுள். ஏராளமான கதைகளேப் படித்ததன் விளேவு இது. ஏன்? இதையே தகப்பனுரிடம் முறையிட்டுக் கொண்டால்?

வாலிப உள்ளந்தான் காதலின் தன்மையை நன்கு உணர முடியும்; வயசானவர்களுக்கு விளங்காது என்பது அவள் சித்தாந்தம். இது நல்ல யோசனையா, பைத்தியக்காரச் செயலா என்று நாட்கணக்கில் யோசித்தாள். யோசிக்கும் போதெல்லாம் நல்ல யோசனை என்ற விடைதான் கிட்டிற்று. 'சீப்பை ஒளித்துவிட்டால் மணப்பெண்ணின் அலங்காரம் தடைப்பட்டு அதனுல் கல்யாணம் நின்று போய்விடுமா? அப்பா வேறு இடத்திலே ஏற்பாடு செய்ய மாட்டாரா?' என்ற கேள்விகள் அவளிடம் எழாமல் இல்லை. எனினும் சாரங்கனின் குணங்களைக் கேள்விப் பட்டதிலிருந்தும் அவன் முகத் தோற்றத்திலிருந்தும் அவளுக்கு ஒரு நம்பிக்கை, அவன் தனக்கு உதவுவான் என்று. எனவே துணிந்துவிட்டாள்.

ஆனுல் செயலில் இறங்கும் போது துணிவெல்லாம் பஞ்சாய்ப் பறக்கத் தொடங்கிற்று. அவனைக் கண்டு பேசவென்று அவன் வீடு வரைக்கும் போய்விட்டு அவள் வெறுமெனத் திரும்பிவிட்ட தடவைகள் கணக்கில் அடங்கா. கடைசியில் வேறொரு யோசனை எழவும் பரபரப்புடன் அதில் இறங்கினுள். சாரங்கனிடம் பேச நினைத்ததைச் சுருக்கமாகக் கடிதத்தில் எழுதி உறையில் இட்டு ஒட்டி மடியிலே வைத்துக்கொண்டு கிளம்பினுள். அது சுலபமானதாகத் தோன்றிற்று அவளுக்கு.

இரண்டு நாளாய் சாரங்கனின் தாய் ஊரில் இல்லை. பெண்ணைப் பார்க்கச் சென்றிருந்தாள். அது நீலாவுக்குத் தெரியாது. தெரிந்தால் போயிருக்க மாட்டாள். அவள் போனபோது வீட்டிலே அதிக சந்தடி இல்லை. சாரங்கன் முன்கட்டிலே குடி இருந்தான். மற்றொரு குடித்தனம் பின்கட்டிலே. அதுவும் ஒரு அநுகூலமாகத்தான் இருந்தது நீலாவுக்கு. முதலில் சாரங்கனின் அறையிலே நுழைந்தாள். நுழைகிறபோதே மடியிலே இருந்த கடிதத்தைத் தயாராகக் கையில் எடுத்து வைத்துக் கொண்டாள். அவனைப் பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டுவிட்டுக் கடிதத்தை அவன் முன் வைத்துவிட்டு அவன் தாயோ, மற்றவர்களோ பார்ப்பதற்குள் அங்கிருந்து சிட்டாய்ப் பறந்து விட வேண்டும் என்பது அவள் எண்ணம். ஆனுல் அறையில் சாரங்கன் இல்லை. அவள் சட்டென்று திரும்பியபோது, "போஸ்ட்!" என்று குரல் கொடுத்துக்கொண்டே அங்கே வந்த தபால்காரன் இரண்டு மூன்று கடிதங்களையும், நாலைந்து வார, பட்ச, மாதச் சஞ்சிகைகளையும் ஜன்னல் வழியே உள்ளே போட்டுவிட்டுச் சென்ருன். அசைப்பிலே அவற்றைப் பார்வையிட்ட நீலா அடுத்த கணம் தன்னை மறந்து, "ஆ!" என்று கூவிவிட்டாள், பத்திரிகைகள் கடிதங்கள் ஆகியவற்றின் மேல்விலாசங்களில் சில, "திரு. சாரங்கன் (மனோஹர்) அவர்கள்" என்றிருந்தன. சில, "மனோஹர்" என்று மட்டும் இருந்தன. நீலாவுக்கு எப்படித்தான் இருக்காது?

ஸ்நான அறையில் தலை துவட்டிக் கொண்டிருந்த சாரங்கன் தபால்காரனின் குரலைக் கேட்டு வேகமாக வந்தான். தங்கப் பதுமைபோல் நிற்கும் நீலாவைக் கண்டான். வியப்பும் சந்தோஷமும் போட்டியிட்டன. சிலையுருப் பெற்றிருந்த நீலா சாரங்கனைக் கண்டதும் நாணம் விரட்ட, உதடுகள் குறுநகை சிந்த அங்கிருந்து எடுத்தாள் ஓட்டம். தரையிலே கால் பாவா

மல் சென்று வீட்டை அடைந்த அவள் வெறி பிடித்தவள் போல் துள்ளினாள். சிறிது நேரம் சென்று நிதானம் பெற்ற போதுதான், தான் எடுத்துச் சென்ற கடிதத்தை, சாரங் கனே மனோஹர் என்பதை அறிந்த போது ஏற்பட்ட அதிர்ச்சியிலே அங்கேயே கை நழுவவிட்டதை உணர்ந்தாள். இன்பமும் துன்பமும் கலந்து வதைக்கத் தொடங்கின அவளை. 'அவர் என்ன நினைப்பாரோ!' என்ற சஞ்சலம் வாட்டி எடுத்தது. அந்தக் கடிதத்தை அவனிடமிருந்து திரும்பப் பெற்று விட வேண்டுமென்று துடியாய்த் துடித்தது அவள் உள்ளம். அது அத்தனை சுலபத்தில் நடைபெற்றுவிடக் கூடியதா? தேர்ந்த எழுத்தாளனாகிய அவன் அதைப் பத்திரப்படுத்திக்கொண்டு அதிலிருந்து எத்தனையோ வகை வகையான மனத் தத்துவக் கதைகளை வனைய எண்ணியதோடு நீலாவுக்கும் சரியான பாடம் கற்பிக்கவும் திட்டமிட்டான் என்பதை அவள் என்ன கண்டாள்?

உரிய காலத்தில் விமரிசையாகக் கல்யாணம் நடந்தது. நீலாவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. தம்பதிகள் தனிமை பெற்றபோது அவர்களிடையே முதலில் எழுந்த பேச்சு அந்தக் கடிதத்தைப் பற்றித்தான்.

"நான் என் நாவலில் எழுதியிருந்ததுபோல, முன்பின் அறியாத ஒருவனிடம் மனதைச் செலுத்தியது தவறு. இப்படி ஒரு கடிதத்தை எழுதியது அதைவிடத் தவறு...." என்றெல்லாம் அவள் மீது குற்றங்களை வரிசையாகச் சுமத்திக் கடைசியில், "தெய்வச் செயலாக உன் மனோஹரும் சாரங்கனும் ஒரே நபராக இருந்ததால் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் என்ன ஆகும்?" என்று ஒரு கேள்வியைப் போட்டான் சாரங்கன்.

"மெய்யன்பு என்பது தெய்விகமானதுதான்! அது எப்படித் தோல்வியுற முடியும்? அதற்குத் திருஷ்டாந்தம் வெளியிலே தேடவே வேண்டாமே! பிரபல எழுத்தாளராக இருந்தும் இது தெரியவில்லையே உங்களுக்கு!" என்று கூறிக் கலகலவென்று சிரித்தாள் நீலா. அந்தக் கிண்கிணிச் சிரிப்பிலே தெய்விக நாதத்தைக் கேட்ட சாரங்கன் அவளில் மயங்கி அசைவற்று நின்றான். அவன் அந்தராத்மா, 'மெய்யன்பு தெய்விகமானது' என்று இசைத்துக் கொண்டே இருந்தது.

கட்டுரையாளர்களுக்கு

வாழ்க்கையின் உண்மைகளைச் சித்தரிக்கும் சிறுகதைகள், சிறந்த கட்டுரைகள், நகைச் சுவைச் சித்திரங்கள், கருத்து நிறைந்த கவிதைகள் 'உமா'வில் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பிரசுரிக்கப்படும் விஷயங்களுக்கு அவசியம் அன்பளிப்பு அனுப்பப்படும்.

பிரசுரமாகாத விஷயங்கள் மூன்று வாரங்களுக்குள் திருப்பி அனுப்பப்படும்.

☆

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

மனிதன்

நாடக மேடையில் காரசாரமான விவாதத்துக்கு இலக்கான 'மனிதன்' இப்போது வெள்ளித் திரையில் காட்சியளிக்கிறான்.

"மனிதன் சந்தர்ப்ப வசத்தால் தான் தவறுகிறான். இந்தத் தவறுக்காக அவனை சமுதாயத்திலிருந்தே தள்ளி வைப்பதற்குப் பதில், மன்னித்து தவறை மறந்து, அவன் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தருபவன் தான் மனிதன்" என்பது கதையின் தத்துவம். இந்த தத்துவம் ஜாக்கிரதையாக கையாளப்பட்டிருக்கிறது.

தன் மனைவி சந்தர்ப்பக் கோளாறினால் தவறிவிட்டதை உணர்ந்து பெருந்தன்மையுடன் அவளை மன்னித்து தான் ஒரு மனிதன் என்பதை நிருபிக்கிறான் சுகுமார். மனைவி சாவித்திரியோ கணவன் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து தன் களங்கத்துக்கு மன்னிப்பே கிடையாது என்று தன் உயிரையே விட்டு தமிழகப் பெண்களின் பண்பைக் காப்பாற்றுகிறாள். ஆகவே கதையமைப்பில் இந்தப் பிரச்னையைப் பொருத்தவரை குறை காணவே முடியாது.

படத்தில் முக்கியமான பாத்திரமாக டி. கே. ஷண்முகம் தோன்றுகிறார். மிக சிரமப்பட்டு நடித்தும், ஆரம்பக் கட்டங்களில் அவர் நடிப்பு சோபிக்கவில்லை. ஆனால் பிற்பகுதியில் அவர் நடிப்பு நம்மைப் பிரமிக்க வைக்கிறது.

பகவதியின் நடிப்பு இப்படத்திற்கே சிகரம் வைத்ததுபோல் அமைந்திருக்கிறது. பாத்திரத்தின் தன்மை உணர்ந்து எல்லையைத் தாண்டாமல் மிக அற்புதமாக நடிக்கிறாள்.

மாதுரி தேவியின் நடிப்பு வழக்கம்போல நன்றாக இருந்தாலும் சில இடங்களில் மிகையாக இருக்கிறது.

சுகுமாரின் மனைவி சாவித்திரியாக நடிப்பவர் மிகவும் சிரமப்பட்டு நடித்திருக்கிறார். என்றாலும் பாஷை தெரியாத காரணத்தால் பல இடங்களில் இயற்கையாக இல்லை.

எஸ். ஏ. நடராஜன் மாதுரி தேவியின் தம்பியாக நடிப்பதைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. தம்பி வேடத்திற்கு தகுந்த ஒருவனைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

"பிரண்டு" ராமசாமி, ஒரு சிக்கலான கதாபாத்திரமாக வந்து சக்கைப்போடு போடுகிறார்.

பாடல்கள் கருத்து நிறைந்தனவாய் இருக்கின்றன. சில கவர்ச்சிகரமாகவும் ஒலிக்கின்றன.

நல்ல நடிகராக இருந்தாலும் தக்க டைரக்டரின் கைத்திறன் இல்லாவிட்டால் சோபிக்க முடியாது என்பதற்கு "மனிதன்" ஒரு நல்ல உதாரணம். இதற்கு முன் பல படங்களில் சோபிக்க முடியாத டி. கே. ஷண்முகம் இப்படத்தில் மக்கள் மனதில் நிற்கும் வண்ணம் சோபித்திருப்பதற்கு டைரக்டர் ராமநாத்தின் திறன் ஒரு காரணம் எனலாம். மற்றும் படத்தின் டைரக்ஷன் தமிழகத்தைப் பொருத்தவரை பிறர் பார்த்து பின்பற்றக்கூடிய விதத்தில் இருக்கிறது என்று துணிந்து கூறலாம்.

பொதுவாக "மனிதன்" மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய அம்சங்களைக் கொண்ட படம் என்பதில் சந்தேகமில்லை.

197198

ஜுபிடர் & லாவண்யாவின் 'மனிதனி'ல்

மாதுரி தேவி



Damodhar Envelope Factory

(State-Aided)

PIONEER MANUFACTURERS OF:

ENVELOPES, WRITING PADS, AEROGRAPHED EMBOSSED & DIE-STAMPED GREETING CARDS OFFICE FILES, LUGGAGE LABELS, PRICE-TICKETS, ACCOUNT BOOKS, NOTE BOOKS, Etc.

"BENHUR"

REGISTERED TRADE MARK

ALSO PRINTERS AND BINDERS

FACTORY:
"DAMODHAR HOUSE"
51, MAIN ROAD, ROYAPURAM
Telephone: 4469

OFFICE:
26, Thambu Chetty Street,
MADRAS-1
Telephone: 3403

கலப்பற்ற தனிக் கற்பூரத்திற்கும்
பில்லை உறுதிக்கும் உத்திரவாத
முள்ள ஜோதி கற்பூர பில்லை
களையே எப்பொழுதும்
உபயோகியுங்கள்.

தயாரிப்பவர் :

ஜோதி கற்பூரத் தொழிற்சாலை

உரிமையாளர் : ஆ. பொன்னுசாமி.

167, அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1.

இந்தியாவில் முதன் முதலாக
மிகச் சிறந்த முறையில்
தயாரித்த பௌன்டென்
பேனா இங்க்.

SOLE DISTRIBUTORS :

NATIONAL PRODUCTS SYNDICATE

'INK MANSION'

141, GOVINDAPPA NAICK STREET, MADRAS-1.

Grams : "PERMANANCY" Phone : 3189

சூரியன் மார்க் படுக்கையறை விளக்குகளையும் விளக்குத்திரிகளையும் இந்தியாவில் மிக அதிக அளவில் உற்பத்தி செய்பவர்கள்.



உற்பத்திசாலை :

26/27, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

சன்லாம்ப் இண்டஸ்ட்ரீஸ்

23, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1.

Estd : 1939

TRADE

MARK

Regd. No. 122117.

BREADS, BUNS, ICING ASSORTED AND FANCY CAKES

Our Special Varieties :

GLUCOSE BUTTER SALT, SWEET, BABY BARLEY & TORCH

SPECIAL WEDDING CAKES

and Almond Paste Ornaments Etc. Etc.,

RADHA BISCUIT FACTORY

Proprietor : T. P. G. SWAMY

161, MINT STREET, G. T. MADRAS.

Edited, Printed and Published by G. Umapathy, at the Uma Printers, 4/32, Thathamuthiappan Street, Madras-1 Phone : 2200.

Vummidiars
STAINLESS STEEL
HOUSEHOLD UTENSILS

You can buy them with utmost confidence for they are backed by Vummidiars' reputation for superfine workmanship.

VUMMIDIARS Stainless Steel

Use **SHINO**

CLEANING COMPOUND

IDEAL FOR CLEANING
SILVERWARE.
STAINLESS STEELWARE ETC.

6-2NA

VUMMIDIARS (MFRS.) LTD., MADRAS-2

Regd. No. M. UMA

Edited, Printed and Published by G. Umapathy, M. E. at the Uma Printers, 8/32, Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200.